Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 24 ரூபா 30.00

ஒக்ரோபர் 24 - 30, 2013

# வாரமலர் தினமுரசு




ஒய்வேது...

THINA SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 1037




## நிழல் முதல்வர் மாவை



## இடைத் தரகராகும் மதகுரு

இன்னொருவர் பார்வையில்

## இந்தியப் பிரதமராகும் கனவில் நரேந்திர மோடி



சூடு - சுவை - சுவாரசியம் - அதுதான் தினமுரசு

## ஓம் விளக்கேற்றும் பலன்கள் என்ன?

காலை 6 மணி முதல் 7 மணிவரை வீட்டில் தீபம் ஏற்றுவது சர்வமங்கள யோகம் தரும். ஒவ்வொரு மாதத்திலும் வரும் பௌர்ணமியன்று திருவிளக்கேற்றி வழிபடுவதன் மூலம் சிறப்பான பலன்கள் ஏற்படும் என்று முன்னோர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

சித்திரை மாத பௌர்ணமியன்று விளக்கேற்றினால் தான்யம் பெருமளவில் கிடைக்கும். வைகாசி மாத பௌர்ணமியன்று விளக்கேற்றினால் விவாகப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும். ஆனி மாத பௌர்ணமியன்று விளக்கேற்றினால் புத்திரபாக்கியம் ஏற்படும்.

புரட்டாசிமாத பௌர்ணமியன்று விளக்கேற்றினால் பசுக்கள் விருத்தியாகும். ஐப்பசிமாத பௌர்ணமியன்று விளக்கேற்றினால் பசிப்பிணிகள் நம்மைவிட்டு அகலும். கார்த்திகைமாத பௌர்ணமியன்று விளக்கேற்றினால் ஐஸ்வரியம் பெருகும், நிலைத்த புகழ் ஏற்படும்.

மார்கழிமாத பௌர்ணமியன்று விளக்கேற்றினால் துன்பம் அகலும். இன்பங்கள் வந்துசேரும். பங்குனிமாத பௌர்ணமியன்று விளக்கேற்றினால் தர்மபுண்ணிய சிந்தனைகள் அதிகரிக்கும்.

## ஆன்மீகம்

## உயர்த்தப்பட்டு... உயர்வடைவாய்

சிலுவை என்றவுடன் பலருக்கு துன்பம், வேதனை, பாடுகள், கண்ணீர், கவலைதான் உடனே கவனத்திற்கு வரும். ஆனால், நம் ஆண்டவர் இயேசு, மனித வரலாற்றின் அவமானச் சின்னமாக, கொலைக்கருவியாக இருந்த சிலுவையைத் தம் பாடுகள், மரணத்தால் வாழ்வின் சின்னமாக, வெற்றியின் கருவியாக மாற்றியதை உலகமே உணரும்.

சிலுவை, நம் இறைவன், விண்ணையும் மண்ணையும் இணைக்க பயன்படுத்தியது. மனிதனையும் இறைவனையும் இணைப்பது. பாவத்தின் பரிகாரம். அருளின் ஊற்று. தோல்வியின் அஸ்தமனம். வெற்றியின் உதயம். சாவின் சங்கொலி. உயிர்ப்பின் எக்காளம். பொய்மை அநீதி, ஆணவம், அதிகாரம் இவற்றின் இயலாமை. உண்மை, நீதி, பணிவு, அடக்கம் இவற்றின் வல்லமை.

இச்சிலுவையில். இயேசு உயர்த்தப்பட்டபோதுதான் அன்பு, தியாகம், தாழ்ச்சி இவற்றின் உண்மைமுகம் உலகுக்கு உயர்த்தி காண்பிக்கப்பட்டது. "தம் ஒரே மகன்மீது நம்பிக்கைகொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்." (யோவா 3'16)

## அல்லாஹ்வை வணங்குங்கள்

அல்லாஹ்வின் படைப்பினங்களில் சிறப்புடையவை மனிதன். இம்மனுக்குலம் தான் உருவாக்கிய உருவகங்களுக்கு வணக்கம் செலுத்தலாமா? அல்லாஹ் ஒருவனே வணக்கத்துக்கு உரியவனென தித்திக்கும் திருமறையில் அல்லாஹ் கூறியுள்ளான். அதனை அவதானியுங்கள் இங்கே!


படைப்புக்கள் அனைத்திலும் மேம்பாடு உடையவர்களாக உங்களை ஆக்கி வைத்திருக்கும்நிலையில், அல்லாஹ் அல்லாத ஒன்றை அல்லது ஒருவனை உங்களது வணக்கத்துக்கு உரியதாக -உரியவனாக நான் ஆக்கிவைப்பேனா!

இவ்வாறு மனுக்குலத்தை செப்புகின்ற அல்லாஹ் இன்னும் இம்மனிதனின் சிறப்புக்கு சான்றாக இதர படைப்பினங்கள் எவ்வாறு இவனுக்கு பயன்படும்படியாக ஆக்கப்பட்டுள்ளது என்பதையும் குர்ஆனில் கூறியுள்ளான்.

அல்லாஹ் பெருங்கடலையும் உங்களுக்கு வசதியாக அமைத்திருக்கிறான். இன்னும் வானங்களிலும் பூமியிலுள்ள யாவையும் உங்கள் நன்மைக்காக உங்களுக்கு வசப்படுத்தித் தந்திருக்கிறான். அல்குர்ஆன் -45:12-13.

எம்.சி.கலீல், கல்முனை-05

## கவிதைப்போட்டி இல 1034



## நவீனத்துவமும் நாமும்...


பாராட்டுக்குரியது

போதை
வீதியில் விழுத்தினாலும்
காலத்தின் கட்டாயத்
தேவை
கையடக்கத்
தொலைபேசி எனும்
நவீனத்துவத்தின்
நல்லதோர்
புகைப்படக் காட்சியும்
இன்றைய சமூகத்தின்
இழிவுக் காட்சியும்
தெளிவு படுத்தும்
விபரக்கண்ணாடி.

A'.பாரிஸ்,
மிகிந்தலை.




## கவிதைப் போட்டி இல 1037



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவுசெய்து அனுப்பி வையுங்கள். அனுப்பவேண்டிய கடைசித் திகதி 28. 10. 2013

கவிதைப் போட்டி இல. 1037 தினமுரசு வாரமலர், த.பெ.இல. 167, யாழ்ப்பாணம்.
இல. 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

### காப்பாற்று

எங்கே இருக்கின்றோம்
எப்படி இருக்கின்றோம்
என்ன செய்கிறோம்
எதற்காக வாழ்கின்றோம்
என்ற நிலைகூடத்
தெரியாமல் தொல்லை
தரும் தொலைபேசியால்
மூழ்கிறக்கும் - இவனை
கடவுள்தான்
காப்பாற்றவேண்டும்.

யோ.சறோ,
கரணவாய் மேற்கு.

### ஏமாற்றாதே...

ஓட்டத் தெரியாமல்
ஓட்டி - வண்டியோடு
சறுக்கி விழுந்த பின்னும்
'மீசையில் மண் ஒட்டவில்லை'
எனக் கர்வமுடன் கிடப்பது
யாரை ஏமாற்ற...

அ.சந்தியாகோ, கண்டி.

### எடுப்பான தோற்றம்

மாதச் சம்பளம் கிடைத்தால்
மதுக்கடைப் பக்கம்
எடுப்பான தோற்றத்திற்கு
இதுவேறா மாஸ்டர்?
குடிபோதையில் நீ
குடைசாய்ந்து கிடக்குமிடம்
வீதிப் போக்குவரத்து
வீதியை மீறும் செயல்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

### புதிய போன்

ஸ்கூட்டரை ஓரம் கட்ட நேரமில்லை
ஓரமாய் நிற்க முடியவில்லை
வழியிலே போட்டுவிட்டு
வசதியாக பேசுகிறேன்
ஏன்? என்றால் இது புதிய போன்!

E.டினோராஜ், யாழ்ப்பாணம்.

### அபிவிருத்தி

வீதிகளும், பாலங்களும்
அபிவிருத்தி நடக்குது!
அபிவிருத்தி
அடையாத எங்கள் வாழ்க்கையோ
வீதியில் நடக்குது!

த.நகுலேஸ்வரன், மட்டக்களப்பு.

## உங்கள் பக்கம்

### தனியார் வங்கியின் அவசியம்

இறுதிக்கட்ட யுத்தத்தில் அழிவின் உச்சத்தைத் தொட்ட பிரதேசங்களுள் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பும் ஒன்றாகும். குறித்த யுத்தத்தில் அனைத்தையும் இழந்து உடுத்த உடுப்புடன் சிதறி ஓடிய புதுக்குடியிருப்பு மக்கள் இப்பொழுது மீள்குடியமர்த்தப்பட்டு இருக்கின்றனர். தமது பூர்வீக இடங்களில் மீண்டும் தமது வாழ்வை கட்டியெழுப்புவதற்காக ஒவ்வொருவரும் தங்களது வலுவுக்கேற்ற வகையில் முயற்சித்துக் கொண்டிருப்பதைக் காணலாம்.

இந்நிலையில் அரச, தனியார் நிறுவனங்கள் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் தமது செயற்பாடுகளை மீள ஆரம்பித்துக் கொண்டிருக்கின்றன. அதேபோன்று அரச வங்கிகளும் தமது செயற்பாடுகளைச் சிறப்பாக ஆரம்பித்திருக்கின்றன.

இருந்தபோதிலும் கவர்ச்சியான சலுகைகளினால் மக்களின் ஆர்வத்தை இழுத்து வைத்திருக்கின்ற தனியார் வங்கிகள் இன்னும் புதுக்குடியிருப்பு பக்கம் தமது கவனத்தைத் திருப்பாமல் இருப்பது அப்பிரதேச மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்துவதாகக் குற்றச்சாட்டுக்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இதுதொடர்பில் குறித்த வங்கியின் உயரதிகாரிகள் கவனத்தைச் செலுத்தவேண்டும், என்பதே புதுக்குடியிருப்பு மக்களின் சார்பில் எனது வேண்டுகோளாகும்.

எஸ்.நவரட்ணம்,
புதுக்குடியிருப்பு.


மடல்கள் மற்றும்
ஆக்கங்கள் உட்பட சகல
தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:- 167,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி :-0212223628
தொலைநகல்
(Fax): 0212221811
ஈமெயில்:
(E-mail):-
thinamurasu@live.com


## பிரசவிப்புக்கள் அற்புதம்

அழகிய பதிப்பில் அமைதியாக வெளிவந்து அனைத்து உள்ளங்களையும் வென்று. இல்லங்களை அலங்கரிக்கும் முரசு உனக்கு நின்வரவு நல்வரவு ஆகட்டும் என்று வாழ்த்தும் இவ்வேளை,

உணவுக்கு உப்பு எப்படி முற்படியோ, அப்படியே பத்திரிகை அதற்கு கவிதை, கட்டுரை முதற்படி. அதையுணர்ந்த நீ அதற்காய் செய்யும் சேவை அளப்பரியது. எத்தனையோ கவிஞர், கவிதாயினிகள் எழுத்தார்வத்துக்குக் களம்கொடுத்து வளர்த்திட்ட பெருமையும் உனைச்சேரும். வாழ்த்துக்கள். எந்தன் கவிதைகள், சிறுகதைகள் பிரசவிப்பின் தரவுக்காய், நன்றிகள் பலதை கூறிக்கொள்வதுடன், இன்னும் இன்னும் நீடு இவ்விதழ் வாழ்ந்து - வளர்ந்து செழிக்க வாழ்த்துகின்றேன்!

அப்ரார் ஏ-அஸீஸ், யாழ்ப்பாணம்.

## வாசகர் சாலை

### முரசுக்கு முழு 'மதி'

இடி அமீன் தொடர்கதையைத் தொடர்ச்சியாக வாசித்துவருகின்றேன். தொடர்கதை. இடி அமீனை மட்டுமா இங்கு குறிப்பிடுகிறது. அதனை அப்போது எழுதிய அற்புதனின் திறமையும் அல்லவா அங்கு வெளிப்படுத்துகிறது.

இடி அமீன் அதிர் இடி அங்கம் உண்மைத் தொடர் ஒவ்வொன்றும் உள்ளத்தை புல்லரிக்க வைக்கிறது. வாசகர்கள் வாசிக்கிறார்கள். யோசிக்கிறார்கள். தொடர் தொடரட்டும். முரசுக்கு முழு'மதி' இடி அமீன் தொடர்கதை.

எம்.சி.கலீல், கல்முனை -05.

## காலத்தின் தேவை

எங்கள் அபிமான முரசு விதம்விதமான கட்டுரைகளை தாங்கிவந்து எமக்கு இதமளிக்கின்றது. அவற்றுள் சில மனதைக் கலங்கடிக்கவும் செய்கின்றது.

அந்தவகையில் முரசின் 5ஆம் பக்கத்தில் வெளியாகின்ற முன்னாள் போராளிகளின் இந்நாள் கதைகள் கண்களை நனைத்து நிற்கின்றன.

ஒரு காலத்தில் தலையில் வைத்து கொண்டாடப்பட்டவர்கள் இன்று கால்கள் மிதிக்கப்படும் நிலை ஏற்பட்டமைக்கு பொறுப்பானவர்கள் தொடர்ந்தும் பொறுப்பற்ற தனமாய் நடந்துகொள்வது வேதனையளிக்கின்றது.

சரி, பிழைகளுக்கு அப்பால் முன்னாள் போராளிகளாகக் களத்தில் நின்றவர்களின் இன்றையநிலைக்கு தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் பொறுப்புடையவர்களே.

அந்தவகையில் அவர்களின் எதிர்காலத்திற்கும், சந்ததியின் வளமான வாழ்விற்கும் ஒவ்வொருவரும் தங்களின் பங்களிப்பை வழங்கவேண்டியது காலத்தின் தேவையாகும்.

எம்.அபிமன்யு, கந்தளாய்.

# நேர்த்தியான ஒழுங்குபடுத்தலின் வெற்றியே கிளிநொச்சியின் கல்வி வளர்ச்சி



## பாராளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார்

**ஒவ்வொரு வெற்றிக்குப் பின்னாலும் மிகக் கடுமையான உழைப்பும் அர்ப்பணிப்பும் தங்கியிருக்கின்றது என்றே கிளிநொச்சி மாவட்டத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான பாராட்டு விழாவில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.**

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், இன்று கிளிநொச்சி மாவட்டத்தின் வரலாற்றில் முக்கியமான நாள். மீள்குடியேற்றத்தின் பின்னர் இம் மாவட்டம் கல்வித்துறையில் துரித வேகத்தில் பயணித்துக்கொண்டிருப்பதை நிரூபணமாக்கியிருக்கின்ற நாள்.

மீள்குடியேற்றத்தின் பின்னர் கல்வித்துறையின் அபிவிருத்தியில் காட்டப்பட்டு வருகின்ற ஆர்வம், கல்வித்துறை மேம்பாட்டுக்கான திட்டமிட்ட செயற்பாடுகள், பெற்றோர், ஆசிரியர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவைகள், பெற்றோரின் அக்கறை போன்ற கூட்டுமுயற்சியின் வெளிப்பாடுதான் கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வளர்ச்சி வேகம் என்பதைக் குறிப்பிட முடியும்.

இங்கு உருவாகியிருக்கும் இந்தச் சூழலை எமது சமூகத்தின் மேம்பாடு சார்ந்த தூரநோக்குச் சிந்தனையுடன் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். அந்தச் சிந்தனைக்கு அமைவாகவே நாம் கடந்த காலங்களில் கல்விச் செயற்பாட்டை நகர்த்தி, இதற்காக கல்வித்துறை சார்ந்த ஆர்வம்மிக்க அனைவரினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டோம். இவ்வாறான ஒழுங்குபடுத்தலின் வெற்றியையே பரீட்சை பெறுபேறுகளாகக் கண்டுவருகின்றோம்.

இதுபோன்ற நேர்த்தியான அணுகுமுறைகள் தொடர்ந்தும் கையாளப்பட வேண்டும் என்பதே எமது நோக்கம் என்று தெரிவித்தார்.

## பதவி உயர்வு இன்றேல் வேலைநிறுத்தம்!

ஆசிரியர்களின் பதவியுயர்வு தொடர்பான உறுதியான நடவடிக்கைகளை அரசாங்கம் அல்லது கல்வி அமைச்சு மேற்கொள்ளாதுவிடின் பாரிய தொழிற்சங்க போராட்டத்தினை முன்னெடுக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கான பதவியுயர்வினை வழங்கக்கோரி பல தொழிற்சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்த நிலையிலும் கல்வி அமைச்சும் அரசாங்கமும் இதுவரையிலும் எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

இவ்வாறு இருக்கும் பட்சத்தில், அரசாங்கத்தினால் 2014ஆம் ஆண்டிற்கான வரவுசெலவு திட்டம் எதிர்வரும் நவம்பர் மாதம் வெளியிடப்படவுள்ளது. இந்நிலையில், வரவு செலவுத்திட்டத்தினை வெளியிடுவதற்கு முன்னர் ஆசிரியர்களுக்கான பதவியுயர்வினை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் வழங்குவதாக உறுதியளிக்க வேண்டும். அவ்வாறு உறுதியளிக்கத் தவறும்பட்சத்தில், இலங்கையிலுள்ள தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒன்றிணைந்து பாரிய தொழிற்சங்க போராட்டத்தினை முன்னெடுக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# பிஞ்சு உள்ளங்களை நோகவைத்த சிறுவர் தினம்

**ஏ.எச்.ஏ.ஹுசைன்**

அந்தச் சிறுவர்கள் எல்லாம் காலையில் புன்னகை பூத்தமுகத்துடன், ஒருவருக்கொருவர் மாலை அணிவித்து, இனிப்புப் பண்டங்கள் பரிமாறி சிறுவர் தின நிகழ்வில் மகிழ்வுடன் பங்கேற்றுக்கொண்டிருந்தனர்.

ஆனால் பின்னர் சற்று நேரத்திற்கெல்லாம் தேம்பித்தேம்பி அழ ஆரம்பித்தார்கள்.

இது ஒக்ரோபர் முதலாம் திகதி சர்வதேச சிறுவர் தினத்தன்று இடம்பெற்ற இரு வேறுபாடான உள்ளத்தை நெகிழவைக்கும் நிகழ்வுகளாகும். ஐந்தாம் தரத்தில் கற்கும் புலமைப்பரிசில் பரீட்சை எழுதிய மாணவர்களே இவ்வாறு இருவேறுபட்ட சூழ்நிலைக்குள் சிக்கிக் கொண்டவர்களாகும்.

இம்முறை வழமைக்கு மாறாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் சர்வதேச சிறுவர் தினத்தன்று ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் தேர்வு எழுதிய மாணவர்களின் பரீட்சை முடிவுகளை வெற்றிகரமாக வெளியிட்டு வைத்தது.

இதுவே இந்தப் பிஞ்சு உள்ளங்கள் முன்னராக சர்வதேச சிறுவர் தினத்தைக் கொண்டாடி குதூகலித்ததற்கும் பின்னர் தேம்பித் தேம்பி அழுததற்கும் காரணமாகும்.

இந்த ஆண்டிலிருந்து வருடந்தோறும் ஒக்டோபர் முதலாம் திகதி உலக சிறுவர் தினத்தில் தரம்-5 இன் புலமைப் பரிசில் பெறுபேறுகள் வெளியிடப்படல் வேண்டும், என்ற கல்வி அமைச்சினதும், கல்வி அமைச்சரினதும் அறிவுறுத்தலுக்கமைய கடந்த ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி நடத்தப்பட்ட புலமைப்பரிசில் பரீட்சையின் விடைத்தாள்கள் செப்டெம்பருக்குள் திருத்தி முடிக்கப்பட்டு, 37 ஆவது நாளில் பெறுபேறு வெளியிடப்பட்டது.

பரீட்சைக்குத் தோற்றிய 3,22,455 மாணவர்களுள் 32,607 சிறுவர் சிறுமியர் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் தேர்ச்சிபெற்றுள்ளனர்.

இதுதவிர 70 புள்ளிகளிலிருந்து வெட்டுப் புள்ளி வரைக்கும் 1,91,301 பேரும், 70 புள்ளிகளுக்குக்கீழ் 98,547 பேரும் புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

இலங்கை கல்வி வரலாற்றில் இலவசக் கல்வியின் தந்தை கலாநிதி சி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கரா அவர்களால் ஏழை எளிய, அதேவேளை திறமைமிக்க மாணவர்களின் வாழ்வில் ஒளியேற்றவே இந்த இலவசக் கல்வித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த புலமைப்பரிசில் திட்டம் வசதி குறைந்த மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்குவதற்கும், திறமையான மாணவர்களை பிரசித்திபெற்ற பாடசாலைகளில் அனுமதிப்பதற்குமான ஏற்பாடுகளுடன் 1952இல் அறிமுகப்படுத்தப்பட்டது.

அதன்மூலம் தற்போது 15 ஆயிரம் மாணவர்கள் ஆண்டொன்றுக்கு 5,000 ரூபா வரை புலமைப்பரிசில் கொடுப்பனவைப் பெற்று நன்மையடைகின்றார்கள்.

இம்முறை வயதுக்கட்டுப்பாடின்றி, குறித்த வகுப்பில் கற்கும் அனைத்து மாணவர்களும் இப்பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பட்டார்கள் என்பது இன்னொரு பக்கத்தில் மகிழ்ச்சியான விடயம்.

இம்முறை சர்வதேச சிறுவர் தினத்தில் வெளியிடப்பட்ட இந்தப் பரீட்சைப் பெறுபேறு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி ஆர்வலர்கள் ஆகியோர் மத்தியில் பெருந்தாக்கத்தையும் பரபரப்பையும் ஏற்படுத்தி விட்டுச்சென்றுள்ளது.

பெறுபேறு வெளியானதைத் தொடர்ந்து இடம்பெற்றுவரும் சம்பவங்கள் இதற்குத்தக்க சான்றாகும். புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் வெளியானவுடன் அதனைப்பார்த்து விட்டு தேர்ச்சிபெற்ற மாணவர்களும், தேர்ச்சிபெறாத மாணவர்களும் அழுததைக் காணக்கூடியதாக இருந்தது.

அதேவேளை பெற்றோரும் அழுதனர். கற்பித்துக்கொடுத்த ஆசிரியர்களும் அழுதனர். போதாக்குறைக்கு சிறுவர்தின நிகழ்வுக்கு வந்திருந்தவர்களும் அழுது கண்ணீர் வடித்தனர்.

அநேக பாடசாலைகளில் இப்படியானதொரு சோக நிகழ்வு சர்வதேச சிறுவர் தினத்தன்று இடம்பெற்றது.

மொனராகலை கும்புக்கன பகுதிப் பாடசாலையொன்றின் மாணவியால் 128 புள்ளிகளைத்தான் பெறமுடிந்தது.

அவள்பெற்ற புள்ளி, வெட்டுப்புள்ளியை எட்டாமையினால் கோபமடைந்த அவளது பெற்றோர், சிறுமியைத் திட்டித்தீர்த்ததுடன் வீட்டைவிட்டும் விரட்டியடித்துள்ளர்.

பெற்றோரால் விரட்டப்பட்ட சிறுமி நண்பியிடம் போய் தங்கியிருந்த நிலையில், பெற்றோர் அதிபரால் அழைக்கப்பட்டு, சிறுவர்களின் மனநிலைக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் பெற்றோர்கள் பிள்ளைகளிடத்தில் நடந்துகொள்ளக்கூடாது என்று அறிவுறுத்தப்பட்டு சிறுமி வீட்டுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார்.

இதுபோல், பொகவந்தலாவ பகுதி, தமிழ் வித்தியாலயமொன்றில் கல்வி கற்றுவரும் மாணவன், இப்பரீட்சையில் 92 என்ற குறைந்த புள்ளிகளைப் பெற்றமைக்காக, தந்தை இரும்புக்கம்பியால் சூடுவைத்த சம்பவமும் இடம்பெற்றுள்ளது.

தந்தையால் முகத்திலும் காலிலும் வைத்த சூடு தாங்கமுடியாது சிறுவன் அலறியசத்தம் கேட்டு, அயலவர்கள் பொலிஸாரிடம் செய்த முறைப்பாட்டையடுத்து, பொலிஸாரால் தந்தை கைதுசெய்யப்பட்டார். காயமடைந்த சிறுவன் வைத்தியசாலையில் .சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இப்படி இன்னும் பல சம்பவங்கள் நாடு பூராகவும் இடம்பெற்றுள்ளன.

இதேவேளை, தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் அநேகர், அதிகரித்த மனஅழுத்த உபாதைகளுக்கு உள்ளாகிவருவதாக பிரபல நரம்பியல் வைத்திய நிபுணர் டாக்டர் அனுருத்த யாதெனிய தெரிவித்துள்ளார்.

இப்பரீட்சையின் தேர்ச்சி, பெற்றோர்களின் கௌரவப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளமையே இந்நிலைமைக்குப் பிரதான காரணம் எனவும் அவர் சுட்டிக்காட்டி இருக்கின்றார்.

பெற்றோர்களும், பாடசாலை ஆசிரியர்களும், தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள்மீது, அதன் தேர்ச்சி தொடர்பில் செலுத்தும் அளவுகடந்த ஆதிக்கமே, மாணவர்களின் இத்தகைய மன அழுத்தம் மற்றும் அதிகரித்த தலைவலி போன்ற உபாதைகளுக்கு காரணம் எனவும், இதுதொடர்பில் அறிவுபூர்வமாகச் சிந்தித்து செயற்பட வேண்டியது பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறை அதிகாரிகள் மீதான கட்டாயக் கடமை எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் இயல்பாகச் சிந்தித்து செயற்படும் நிலைக்கு அவர்களைத் தயார்ப்படுத்தவேண்டும் என்பது அவரது ஆலோசனையாகும்.

பணம் சம்பாதிக்கும் தொழிலாகவும் கௌரவப் பிரச்சினையாகவும் உருவெடுத்துள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையின் கட்டமைப்பு மற்றும் நோக்கம் முதலானவை மாற்றம் பெறவேண்டியது அவசியம் எனவும் அவர் மேலும் வலியுறுத்தியுள்ளார்.

சிறுவர்கள் சந்தோசமாகக் கொண்டாடும் சர்வதேச சிறுவர் தினத்தில் புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதானது தேர்ச்சியடையாத சிறுவர்களின் உள்ளத்தை கடுமையாகப் பாதிப்பதோடு, கற்பித்த ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களையும் உளவியல்ரீதியாகப் பாதிப்பதாகவும் உள்ளது.

எனவேதான், சர்வதேச சிறுவர் தினத்தில் பிஞ்சு உள்ளங்களைப் பாதிக்கச்செய்யும் வகையில், பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதைத் தவிர்க்கவேண்டும் எனப் பெற்றோர், ஆசிரியர் மற்றும் மாணவர்கள் சமூகவியலாளர்கள் என எல்லாத் தரப்பினரும் ஏகோபித்த கருத்தைத் தெரிவித்துள்ளது ஒரு நல்ல சமிக்ஞை என்றே தோன்றுகின்றது. பிஞ்சு உள்ளங்கள் நொந்து போய்விடாமல் இருக்க இது வழிசமைக்கும். அடுத்துவரும் சர்வதேச சிறுவர் தினம் அனைத்து சிறுவர்களையும் மகிழ்ச்சியூட்டவேண்டும்.

வாரமலர்
# தினமுரசு

த.பெ.இல:- 167, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: -021 222 3628
தொலைநகல் (Fax):- 021 222 1811
ஈ-மெயில் (E-mail):-
thinamurasu@live.com

## முரசம்

வாசகர்களுக்கு வணக்கம்!

## பெருமைமிகு ஆரம்பம்!!

இம்மாதம் இருபத்து ஐந்தாம் திகதி வடக்கு தமிழ் மக்களின் வரலாற்றில் முக்கியமான நாளாக பதிவு செய்யப் படுகின்றது. வடக்கு மாகாண சபைக்கான நிர்வாகக் கட்டடத் தொகுதி திறந்து வைக்கின்றனர்.

அதைத் தொடர்ந்து வட மாகாண சபைக்கு தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள் முதன்முதலாக தமது சபை செயற்பாடுகளை ஆரம்பித்து கன்னி உரைகளை ஆற்றவுள்ளனர்.

1989ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர் சிதைக்கப்பட்டிருந்த தமிழ் மக்களின் அரசியல் ஜனநாயகத் தளத்தை 1994ஆம் ஆண்டு துரோகிப் பட்டத்தையும், துப்பாக்கிச் சூடுகளையும், குண்டுத் தாக்குதல்களையும் தாங்கிக்கொண்டு பாராளுமன்றத் தேர்தலை நடத்தும்படி அரசை வற்புறுத்தி அதில் போட்டியிட்ட ஈ.பி.டி.பி.யினர், மீண்டும் வடக்கின் அரசியல்தளத்தை செப்பனிட்டார்கள்.

இப்போது பல கட்சிகள் போட்டியிடக் கூடிய ஜனநாயகச் சூழல் வடக்கில் தோற்றம் பெற்றுள்ளதும், பல தேர்தல்கள் நடந்துமுடிந்துள்ளதும் தமிழ் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியது. ஈ.பி.டி.பி.யின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இருபது வருடங்களுக்கும் மேலாக தனது கனவாகக் கூறிவந்த வடக்கு மாகாண சபைக்கான தேர்தலும் நடைபெற்று அதற்கான நிர்வாக கட்டடத் தொகுதி திறந்து வைக்கப்படுகின்றது.

இதை, தமது அரசியல் வெற்றிகளில் ஒன்றாகவே ஈ.பி.டி.பி. யினர் கருதுகின்றனர்.

"மாகாண சபை முறைமையை தமிழ் மக்கள் தும்புத்தடியாலும் தொட்டுப்பார்க்க மாட்டார்கள்" என்று பாராளுமன்றத்தில் வாய்வீரம் பேசிய தற்போதைய கூட்டமைப்பின் தலைவர் சம்மந்தன் அணியினரே இப்போது மாகாண சபை அதிகார மையங்களை சகாக்களுடன் பங்கு போட்டுக் கொண்டு மாகாணப் பொறுப்பை தலையில் சுமந்துள்ளார்கள் என்று விமர்சிப்பவர்கள் தற்போதைய அரசியல் மாற்றங்களை மனதில் கொள்ளவேண்டும்.

அர்த்தமற்ற விமர்சனங்களை முன்வைப்பதும், முதலமைச்சரின் மூக்கணாங்கயிறு தமது கையிலேயே இறுக்கப்பிடியாக இருக்கவேண்டுமென்று நிழலாக அலைவதும், ஆளும் கட்சி, எதிர்க்கட்சி எனும் காழ்ப்புணர்வுகள் பாராட்ட முற்படுவதும், மாகாண சபையை தமிழ் மக்களின் அரசியல் இலக்கு நோக்கிச் செலுத்தும் பணியை முடக்கிப்போடுவதற்கே வழிவகுக்கும் என்பதை எவரும் மறந்துவிடக்கூடாது.

மாகாண சபை தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்கு தீர்வாக அமையாது. ஆனால் நல்ல ஆரம்பமாக மாகாண சபை இருக்கும். அதற்கான அனைத்து வாய்ப்புக்களையும் நாமே பயன்படுத்தவேண்டும். அதைவிடுத்து, அரசையும், அதிகாரிகளையும், ஏனைய சாக்குப்போக்குகளையும் கூறிக்கொண்டிருப்பதானது, "ஆடத் தெரியாதவன் மேடை சரியல்லை" என்ற கதையாகத்தான் அமையும்.

நல்ல ஆரம்பம் இது. இந்தப் பயணத்தை சரியான திசைவழி நோக்கி செலுத்துவதற்கு, பதவி, கட்சிபேதம், காழ்ப்புணர்வுகள் கடந்து ஒவ்வொருவரும் தமது பங்களிப்பை வழங்கவேண்டும்.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# தலையெடுக்கும் அநாகரிகம்

**"யுத்தத்தின் பிடியிலிருந்து மீண்டுவெளியில் வந்து உலகைத் தரிசிக்கும் மக்கள் இப்போது மற்றையவர்கள் போன்று நாமும் விரைவாகப் பெரியளவான பணக்காரர்களாக மாறவேண்டும் என்ற கனவை இந்த நிதி நிறுவனங்கள் வழங்கும் கடன் பணம் நனவாக்கித் தரும் என்றே நம்பிக்கொள்கின்றனர். ஆசைவார்த்தைகளுக்கு மயங்கி தம்மையும் பாழாக்கி தமது குடும்பங்களையும் வீணாக்கிக் கொள்ள மக்கள் துணிந்துவிடும் நிலை ஏற்பட்டுவருகிறது."**

பிரகஸ்பதி

மட்டக்களப்பைப் பொறுத்த வரையில், அண்மைக்காலமாக சுயதொழில் மற்றும் ஏனைய தேவைகளுக்காகவும், தொழில் முயற்சிகளுக்காகவும் கடன்களைப் பெற்றவர்களை கடன் வழங்கிய நிறுவனங்கள் துன்புறுத்தி வருகின்றமை தொடர்பில் பரவலான குற்றச்சாட்டுக்கள் வந்தவண்ணம் இருக்கின்றன.

அந்தவகையில், இக் கட்டுரை மட்டக்களப்பு மாவட்டத்தில் நுண்கடன், வழங்கும் நிறுவனங்கள் தொடர்பிலும் அவற்றினால் ஏற்பட்டுவரும் உரிமைப் பிரச்சினைகள், பின்விளைவுகள் குறித்து ஆராய்கிறது.

கடந்த மாதம் 30ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் மாதாந்தக் கூட்டத்தில், உரையாற்றிய வ.கமலதாஸ் மட்டக்களப்பு மாவட்டத்தில் நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் கடனை வழங்கிவிட்டு கடனை செலுத்த தாமதிக்கும் பெண்களிடம் அந்த நிறுவன அதிகாரிகள் பாலியல் ரீதியாக கடனுக்கு பதிலை தருமாறு கோருவதாகத் தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்தினையடுத்து ஒரு பிரளயம் போன்றதொரு நிலைப்பாடு ஏற்பட ஆரம்பித்திருந்தது. ஆனாலும், அவற்றுக்கான நேரடியான ஆதாரங்களை திரட்டிக் கொள்வதில் விசாரணை செய்யும் எல்லோருமே சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்றே கூறவேண்டும்.

இந்த நுண்கடன் நிறுவனங்களின் செயற்பாடுகளால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வருகின்றமை தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் சில கருத்துக்களை வெளியிட்டிருந்த நிலையில், கமலதாஸ் இவ்வாறான கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

இரண்டுபேருடைய கருத்துகளுக்கும் தொடர்ச்சி என்கிற உறவு எதுவும் இல்லையானாலும், இரண்டும் ஒன்றுக்கொன்று இணைவானவையே. என்றவகையில், இந்த நடவடிக்கை உடனடியாக தடுத்துநிறுத்தப்படல் வேண்டுமென்ற தீர்மானத்தினை மட்டக்களப்பு மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமான இணையத்தின் கூட்டத்தில் இணையத்தின் தலைவர் வி.கமலதாஸ் நிறைவேற்றியிருந்தார்.

இந்த விடயம் தொடர்பில் நேரடியாக வினவியபோது கருத்து வெளியிட்ட அவர், மட்டக்களப்பு மாவட்டத்தில் சுயதொழிலுக்காக நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் கடனை வழங்கிவிட்டு கடனை செலுத்த தாமதிக்கும் பெண்களிடம் அந்த நிறுவன அதிகாரிகள் பாலியல் ரீதியாக கடனுக்கு பதிலை தருமாறு கோருவதாகவும் சுட்டிக் காட்டப்பட்டது.

இவ்வாறான இந்த நுண் கடன் வழங்கும் நிறுவனங்களினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் மீள்குடியேற்ற பிரதேசங்கள் உட்பட பல பகுதிகளில் பெண்கள் கடும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறான நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள் மற்றும் லீசிங் நிறுவனங்கள் இந்த பகுதியிலுள்ள பெண்களுக்கு சுயதொழிலுக்காக கடன்களை அதிகவீத வட்டிக்கு வழங்கிவிட்டு தாமதிக்கும் பட்சத்தில் அந்த பெண்களிடம் பாலியல் ரீதியான பதிலை எதிர்பார்ப்பதாகவும், இதனால் கணவன் - மனைவிக்கிடையில் குடும்ப வன்முறை ஏற்பட்டு வருவதாகவும் தற்கொலை இடம்பெறுவதற்கும் இது காரணமாக அமைவதாகவும் இந்த கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது.

உடனடியாக இதனை தடுத்துநிறுத்த அனைவரும் முன்வரவேண்டுமென இதன்போது தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அத்தோடு மீள்குடியேற்றப் பிரதேசங்களில் திட்டமிட்ட குடியேற்றங்கள் இனஉறவை பாதிக்கும் என்பதால் இதில் அதிகாரிகள் கவனம்செலுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

அதேநேரத்தில், வவுணதீவில் ஒரு சம்பவம், இரவு பத்துமணிக்கு தனது மனைவியிடம், கடன் அறவிடுவதற்காக வந்த பிரதிநிதி பலவாறுபேசிக் கொண்டிருப்பதனை கேட்டுக் கொண்டிருக்க முடியாத கணவன் இரும்புத்தடியை எடுத்துக்கொண்டு அடிப்பதற்காகத் துரத்திய சம்பவம் ஒன்று நடைபெற்றிருக்கிறது.

அதேபோன்று மைலம்பாவெளியில், கடன்கொடுத்த தனிநபர் ஒருவர் அவருடைய 4 வயது சிறுவனை ஆட்டோவுக்குள் இருக்கச் சொல்லிவிட்டு, குறித்த பெண்ணின் வீட்டுக்குள் தகாத உறவை வைத்துக் கொண்டு இருக்கையில் அச்சிறுவன் வீதியில் வாகனத்தில் அடிபட்டு கொல்லப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு நகரப்பகுதியில் இவ்வாறான நிதி நிறுவனத்தின் பிரதிநிதி, பணத்தை அறவிட வந்து தாயுடன் சேட்டையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், குழந்தை வீதியில் விடப்பட்டு விபத்துக்குள்ளான நிலை ஏற்பட்டிருந்தது, அதனால் இவ் விவகாரம் வெளியில் தெரிய வந்தது.

வெளிநாடுகளில் இருக்கின்ற கணவன்மார் உன்னிடம் அடிக்கடி யாரோ வந்து செல்கிறார்களாம் என்று மனைவிமார்களிடம் கேள்விகளை எழுப்புவதன் காரணமாக தற்கொலைசெய்து கொள்ளும்நிலை ஏற்பட்டு வருகிறது. இவ்வாறானதொரு சம்பவம் கடந்த மாதத்தில் நடைபெற்றிருந்தது.

நிதி அறவிடுவதற்காகச் செல்லும் நிதி நிறுவனங்களின் பிரதிநிதிகள் பேசுகின்ற வார்த்தைகள் காது கொடுத்துக்கேட்க முடியாதநிலை இருக்கிறது. இவர்கள் காலை - மாலை, என்ற பாகுபாடு இன்றி, காலை உணவு உண்ணும் நேரம், பகல் உணவு உண்ணும் நேரம், இரவுபடுக்கையிலும் வந்து கதவைத் தட்டுகிறார்கள் என அரசடித் தீவைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் தெரிவிக்கிறார்.

கடன்பட்டான் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன் என்ற நிலையில்தான் எமது பிரதேசத்தின் நுண்கடன் நிறுவன அதிகாரிகளின் செயற்பாடுகளால் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதுபற்றிய கவனஈர்ப்பைச் செய்து தரவேண்டிய பொறுப்பு எங்களுடைய நிறுவனத்திற்கு இருக்கிறது என்றவகையில் இதனைச் செயற்படுத்துகிறோம்.

அதேநேரம், கடன்களை வழங்கும்வேளையில், மிகவும் பக்குவமாக கடன்களை வழங்குகிறார்கள், பின் கடன்கொடுத்து ஒரு சில வாரத்திலேயே வட்டிக்காக வந்து நிற்கிறார்கள். வட்டியைப் பெற்றுக் கொள்வதற்காகவும் பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்காகவும் வீட்டிலேயே காத்திருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் எங்களது வேலைகளைச் சுதந்திரமாகச் செய்து கொள்ள முடியாதிருக்கிறது, என ஏறாவூரைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் தெரிவிக்கிறார் எனவும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தினைப் பொறுத்தவரையில், 2008ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்த பின்னர் ஏற்கனவே இருந்த அரச வங்கிகளுடன் தனியார் வங்கிகளும் போதாக்குறைக்கு லீசிங் எனப்படுகின்ற நுண்கடன்களை வழங்குகின்ற நிறுவனங்களும் தேவைக்கு அதிகமாக நிறுவப்பட்டன.

நாங்கள் பேசித்தான் விடயத்தினைத் தெளிவாகக்கூறியே கடன்களை வழங்குகிறோம் இந்த நிறுவனங்கள் சொல்லிக் கொண்டாலும், ஆசை வார்த்தைகளைக் கூறி கடன்களை வழங்கிவிட்டு வாசலிலும் வீட்டினுள்ளும் வட்டியை அறவிடுவதற்கு காவல்கிடக்கும் நிலையே ஏற்பட்டுள்ளது.

இந்த வங்கிகளும், நிறுவனங்களும், ஆரம்பத்தில் நகர்ப்பகுதியில் மாத்திரம் நிறுவப்பட்டிருந்தாலும், தற்போதைய நிலையில் கொஞ்சம்கொஞ்சமாக மீள்குடியேறிய மக்களை இலகுவில் அடையக்கூடிய இடங்களிலும், உதாரணமாக கொக்கட்டிச்சோலை, களுவாஞ்சிக்குடி, செங்கலடி, என தமது கிளைகளை நிறுவிக் கொண்டுள்ளன.

யுத்தத்தின் பிடியிலிருந்து மீண்டுவெளியில் வந்து உலகைத் தரிசிக்கும் மக்கள் இப்போது மற்றையவர்கள் போன்று நாமும் விரைவாகப் பெரியளவான பணக்காரர்களாக மாறவேண்டும் என்ற கனவை இந்த நிதி நிறுவனங்கள் வழங்கும் கடன் பணம் நனவாக்கித் தரும் என்றே நம்பிக்கொள்கின்றனர். ஆசை வார்த்தைகளுக்கு மயங்கி தம்மையும் பாழாக்கி தமது குடும்பங்களையும் வீணாக்கிக்கொள்ள மக்கள் துணிந்துவிடும் நிலை ஏற்பட்டு வருகிறது.

கடந்த காலத்தில் ஏற்பட்ட யுத்தம் மற்றும் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு குடும்பத்தைத் தலைமை தாங்குபவர்களாக தனியாக வாழும் பெண்களின் வீதம் அதிகரித்துள்ள நிலையில் அது மாவட்டத்தின் வறுமை நிலையை உயர்த்துவதாக அமைந்து வருகின்றது.

இந்த நிலையில் மாவட்டத்தில் உள்ள பெண்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்காக பல்வேறு உதவி திட்டங்கள் மாவட்ட செயலகமும், பெண்கள் அமைப்புக்கள் சிலவும் மேற்கொண்டுவருகின்றன.

இலங்கை அரச வங்கிகள் உட்பட தனியார் நுண்கடன் நிறுவனங்களின் பிரதிநிதிகள், இரவு, பகல் பாராது கடன்களை அறவிட முயல்வதன்காரணமாக பெண்கள் வீடுகளில் இருக்க முடியாது ஒழித்துத்திரிகின்ற நிலை ஏற்படுகிறது. கடன்பெற்று வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். அவரது வருமானத்தினை நம்பி குடும்பத் தலைவிகள் கடன்களைப் பெற்றிருக்கின்றனர்.

ஆனால், அதிக வட்டியில் கடன்களை வழங்கினாலும், நேரகாலம் இல்லாது இதற்கான அறவீட்டு வேலைகளைச் செய்வதானது, மிகவும் கொடுமையானதாகும்.

இவ்வாறான நிலையில், மட்டக்களப்பு மாவட்டத்தில் 29000 விதவைகள் அதே போன்று கணவனால் கைவிடப்பட்ட பெண்களும் அதிகளவாக மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ளனர். கணவனால் கைவிடப்பட்ட பெண்களின் முழுமையான எண்ணிக்கை இன்னும் அறிக்கையிடப்படவில்லை. ஏனெனில் சிலர் திருமணம் செய்ததை இவர்கள் பதிவு செய்யாததால் இந்த விபரம் இன்னும் முழுமையாக தெரிய வரவில்லை. பெண்களுக்கெதிரான வன்முறை, குடும்ப வன்முறை, சிறுவர் துஷ்பிரயோகம், பாடசாலை செல்லாத சிறுவர்கள் என சமூகச் சீரழிவுகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகம் காணப்படுகின்றன.

(21 பக்கம் தொடர்ச்சி...)



# நீங்கேனம்மா — இயக்கமானீங்க



தனது காணியில் இவளுக்கொரு துண்டை எழுதியும் கொடுத்தாள். வரும்போது மிஞ்சிய மகளின் தோடும் ஒரு சங்கிலியையும் விற்று பிள்ளைகளுக்காகவும் தனக்காகவும் 30ஆயிரம் ரூபாவிற்கு ஒரு குடிசைபோட்டாள். இயலாத தனது காலோடுதானே எல்லாவற்றையும் செய்து குடிசையை அமைத்தாள்.

உதவிவேண்டி அந்த மாவட்டத்திலிருந்த பல நிறுவனங்களுக்கு ஏறியிறங்கினாள். தனது பிள்ளைகளுக்குப் படிப்பையேனும் வழங்க உதவிகள் வேண்டினாள். எதுவும் கிடைக்கவில்லை. இறுதியாக கிறிஸ்தவ திருச்சபையொன்றில் போய் தனது கவலைகளையெல்லாம் மதகுரு ஒருவரிடம் கொட்டியழுதாள்.

என்னாலை படிக்க முடியாமப் போட்டுது.... என்னாலை இப்ப ஒரு தொழிலையும் செய்யமுடியாம இருக்கு என்ரை பிள்ளையளைத் தத்தெடுங்கோ பாதர்... என மண்டியிட்டு அழுதாள். அம்மா, அப்பா ரெண்டு பேரும் இல்லாத பிள்ளைகளைத்தானம்மா நாங்க பொறுப்பெடுக்கலாம். அம்மா நீங்கள் உயிரோடை இருக்க அதை நாங்க செய்யேலா தம்மா... அப்ப நான் செத்துப்போறன் பாதர் என்ரை பிள்ளையளை எடுங்கோ... என்ரை பிள்ளையளை படிப்பிச்சு விடுங்கோ பாதர்..... என அழுதவள் அந்த மதகுருவின் காலில் விழுந்து கெஞ்சினாள்.

அவ்வளவு நேர மன்றாட்டையும்விட அவள் காலில் விழுந்தது அந்த மதகுருவையும் கரைத்துவிட்டதோ, என்னவோ பிள்ளைகளை மாணவர் விடுதியொன்றில் சேர்த்துவிடுவதாக ஒத்துக்கொண்டார். ஆனால் பிள்ளைகளுக்கான சவர்க்காரம், உடுப்பு, கல்வி உபகரணங்கள் யாவும் இவள் வாங்கிக் கொடுக்கவேண்டுமென்ற ஒப்புதலைப் பெற்றுக்கொண்டு மூத்தவனையும் மகளையும் அந்த மதகுருவிடம் பொறுப்புக் கொடுத்தாள்.

தன் சிறிய பிள்ளைகள் இரண்டையும் பிரிய மனமில்லாத வேதனை. ஒளித்துக்கொண்டு பிள்ளைகள் இரண்டும் அழஅழ மாணவர் விடுதியில் விட்டுப்போனாள். மாதம் ஒருமுறை போய்ப் பார்த்துவருவாள். பிள்ளைகள் இரண்டும் வீட்டுக்கு கொண்டு போகச்சொல்லி ஒவ்வொரு முறையும் அழுகிற கண்ணீரை தாங்கமுடியாது. வீட்டில்வந்து தன்னை நெருப்பால் சுட்டு அழுது ஆற்றமுடியாத துயரில் கரைவாள்.

பிள்ளைகளின் பிரிவு அவளாலும் தாங்க முடியாத கட்டம் வந்தபோது மாதத்தில் இரண்டு வார இறுதி நாட்களில் பிள்ளைகளை வீட்டுக்குக்கொண்டு வந்து திங்கள் திருப்பியனுப்புவாள். வீட்டுக்கு வந்து திரும்புகிற ஒவ்வொரு முறையும் வீடு மரண வீடுபோலிருக்கும். 13வயதில் தாயை உறவுகளைப் பிரிந்த பாவமோ, தன்னையும் பிள்ளைகளிடமிருந்து பிரிக்கக் காரணமோ எனவும் கனதரம் யோசித்திருக்கிறாள்.

பிள்ளைகளைப் பிரிதல் துயராயினும் அவர்கள் படித்து முன்னேறிவிட வேண்டுமென்ற கனவில் பிரிவின் துயரையும் வெளிக்காட்டாமல் மனசைக் கல்லாக்கினாள்.

(தொடரும்...)

---

அதற்கடுத்த அதிகாரமையம் அவர்களது புலனாய்வுப் பிரிவு. அதற்கடுத்தது அவர்களது இராணுவம். இவைதவிர அரசியற் பிரிவு, கலை பண்பாட்டுப் பிரிவு என்பதெல்லாம் புலிகளின் தலைமை செய்துவந்த மனித குலத்துக்கு விரோதமான செயல்களுக்கு வெள்ளை அடிப்பதற்காகவே உருவாக்கப்பட்டவையாகும். அதிலும் அவற்றில் இடதுசாரி இயக்கத்தில் இருந்துசென்றவர்கள் பொறுப்பில் இருந்தால் சொல்லத் தேவையில்லை. ஹிட்லரின் காலத்திலும் சில இடதுசாரி ஓடுகாலிகள் அவனுடைய அரசியல் - பிரசாரப் பிரிவுகளில் இணைந்து வேலைசெய்த வரலாறு உண்டு.

எனவே எனது விடுதலை சம்பந்தமாக எனது மனைவி தனது ஆதங்கத்தினால் முயற்சிகள் எடுத்தபோதிலும், பலத்த சித்திரவதைகளுக்குப் பின்னர் அவர்கள் எனக்கு வழங்கிய தண்டனைக் காலம் முழு வதையும் அனுபவித்த பின்னரே நான் விடுதலை செய்யப்பட்டேன் என்பதே உண்மையாகும். இன்று புலிகள் முற்றுமுழுதாக இலங்கை மண்ணில் அழிக்கப்பட்டு, அவர்களில் பல்லாயிரக் கணக்கானோர் அரச படைகளிடம் சரணடைந்த நிலையில், அவர்களுக்கு அரசாங்கம் புனர்வாழ்வளித்து படிப்படியாக விடுதலை செய்துவருகின்ற நிலையிலும்கூட, அவர்களை எவ்வித விசாரணையும் இன்றி முழுவதுமாக உடனடியாக விடுதலை செய்யவேண்டும் எனக் கோருகின்ற இலங்கையிலுள்ள சில அரசியல்வாதிகளையும், சர்வதேச மனித உரிமை அமைப்புகளையும் பார்க்கையில், கால் நூற்றாண்டு காலமாக புலிகளின் பாசிச இராணுவச் சப்பாத்துகளின் கீழ் தமிழ் மக்கள் நசுக்கப்பட்டபோது இவர்கள் எல்லோரும் எங்கே போனார்கள் என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

தமிழ் மண்ணின் காற்றை பிணங்களின் சாம்பலால் நிறைத்த புலிகள்

என்மீதான விசாரணை காலையிலும் மாலையிலுமாக முடிவில்லாமல் தொடர்ந்துகொண்டிருந்தது. இத்தனை நாள் விசாரித்தும் என்னை எதற்காகக் கைது செய்தார்கள். என்மீதான குற்றச்சாட்டுகள் எவ்வகையானவை என்பதை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லை. இன்னும் எத்தனை நாட்கள் விசாரிக்கப் போகிறார்கள் என்பதும் புரியவில்லை. ஆனால் புலிகள் தமக்கு எதிரானவர்களைக் கைது செய்து சிறையில் அடைத்து சித்திர வதை செய்தாலும், கைது செய்பவர்களைச் சில நாட்களாவது உயிருடன் வைத்திருந்து, தமது ஆட்கள் சிலரை வைத்து விசாரித்துத் தண்டனை வழங்குகிறார்கள்




என்பது, புலிகளைப் பொறுத்தவரை ஒரு சிறு முன்னேற்றம்தான்.

ஏனெனில் புலிகளைப் பொறுத்தவரை, தமக்கு எதிரானவர்கள் அல்லது வேண்டாதவர்கள் எனக் கருதப்படுவோரை திடீரென தாக்கிக் கொலை செய்வதுதான் புலிகளது வழமையான நடைமுறை. 1990ல் இந்திய அமைதிப்படை வெளியேறிய கையோடு புலிகளால் கைதுசெய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கானோரை புலிகள் அவ்வாறான பாணியில்தான் படுகொலை செய்தார்கள். அவ்வளவு கொலைவெறியில் புலிகள் அந்த நேரத்தில் இருந்தார்கள்.

ஓர் உதாரணத்தை இங்கு குறிப்பிடலாம். புலிகளால் கொலைசெய்யப்பட்ட யாழ்ப்பாணத் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் வெற்றிவேலு யோகேஸ்வரனின் செயலாளராக இருந்தவர் நல்லிநாதன் என்ற ஒருவர். மிகவும் பெருத்த சரீரம்கொண்ட அவர், யோகேஸ்வரனின் செயலாளராக இருந்ததைத் தவிர வேறு ஒரு பாவச்செயலிலும் ஈடுபடாதவர் என்பதை யாழ்ப்பாண மக்கள் நன்கு அறிவர்.

இந்திய அமைதிப்படை வெளியேறிய பின்னர் புலிகளால் கைது செய்யப்பட்டோரில் இந்த நல்லிநாதனும் ஒருவர். இவர்கள் எல்லோரும் புலிகளின் துணுக்காய் வதைமுகாமில் வைத்துச் சித்திரவதை செய்யப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டார்கள். நல்லிநாதன் ஏன் கொலை செய்யப்பாபட்டார் என்பது இன்றுவரை அவரது குடும்பத்தினருக்குத் தெரியவில்லை. அவரது மருமகன் (மகளின் கணவர்) குலசேகரம் ஆசிரியர் எனது நண்பர் என்றபடியால், அவரது இழப்பால் அவரது குடும்பத்தினர் படும் துன்பம் எனக்குத் தெரியும்.

நான் கைதுசெய்யப்பட்டு புலிகளின் சிறையில் அடைக்கப்பட்ட சில நாட்களின் பின்னர், என்னுடன் நெருங்கிப் பழகிய சிறையிலிருந்த முன்னாள் புலி உறுப்பினர்கள் சிலர் எனக்கு ஓர் ஆறுதலான விடயத்தைக் கூறினார்கள்.

அதாவது, "மணியண்ணை நல்ல வேளை நீங்கள் இந்தியன் ஆமிபோனவுடன் பிடிபடாமல் இப்ப பிடிபட்டது. அப்ப பிடிபட்டு இருந்தால் உங்கடை சாம்பல் எப்பவோ காத்தோடை கலந்திருக்கும்!"

(தொடரும்...)

---

முரசில் தொடர்ச்சியாக வெளியாகும் முன்னாள் போராளிகளின் கண்ணீர் கதையின் பாதிப்பால் கருவாகிய கவிதை இது.


## வேண்டாங்காண் இந்த விழல்

அன்று... களத்தில் போராடியவள்...
இன்று... வாழ்க்கைக்
குளத்தில் மிதக்கிறாளா?
விழிகளைக் குளமாக்கிய அக்
கண்ணீர்க் கதை 01.07.2013
தினமுரசு வாரமலரில்...
என்னை ரணமாக்கியபோது உயிர்
பிணமாகிப் போனது... என்
உடன் பிறப் பொன்றின்
உஷ்ணக்காற்றை உள்வாங்கிய
உணர்ச்சிப் பிரளயத்தில்.

செய்... அல்லது செத்துமடி
தாரக மந்திரத்தைக் கேடயமாக்கிய
தம்பி, தங்கைகளின்...
நம்பிக்கை ஒளிக்கீற்று
உரமாய்... சரமாய்
உலகோரின் கண்களில்
'கரண்ட்சொக்' தாக்கியபோதுதான்
ஜெனீவா... ஐ.நா. 'ஹியூமேன்றைற்'
செவிப்பறைகளுக்குள்...
செல்லழத்திருக்கிறது
போராட்டத்தின் புனிதத்துவத்தை
செய்திகளால் கோழட்டுகாட்டிய போது

வெறியாட்டத்தில்...
கசங்கிப்போகாத காவியங்களாக
ஓவியம் தீட்டும்... வைர வரிகளாய்...
செதுக்கிய சிற்பங்களே...!
உங்கள் உணர்வுகள்...
குளிர்காய்வதற்குள்...
இன்னுமோர் இனம்...
மஞ்சள் கழுகுப்பார்வைக்குள்
சஞ்சரிக்கிறது...
உயர்மட்ட திமிங்கிலங்களின்
ஆசீர்வாத அரவணைப்போடு
புனிதம் என்ற போலிப்பிரசவத்தால்.

மானுடம்... அது ஒன்றே
மனிதம் இனம், அது தேய்ந்து...
கண்ணாம்பூச்சி ஆனதால்...
பெரும்பான்மை, சிறுபான்மை என்ற
மனப்பான்மைக்குள்...
இனவாதமும்... இணைந்து
முடக்குவாதமாய்...
திமிர் வாதமாய்...
பிடரியை நசுக்கியபோதுதான்
அடவியில் ஆயுதப்பயிற்சி
முகாம்களின் ஆதிக்கம்
முப்பது ஆண்டுகளாய்...
சின்னா பின்னப்படுத்திய
சிறீலங்கா.... அன்னை
சிரிக்க... சிந்திக்க...
உலகப்பரப்பில்... அவளின்
உன்னதம் காக்க...



பௌத்தம்... மற்றும் மதங்கள்
போதிக்கும்
பஞ்ச சீலத்துள்... குளிப்போம்
பாசத்தை வளர்ப்போம்
இதை விடுத்து
மீண்டும்... மீண்டும்... சே....
வேண்டாங்காண் இந்த விழல்.

சாய்ந்தமருதூர்
K.M.A.அஸீஸ்



# நிலமெல்லாம் இரத்தம் 73

பா.ராகவன்

அனைத்துத் தரப்புக் கருத்தையும் கேட்டுவிட்டு இறுதியில் 1897ஆம் ஆண்டு கூடிய உலக யூதர் காங்கிரஸ் கூட்டத்தில்தான் ஹெஸில் அதனை அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

வேறுவழியில்லை. நாம் பாலஸ்தீனில் நிலம் வாங்குவோம். அங்கேயே போய்க் குடியேறுவோம்.

ஒட்டாமான் துருக்கியப் பேரரசர் தான் அப்போதும் பாலஸ்தீனை ஆண்டுகொண்டிருந்தார். எந்தப் பிரச்சினையும் இல்லாமல் அங்கே யூதர்கள் வாழ்ந்துகொண்டிருந்த காலமும்கூட அது. ஹெஸிலின் முடிவு பாலஸ்தீன் யூதர்களுக்கு இரகசியமாகத் தெரிவிக்கப்பட்டது.

நல்ல நாளெல்லாம் பார்த்தார்களா என்று தெரியவில்லை. பாலஸ்தீனில் திடீரென்று ஆங்காங்கே புதிய நிலவங்கிகள் தோன்ற ஆரம்பித்தன. கேட்பவர்களுக்கு மட்டுமல்லாமல், கேட்காதவர்களுக்கும் நிலம் வாங்குவதற்காகப் பணத்தை அள்ளிஅள்ளிக் கொடுக்க



தியோடர் ஹெஸில்

ஆரம்பித்தார்கள்.

யூத தேசிய காங்கிரஸ் என்கிறோம். யூத நில வங்கிகள் என்கிறோம். யூத காங்கிரஸ் மாநாடு என்கிறோம். இதெல்லாம் பகிரங்கமாக நடந்திருந்தாலோ அல்லது யார் மூலமாவது தியோடர் ஹெஸிலின் திட்டங்கள் வெளியே தெரிந்திருந்தாலோ என்ன ஆகியிருக்கும் என்று யோசித்துப் பாருங்கள். இன்றைக்குப் பேச முடிகிறது. விலாவாரியாக அலசிப் பார்க்க முடிகிறது. ஆனால் இந்தச் சம்பவங்கள் நடந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி ஆண்டுகளில் காற்றுக்குக்கூடத் தெரியாத இரகசியமாகத்தான் இதையெல்லாம் வைத்திருந்தார்கள். யூதர்களிலேகூட, பொறுப்பில் இருக்கும் நபர்கள் தவிர, பொதுமக்கள் இதையெல்லாம் பகிரங்கமாகப் பேசவேமாட்டார்கள். எப்போதும் யூதர்களின் முகத்தில் ஒரு பயமும் ஏக்கமும் படர்ந்திருக்கும். அந்த பய உணர்ச்சியையும் ஏக்க உணர்ச்சியையும் அவர்கள் ஒருபோதும் மாற்றிக் காண்பித்ததே இல்லை. இத்தனை பெரிய திட்டங்களை அவர்கள் தொடங்கி இருக்கிறார்கள், நில வங்கியின் கிளைகளைத் திறக்க பாலஸ்தீனுக்குப் போயிருக்கிறார்கள். நிலவங்கியின் நோக்கமே பாலஸ்தீனின் நிலங்களை அபகரிப்பதுதான் என்பதையெல்லாம் ஒரு யூதர்கூட வெளியே பேசியதில்லை.

இத்தனைக்கும் பத்திரிகைகள் பெருகத் தொடங்கியிருந்த காலம் அது. ஆனால் எந்தப் பத்திரிகையின் நிருபருக்கும் அப்போது மூக்கில் வியர்க்கவில்லை. எந்த நாட்டின் அரசுக்கும் யூதர்களின் திட்டம் இதுதான் என்பது விளங்கவில்லை. எல்லா தேசங்களிலும் ஆட்சியில் இருப்போருக்கு யூதர்கள் பலர் நெருக்கமாக இருந்தார்கள். ஆனாலும் வரையறுக்கப்பட்ட நெருக்கம் அது. ஆட்சியாளர்களிடம் இருந்து அவர்கள் செய்திகளையும் இரகசியங்களையும் பெறப் பார்ப்பார்களே தவிர, தமது இரகசியங்களை அவர்களிடம் மறந்துகூடப் பேசமாட்டார்கள்.

எல்லாமே இருப்பது போலத்தான் இருந்தது. எந்த மாற்றமும் இல்லை. யாருக்கும் எதுவும் கண்ணில்படவே இல்லை. ஆனாலும் அது நடக்கத்தான் செய்தது.

ஒட்டாமான் துருக்கியப் பேரரசின் ஆளுகைக்கு உட்பட்ட பாலஸ்தீனில் வசித்துக்கொண்டிருந்த சில பணக்கார யூதர்கள் திடீரென்று மக்கள் நலனில் அக்கறைகொண்டவர்களாக ஆங்காங்கே நிலவங்கிகளைத் தொடங்கினார்கள். யார் வேண்டுமானாலும் வந்து நிலம் வாங்குவதற்காக அங்கே கடன்பெறலாம். குறைந்த வட்டி விகிதங்கள், நிலங்களை விற்க விரும்புகிறீர்களா? தாராளமாக வந்து வங்கிமூலமாகவே நிலங்களை விற்கலாம். அதிக பணம்கொடுத்து நிலங்கள் வாங்கப்படும்.

வங்கிகளே நேரடியாகவும் நிலங்களை வாங்கும். அல்லது இடைத்தரகர் போலச் செயற்பட்டு யூதர்களுக்கு நிலங்களை வாங்கிக்கொடுக்கும்.

பாலஸ்தீனைப் பிரமாதமான விவசாய பூமி என்று சொல்லமுடியாது. அங்கு விவசாயம் இருந்தது. ஆனால் விவசாய நிலங்களைக்காட்டிலும் வறண்ட, பிரயோசனமில்லாத பூமியே அதிகம். பல இடங்களில் நிலப்பரப்பைச் சிறுசிறு குன்றுகள் அதிகம் ஆக்கிரமித்திருந்தன. எதற்குமே பயன்படாத பாலை நிலப்பரப்பு.

யூதர்கள் நிலவங்கிகளைத் தொடங்கி, நிலங்களை வாங்கத் தொடங்கியபோது, படிப்பறிவில்லாத கிராமப்புறத்து அரேபிய நிலச்சுவாந்தார்கள், தம்மிடமிருந்த பாலை நிலங்களை அவர்களுக்கு விற்க விரும்பினார்கள். தண்டத்துக்கு வெறும் பூமியை வைத்துக்கொண்டு அவதிப்படுவானேன் என்று அவர்கள் கருதியிருக்கலாம். மேலும் நிலவங்கிகள், அவர்கள் எண்ணிப் பார்க்கமுடியாத அளவுக்கு அந்த வறண்ட நிலங்களுக்குப் பணம் கொடுக்க முன்வந்தன. ஆகவே இதனை ஒரு வாய்ப்பாகவே அவர்கள் கருதினார்கள்.

யூத வங்கிகள் எதற்காக இத்தனை பணம்கொடுத்து உருப்படாத நிலத்தை வாங்குகின்றன என்றெல்லாம் அவர்களுக்கு யோசிக்கத் தெரியவில்லை. ஆகவே, பாலஸ்தீன் முழுவதிலும் எங்கெல்லாம் விவசாயத்துக்குப் பயன்படாத தரிசு நிலங்கள் இருந்தனவோ, அவற்றின் உரிமையாளர்கள் எல்லோரும் அந்த நிலங்களை நிலவங்கிகளுக்கு விற்றுக்கொண்டிருந்தார்கள்.

எத்தனை நிலம் கிடைத்தாலும் வங்கி வாங்கிக்கொள்கிறது என்பதைப் பார்த்து, அதிக பணத்துக்கு ஆசைப்பட்டு, தரிசு நிலங்களுக்கு நம்பமுடியாத விலைகளைச் சொல்லிப் பார்த்தார்கள் அரேபியர்கள். அப்போதும் நில வங்கிகள் தயங்கவே இல்லை. பத்துப் பைசா பெறாத நிலங்களுக்குக்கூட பல லட்சம் கொடுக்க அவை முன்வந்தன.

உண்மையில் அதிர்ஷ்ட தேவதைதான் நிலவங்கி ரூபத்தில் வந்திருப்பதாக அரேபியர்கள் மடத்தனமாக நினைத்தார்கள். தினசரி நூற்றுக் கணக்கான ஏக்கர்கள் இந்தவகையில் யூத நிலவங்கிகளின் வசமாகிக் கொண்டிருந்தது.

வங்கி இப்படி கணக்கு வழக்கில்லாமல் பணம்கொடுத்து நிலம் வாங்குவதற்குப் பணம் எங்கிருந்து வரும்?

அதைப்பற்றி அவர்கள் கவலைப்படவே இல்லை. உலகெங்கிலுமிருந்த யூதர்கள் தினசரி லட்சக்கணக்கில் பணம் திரட்டிப் பாலஸ்தீனுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். உலகமெங்கும் வசித்துக்கொண்டிருந்த பல இலட்சம் யூத வர்த்தகர்கள் தமது வருமானத்தில் கணிசமான பகுதியை இந்த நில வங்கிகளுக்கு நன்கொடையாக அளித்தார்கள். சாதாரண யூத மக்களோ, துண்டேந்திச் சென்று பணம் வசூலித்து அனுப்பினார்கள்.

கலை நிகழ்ச்சிகள் நடத்திப் பணம் சேர்ப்பது, புத்தகம் விற்ற பணம், நாடகம் போட்ட பணம் என்று எந்த ஒரு சிறு வாய்ப்பையும் அவர்கள் தவறவிடவில்லை. எங்கோ, கண்ணுக்குத் தெரியாத தொலைவில், பாலஸ்தீன் என்கிற தமது மூதாதையர் தேசத்தில் தங்களுக்கென்று தங்கள் தலைவர்கள் நிலம் வாங்கிக்கொண்டிருக்கிறார்கள், விரைவில் தாங்கள் அங்கே இடம் பெயர்ந்து நிம்மதியாக வசிக்கப் போகிறோம் என்கிற ஓர் உணர்ச்சி மட்டுமே அவர்களிடம் இருந்தது. அதையும் ரகசியமாகவே வைத்திருக்க வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு இருந்தது. மறுபுறம், யூதர்களின் இந்த மாபெரும் திட்டத்தின் ஒரு வரிகூடத் தெரியாத பாலஸ்தீனத்து அராபியர்கள், வந்தவரை லாபம் என்று தங்களுடைய நிலங்களையெல்லாம் நிலவங்கிக்கு அள்ளி அள்ளிக்கொடுத்துக் கொண்டிருந்தார்கள். அத்தனையும் தரிசு நிலம் தானே என்கிற அலட்சியம்.

ஆனால் நிலவங்கிகள் தரிசு நிலக் கொள்முதலோடு மட்டும் நிறுத்திக் கொள்ளவில்லை.

(தொடரும்...)



# பழிக்குப் பழி வாங்கிய ஓர் ஆவி

தமிழ் நாட்டில் நாகபட்டினத்தில் சில ஆண்டுகளுக்கு முன் ஆங்கில மருத்துவம் கற்ற ஒருவர் இருந்தார். இவர் சைவ சமயத்தைச் சார்ந்தவர். இவருடைய மகனுக்கு உரிய காலத்தில் நற்குண - நற்செய்கை வாய்ந்த ஒரு பெண் மனைவியானாள். ஆனால் வைத்தியரின் மனைவியும், மகளும் மிகவும் கொடுமையான வன்னெஞ்சம் உள்ளவர்கள்.

இவர்கள் தம் வீட்டுக்கு வந்த புதுப்பெண்ணைக் கண்டு மனம்மகிழாமல் மிகப் புழுங்கினார்கள். அப்பெண் வீட்டுக்குவந்த நாள் முதற்கொண்டு மாமியும், மைத்துனியும் சிறிதும் மனவிரக்கமின்றிக் "கரும்பை ஆலையில் வைத்து நசுக்கிப் பிழிதல்போல" அந்த நல்ல பெண்ணை வீட்டுவேலை முழுவதுஞ் செய்யும்படி ஏவியதல்லாமலும் தீயசொற்களாலும் அடி உதைகளாலும் அளவு கடந்து வருத்திவந்தார்கள்.

அந்தப் பெண்ணோ, இவ்வளவு துன்பங்களையும் பொறுத்துக்கொண்டு தனக்கு நன்னாள் வருமென்று எதிர்பார்த்து சில ஆண்டுகளைக் கழித்தாள். தன் கணவன் தன் நிலைமையைத் தெரிந்துகொண்டு இத்துன்பம் அகலுதற்குரிய ஏற்பாடு செய்வான் செய்வான் என்று பலநாள் நம்பியிருந்தும், ஒரு வழியும் பிறக்கவில்லை. அவள் தன் கணவனோடு தாராளமாய்க் கூடியிருக்கவும் அக்கொடியாள் விடுவதில்லாமையால் அவள் தன் கணவனிடம் தானே தன் வாய்திறந்து தான்படுந்துன்பங்களைத் தெரிவிக்கவும் நெடுநாள் வரையில் அவளுக்குச் சமயம் வாய்க்கவில்லை. பிறகு ஒருநாள் தெய்வச் செயலாகத் தன் கணவனுடன் சிறிது தாராளமாயிருக்கச் சமயம் வந்தது.

அப்போது அவள் கணவனை அன்புடன் பார்த்து, "என் ஆருயிர்க் காதலனே! நான் ஒரு குற்றமும் செய்யாதிருக்கவும், வீட்டுக்காரியங்கள் அவ்வளவும்

**(உண்மைச் சம்பவம்)**

யாரும் செய்யாமல் நான் ஒருத்தியே செய்கிறேன். என்னால் இயன்றளவு மனம் வருந்தாமல் செய்துவந்தபோதும், மனதில் கள்ளமின்றி எல்லோரிடத்தும் அன்பாக இருந்தும், என்னை அன்புடன் நடத்தாது மட்டுமல்ல, மாமியும், மைத்துனியும் என்னைத் துன்பப்படுத்தி வருகிறார்கள். நான் என்ன செய்வேன்! என் துன்பத்தை உங்களிடம் சொல்லவும் வாய்ப்பின்றித் தவித்தேன். இன்றைக்கு ஏதோ வீட்டில் யாரும் இல்லாததால் உங்களைத் தனியே பார்க்க முடிந்தது, என்றாள். இவளின் கணவனோ எதையும் சீதூக்கி ஆராயும் அறிவுடையவனல்லன் "மாமி - மருமகளுக்கு இது வழக்கம் தான். இதையெல்லாம் என் காதில் போடாதே" என்று சொல்லிவிட்டான்.

அந்தப் பெண் தன் தலைவிதியை நொந்துகொண்டு, ஒருநாள் மாமியைப் பார்த்து "நீங்கள் காலால் இட்டவேலையை தலையாற் செய்யக் காத்திருக்கிறேன். ஆனால், நீங்கள் மட்டும் வேற்றுமைபாராமல் அன்பாய் என்னை நடத்திவந்தால் அதுவே எனக்குப் போதும்" என்று கெஞ்சிக்கேட்டாள். இந்த விண்ணப்பம் மாமிக்கும், மைத்துனிக்கும் இனிமை தருவதற்கு பதில் கோபத்தை ஏற்படுத்தியது. உடனே அவர்கள் இருவரும் விளக்குமாறும் தடியும் எடுத்துக்கொண்டு அமிர்தவல்லி போன்ற அப்பெண்ணை உடம்பெங்கும் நன்றாக நையநறுக்கிப் புடைத்தார்கள். அப்பெண்ணோ பொறுக்கமுடியாத அவ்வடிகளைப் பெற்றுக் கொண்டு, வாய்திறவாமலும் எழும்பமுடியாமலும் கிடந்தாள். அன்றிரவு வீட்டுக்குவந்த அவள் கணவன் எப்போதும் போலத்தான் மனைவியைக் கவனியாமலே இருந்துவிட்டான்.

அன்றிரவு அப்பெண்ணுக்கு உடம்பின் நோயும், மனநோயும் மிகுதியாகிறது. இனி தான் இவ்வுலகில் உயிர் வாழ்வதில் பயனில்லையென்றும் நினைத்தாள். தன் உயிரை இன்றைக்கே மாய்த்துவிடுதல்தான் தகுந்ததென்று தற்கொலைக்கு முடிவுசெய்தாள். நள்ளிரவில் எல்லோரும் அயர்ந்து தூங்கும்போது அவள் மெல்லமெல்ல நகர்ந்து வீட்டின் கிணற்றுக்காட்டில் ஏறினாள். அதில் நின்று கொண்டு, "நான் இறந்துபோன பிறகு ஆவியாய் நின்று என் மாமியையும், மைச்சாளையும் துன்பப்படுத்திப் பழிவாங்கவேண்டும்" என்று உறுதிசெய்து கொண்டு ஆழ்கிணற்றில் குதித்து மரணித்தாள்.

அவள் இறந்த பின்பு உடலைச் சீராட்டிப் பாராட்டினார்கள். வழமைபோல ஒப்புக்கு அழுதார்கள். தடல்புடலாகக் கிரியைகள் நடந்தன. நாட்களும் கழிந்தன. அவள் கணவனோ பின்பு தன் மனைவியின் அருமைக் குணங்களைத் தெரிந்து, தன் மனைவியின் தற்கொலைக்குக் காரணம் தன் தாயும், உடன்பிறந்தவளுமே என்று உண்மையை உணர்ந்து துன்பக்கடலினுள் ஆழ்ந்தான்.

அவ்வீடு அமைதியை இழந்தது. இராக்காலம் வீட்டில் அமைதியில்லாததாயிற்று. பொல்லா நெஞ்சினரான தாயும், மகளும் உறக்கம் கொள்ளாமல் பெருந்திகிலால் துடித்தார்கள். இரவின் நிசப்தத்திற்கிடையில் திடீரென்று ஓர் அழுகுரல் கேட்டது. சிறிதுநேரத்தில் வீட்டில் யாரோ நடப்பது போலச் சரசரவென்று ஓர் ஒலி உண்டாயிற்று.

பின்னுஞ் சிறிய நேரத்தில் "ஐயோ! ஐயோ!! அடிக்கிறாளே!!!" என்று பெருங்குரல் கேட்டதும், எல்லோரும் எழுந்து அவ்வொலி வந்த இடத்திற்குப் போய் பார்க்க, மைத்துனிப் பெண் அவள் படுத்திருந்த இடத்திலிருந்து பரபரவென்று இழுக்கப்பட்டு உலக்கையால் அடிபட்டுக் கிடந்தாள். உடனே அவளைத் தேற்றி நடந்தது என்னவென்று கேட்க "ஐயோ! இறந்துபோன அண்ணி இதோ வந்து என்னை இழுத்துப்போட்டு உலக்கையால் அடித்தாளே, நான் விளக்குமாத்தால் தான் அடித்தேன்! அவளின் உலக்கை அடியை என்னால் வாங்கமுடியுமா? இதோ அந்த இருட்டிலிருந்து என்னை மறுபடியும் உறுத்துப் பார்க்கிறாள், அந்தா பல்லைக் கடிக்கிறாள், ஐயோ! என்ன செய்வேன்! இதோ மறுபடியும் உலக்கையை எடுக்கிறாளே! என்று அவள் சொல்லும்போதே, அங்கே ஓரிடத்திலிருந்து உலக்கையானது திடீரென்று விண்ணில் இருந்துவந்து அவள் முதுகில் தாக்கியது, சுற்றிலும் உள்ளவர்கள் உலக்கையைப் பிடித்தார்கள். அவர்கள் பிடிக்கையில் உலக்கை அவர்கள் கையை விட்டு நழுவிப்போயிற்று.

இவ்வாறு இறந்துபோனவளின் ஆவி ஒவ்வொரு இரவும் வந்து வருத்துவதாயிற்று. வீட்டில் எத்தனையோ பரிகாரங்களும் மந்திரங்களும் செய்துபார்த்தும் ஒன்றும் பயன்படவில்லை. நாட்கள் செல்லச்செல்ல வீட்டில் கூக்குரல் மிகுதிப்படலாயிற்று. தாயும், மகளும் படுக்கையில் இருந்து திடீரென்று மேலே தூக்கிவீசப்பட, பொத்தென்று கீழே விழுந்து கதறினார்கள், உண்ணுஞ் சோற்றிலே அசுத்தமான பொருட்கள் வந்து வீழ்ந்தன, ஒவ்வொரு நாளும் விளக்குமாற்றினால் அடிபட்டார்கள்.

(தொடரும்)

சொல்லின் செல்வர்
இரா.செல்வவழவேல்

> அமைச்சர்களைத் தெரிவுசெய்வதிலும், உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பதிலும், இந்திய வெளிவிவகாரச் செயலாளர் குர்திஸ் உடனான சந்திப்பின் போதும், முதலமைச்சர் அலுவலகத்தை பொறுப்பேற்றுக் கொண்டபோதும், சங்கானையில் பிரதேச சபை கட்டடத்தில் முதலமைச்சர் நாடாவை வெட்டும்போது நாடாவை தாமும் பிடித்துக்கொண்டதிலும், இரணைமடு குளத்திலிருந்து நீரை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரும் திட்டக் கலந்துரையாடலிலும், இப்போது அமைச்சரவைக் கூட்டத்தில் முதலமைச்சர்கள் கலந்து கொள்ளவேண்டுமென அரசு அறிவித்திருப்பதற்கு முதலமைச்சரை முந்திக்கொண்டு பதிலளித்திருப்பதிலும், ஜனாதிபதி தலைமையில் முதலமைச்சர்களுக்கான மாநாடு ஒன்று நடைபெறவுள்ளதாக செய்திகள் வெளியாகியதும், அதற்கும் முதலமைச்சரை முந்திக்கொண்டு கருத்துத் தெரிவித்திருப்பதிலும் மாவையின் முந்திரிக்கொட்டை, மன்னிக்கவும் நிழல் செயற்பாடுகளை அவதானிக்கலாம்.



# நிழல் முதல்வர் மாவை

— அலசுவது - மதியூகி —

வடக்கு மாகாண சபையின் முதல் அமர்வு இம்மாதம் 25ஆம் திகதி இடம் பெறும். கைதடியில் முன்னர் வட மாகாண சபையின் பிரதம செயலாளருக்காக அமைக்கப்பட்ட கட்டடத் தொகுதியே இப்போது வடக்கு மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளது.

உறுப்பினர்கள் தமது கன்னி உரையை ஒரு வாரத்துக்கு முன்னரே தயாரிக்கத் தொடங்கிவிட்டார்கள். கூட்டமைப்பினரின் பாராளுமன்ற உறுப்பினர்களை விடவும் வட மாகாண சபையின் உறுப்பினர்கள் பிரபல்மாகியிருக்கின்றார்கள். பாராளுமன்றத்தில் இத்தனை வருடங்களாக கூட்டமைப்பின் சார்பில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் மீது இல்லாத எதிர்பார்ப்பு இப்போது மாகாண சபை உறுப்பினர்கள்மீது ஏற்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் வெற்றி பெற்றபோது காட்டப்படாத பரபரப்பு, வடமாகாண சபைத் தேர்தல் வெற்றியில் காட்டப்பட்டுள்ளது. பதின்மூன்று பாராளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். அவர்களும் தமது உறுப்புரிமையை தமிழ் மக்களுக்கான வேலைத்திட்டமாக பிரயோகித்திருந்தால் பல நன்மைகளை தமிழ் மக்கள் பெற்றிருக்கலாம். துரதிஷ்டவசமாக அவ்வாறு சிந்திக்காமல் பாராளுமன்ற உறுப்புரிமையை ஏற்றுக்கொண்டவர்கள் தத்தமது சொகுசுக்கும், சுய இலாபங்களுக்காகவும், தமது குடும்பங்களின் தேவைகளை பூர்த்திசெய்வதற்கும் பாவித்துக்கொண்டிருக்கின்றனர்.

பாராளுமன்ற உறுப்புரிமையை வைத்துக் கொண்டு பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத்தான் போகவேண்டும், அதை நாம் நிராகரிக்கின்றோம். ஆகவே தற்போதைக்கு பாராளுமன்ற உறுப்புரிமையை வைத்து எதையும் செய்யமுடியாது என்பதுதான் கூட்டமைப்பின் அரசியல் பதில்ளிப்பாக இருக்கின்றது. தமிழ் மக்களும் தமது பெயரால் பெறப்பட்ட பாராளுமன்ற உறுப்புரிமைகள் தொடர்பில் கணக்கில் எடுப்பதில்லை. அடுத்த பாராளுமன்றத் தேர்தலின்போதுதான் இனி அதைப்பற்றிச் சிந்திப்பார்கள். அதுதான் தமிழ்த் தேசியத் தன்மானத் தமிழர்களுக்கு சரியான நடைமுறையாகவும் இருக்கமுடியும்.

வடக்கு மாகாண சபைக்கு தெரிவு செய்யப்பட்ட கூட்டமைப்பின் உறுப்பினர்கள் தமது பதவிப்பிரமாணங்களை ஒருவாறு முடிவுக்குக் கொண்டுவந்துள்ளனர். இறுதியாக சங்கானையில் ஈ.பி.ஆர்.எல்.எப்.பின் உறுப்பினர் தனது கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் அங்கு வந்திருந்தபோதும் அவருக்கு அறிவிக்காமல் முதலமைச்சருக்கு நேரம் எப்போது கிடைக்கும் என்பதை கெஞ்சி மன்றாடித் தெரிந்துகொண்டு தனது பதவிப் பிரமாணத்தை செய்ததுதான் பெரும் நகைச்சுவையாகும்.

முன்னர் பாராளுமன்ற உறுப்பினராக பதவியேற்றபோது புதுச்சட்டை தைத்து பல தடவை ஒத்திகை பார்த்துக்கொண்டு பாராளுமன்றத்தில் பதவிப்பிரமாணம் செய்து கொண்டதை மறந்து சிவாஜிலிங்கம் இம்முறை மாகாண சபைக்கான பதவிப்பிரமாணத்தை முள்ளிவாய்க்காலில் செய்தது பெரும் ஏமாற்றுவித்தை என்று அவரது கட்சிக் காரர்களே விமர்சித்துள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் மூன்று உறுப் பினர்கள், அதாவது வவுனியாவில் தமது தம்பியார் உட்பட மூவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்ட நிகழ்வை அச்சமயம் வவுனியாவிலேயே தங்கியிருந்த அக்கட்சியின் தலைவர் சுரேஷ் பங்குகொள்ளாமல் நிராகரித்தார்.

இவற்றைப் பார்க்கும்போது வடக்கு மாகாணசபை சீராக முன்செல்லக் கூடாது என்று சிந்திப்பவர்களின் பட்டியலில் முதன்மையானவராக சுரேஷ் இருக்கின்றாரோ என்றும் எண்ணத் தோன்றுகின்றது.

எது எப்படியாக இருந்தாலும் கூட்டமைப்புக் குள் இருந்துகொண்டு எதையாவது செய்தால் சரிதான். இல்லாவிட்டால் அடுத்த விநாடிகளிலேயே சுரேஷ் துரோகியாக்கிவிடுவார்கள்.

இவ்வாறான இழுபாடுகள் தொடர்ந்து கொண்டிருந்தபோது, தமிழரசுக் கட்சியின் அரசியல் சாணக்கிய வெற்றிகளும் தொடர்ந்து கொண்டிருப்பதை பலர் கவனிக்கவில்லை. மாகாண சபைத் தேர்தலுக்குமுன்னர் தமிழரசுக்கட்சி மாவை சேனாதிராஜாவையே முதலமைச்சர் வேட்பாளராக கூட்டமைப்பு சார்பில் களம் இறக்குவது என்று கோரிக்கை விடுத்ததையும், பின்னர் திரைமறைவுச் சந்திப்புக்கள், கொடுக்கல்வாங்கல்கள் என பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் மற்றும் சமரசங்களுக்குப் பின்னர் விக்கினேஸ்வரனை முதலமைச்சராக நிறுத்த இணக்கம் காணப்பட்டது எல்லோரும் அறிந்ததே.

இந்த சமரசங்களில் எழுதப்படாத உடன் பாடொன்றையும் தமிழரசுக்கட்சி உறுதிப் படுத்திக் கொண்டிருப்பதை இப்போது நடக்கும் முக்கியமான சம்பவத்தின் ஊடாக காணமுடிகின்றது. அதாவது மாவை சேனாதிராஜா வடக்கு மாகாண சபையின் நிழல் முதலமைச்சராக செயற்படுவார் என்பதுதான்.

தேர்தல் முடிந்து ஒரு மாதகாலம் நிறைவடைந்துவிட்டுள்ளது. இதற்குள் முதலமைச்சர் விக்கினேஸ்வரனின் நிழலாக மாவை தொடர்வதை அவதானிக்கலாம். அதற்கு இன்னொரு காரணம், முதலமைச்சரை வேறு யாரும் அணுகிவிடக்கூடாது என்பதிலும், முதலமைச்சரின் செயற்பாடுகளை கண்காணிக்கும் திட்டமுமாகவும் இருக்கும். முக்கியமாக கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சிகளின் தலைவர்கள் முதலமைச்சரை நெருக்கமாக இழுத்துக்கொண்டுவிடக் கூடாது என்பதாகும். இன்னொரு காரணம் முதலமைச்சருக்கு அரசியல் அனுபவம் இல்லை என்பதால் அரசியல் அனுபவமுள்ள ஒருவர் பக்கபலமாக இருக்கவேண்டும்.

அமைச்சர்களைத் தெரிவுசெய்வதிலும், உறுப்பினர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைப்பதிலும், இந்திய வெளிவிவகாரச் செயலாளர் குர்திஸ் உடனான சந்திப்பின் போதும், முதலமைச்சர் அலுவலகத்தை பொறுப்பேற்றுக் கொண்டபோதும், சங்கானையில் பிரதேச சபை கட்டடத்தில் முதலமைச்சர் நாடாவை வெட்டும்போது நாடாவை தாமும் பிடித்துக்கொண்டதிலும், இரணைமடு குளத்திலிருந்து நீரை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரும் திட்டக் கலந்துரையாடலிலும், இப்போது அமைச்சரவைக் கூட்டத்தில் முதலமைச்சர்கள் கலந்துகொள்ளவேண்டுமென அரசு அறிவித்திருப்பதற்கு முதலமைச்சரை முந்திக்கொண்டு பதிலளித்திருப்பதிலும், ஜனாதிபதி தலைமையில் முதலமைச்சர்களுக்கான மாநாடு ஒன்று நடைபெறவுள்ளதாக செய்திகள் வெளியாகியதும், அதற்கும் முதலமைச்சரை முந்திக்கொண்டு கருத்துத் தெரிவித்திருப்பதிலும் மாவையின் முந்திரிக் கொட்டை, மன்னிக்கவும் நிழல் செயற்பாடுகளை அவதானிக்கலாம்.

அமைச்சரவைக் கூட்டங்களில் முதலமைச்சர்களும் கலந்துகொள்ளும் நிலைப்பாட்டை அரசு எடுத்திருப்பதை வரவேற்கலாம். முதலமைச்சர்களும், மத்திய அரசின் அமைச்சர்களும் இலங்கையின் சட்டப்படி சம அந்தஸ்துக்குரியவர்கள் என்பது மட்டுமல்ல மத்திய அரசின் முக்கிய தீர்மானங்களையும், வேலைத்திட்டங்களையும் ஜனாதிபதி தலைமையில் அமைச்சர்கள் கூடிஆராயும் முக்கிய கூட்டத்தில் முதலமைச்சர்களும் கலந்து கொண்டால் மத்திய அரசுக்கும் மாகாண அரசிற்கும் புரிந்துணர்வு ஏற்படும். மாகாணங்களின் கோரிக்கைகளை முன்வைக்கும் சிறந்த வாய்ப்பு ஏற்படும். மத்திய மற்றும் மாகாண வேலைத்திட்டங்களை சீராக முன்னெடுப்பதற்குத் தடையாக இருக்கக் கூடிய பிரச்சினைகளை அடையாளம் காணவும், அவற்றைத் தவிர்க்கவும் இந்தக் கூட்டம் வாய்ப்பளிக்கும் அதுமட்டுமல்லாமல் 13ஆவது திருத்தச் சட்டத்திலும் இவ்வாறான ஒரு ஏற்பாடு உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதேபோல் ஜனாதிபதி தலைமையில் முதலமைச்சர்கள் மாநாடு நடைபெறப் போவதாக வெளியாகியுள்ள செய்தியையும் நாம் சாதகமாகப் பார்க்கலாம். மாகாண முதலமைச்சர்கள் கூடுவது வழமையான நிகழ்வுதான். அவ்வாறு கூடும் முதலமைச்சர்கள் மாகாணங்களின் அதிகாரங்களில் மத்திய அரசின் தலையீடுகள் தொடர்பாகவும், மாகாண அரசுகளின் சவால்கள் தொடர்பாகவும் விவாதித்துவிட்டு சம்பிரதாயத் தீர்மானங்களை எடுத்துவிட்டு கலைந்து விடுவார்கள். இதனால் பயனேதும் எட்டப்படுவதில்லை.

ஆனால் ஜனாதிபதி தலைமையில் முதலமைச்சர்கள் மகாநாடு நடைபெற்றால் தமது பிரச்சினைகளையும், தாம் எதிர் கொள்ளும் சவால்களையும் ஜனாதிபதிக்கு கூட்டாக வெளிப்படுத்தலாம். அர்த்தமும், அழுத்தமுமான தீர்மானங்களை நிறைவேற்றலாம். அதற்குப் பதிலளிக்கும் பொறுப்பை ஜனாதிபதி தட்டிக்கழிக்க முடியாத நிர்ப்பந்தம் உருவாகும்.

இவ்வாறு கிடைக்கும் சந்தர்ப்பங்களை நமக்குரியவகையில் பயன்படுத்திக்கொள்ள நாம் முற்படாமல் அதை விமர்சிப்பதும், நிராகரிப்பதும், ஒற்றை ஆட்சியை திணிக்கவே அரசு இவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்றது என்றெல்லாம் கூறுவது முட்டாள்தனமாகும். ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்டு அதற்கு விசுவாசமாகவே பதவிப்பிரமாணங்கள் செய்து பாராளுமன்ற சுகபோகங்களை அனுபவிக்கும் இவர்கள் வெறுமெனவே சந்திப்புக்களை விமர்சிப்பது வேடிக்கையாகும்.

மாகாண சபையின் கன்னி அமர்விலும், அதைத்தொடர்ந்து மாகாண சபையின் போக்கிலும் நிழல் முதல்வரின் செயற்பாடுகள் நிஜ முதல்வருக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும். முதலமைச்சரின் சுயாதீன முடிவுகளிலும், தீர்மானங்களிலும் நிழல் முதலமைச்சரின் தலையீடு இருக்கவே போகின்றது. அதை கூட்டமைப்பிலுள்ள ஏனைய கட்சியினர் எவ்வாறு சகித்துக் கொள்ளப்போகின்றார்கள் என்பதையும், தமிழரசுக்கட்சியின் தலையீடுகள் எவ்வாறு இருக்கப் போகின்றது என்பதையும் தமிழ்த் தேசிய ஊடகங்கள் தவறாமல் செய்திகளாக்கி வியாபாரமாக்கும் என்பதில் சந்தேகமில்லை.

# இந்தியப் பிரதமராகும் கனவில் நரேந்திர மோடி



தொகுப்பு: வேணு கிருஷ்ணா

**நாடு** முழுவதும் சுற்றுப்பயணம் செய்து தீவிர பிரசாரம் மேற்கொண்டு வருகிறார் பா.ஜ. கவினுடைய பிரதமர் வேட்பாளராக தெரிவுசெய்யப்பட்டுள்ள நரேந்திர மோடி. குறுகிய கால இடைவெளியில் இருண்டு தடவைகள் தமிழகத்திற்கு விஜயம் மேற்கொண்டுள்ள மோடி, சென்னையில் நடைபெற்ற நானி பல்கிவாலா அறக்கட்டளை நிகழ்ச்சியில் பேசியபோது,

இந்தியாவின் வெளியே வசிக்கும் இந்தியர்களையும் நாம் பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கு பிரச்சினை வரும்போது நாம் துணை நிற்கவேண்டும். அது இலங்கையில் வாழும் தமிழர் பிரச்சினை என்றாலும் சரிதான். வெளியுறவு கொள்கைகள் டெல்லியில் உள்ள அரசியல்வாதிகளால் முடிவுசெய்யப்படக் கூடாது. ஒவ்வொரு மாநிலத்துக்கும் அதில் பங்களிப்பு இருத்தல்வேண்டும். அடுத்த நூற்றாண்டு ஆசியாவின் நூற்றாண்டு மட்டுமல்ல, அது இந்தியாவின் நூற்றாண்டாக இருக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

## காங்கிரசின் ஊழல்

அதேபோன்று, 80 எம்.பி.க்களை கொண்ட பெரிய மாநிலமான உத்தரப் பிரதேச நகரமான கான்பூரில் நடைபெற்ற பிரமாண்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பேசினார். அப்போது மத்தியில் உள்ள ஊழல் மலிந்த காங்கிரஸ் அரசை அகற்றும்படி, கட்சித்தொண்டர்களுக்கு அவர் அழைப்புவிடுத்தார். காங்கிரசின் ஊழலால் ஏழை மக்களின் வாழ்க்கை தொலைந்துவிட்டதாக குற்றஞ்சாட்டியதுடன் டெல்லியில் மத்திய அரசு காணாமல்போய்விட்டதாக தாக்குதல் தொடுத்தார்.

## வாக்கு வங்கி அரசியல்

அரசுக்கு ஒரே ஒரு மதம்தான் உண்டு. நாடுதான் அதற்கு முதல் முக்கியம். அதன் ஒரே சாசனம், அரசியல் சட்டம். ஆனால், ஆளும் காங்கிரஸ் கட்சியின் ஒரே மந்திரம், தேர்தலில் வெற்றி பெறுவதற்கான வாக்கு வங்கி அரசியல்தான். மக்களை பிளவுபடுத்துவதற்காக மதச்சார்பின்மை என்ற மந்திரத்தை முழங்கி, பிரிவினை அரசியலில் ஈடுபட்டு வருகிறார்கள். அதே நேரத்தில் பா.ஜனதா மக்களை ஒற்றுமைப்படுத்துவதற்காக பாடுபட்டுவருகிறது. வாக்கு வங்கி அரசியலை நாம் குழிதோண்டி புதைக்கவேண்டும். வளர்ச்சி சார்ந்த அரசியலில் நாம் நடை போடவேண்டும் என்கிறார், நரேந்திரமோடி. பாராளுமன்ற தேர்தலில், உத்தரப் பிரதேசத்தில் 40க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறவேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் பா.ஜனதா களம் இறங்கி உள்ளது. அந்த மாநிலத்தில் நடைபெற்ற முதல் பொதுக்கூட்டத்தில் பேசிய நரேந்திரமோடி, ராமர் கோவில் விவகாரம் பற்றி எதையும் கூறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பா.ஜ.க.வும் மோடியும்

மோடிக்கு அவருடைய கட்சியிலேயே பெரிய எதிர்ப்பு இருப்பதாகச் சொல்லி குழப்பம் ஏற்படுத்த சில ஊடகம் முனைகின்றது. கட்சியில் நிலவிவரும் கருத்துச் சுதந்திரம் காரணமாக கட்சித் தலைவர்கள் பலர் தேவையற்ற அறிக்கைகளைக் கொடுத்து சர்ச்சைகளில் மாட்டிக் கொள்கின்றனர், அல்லது கட்சிக்கு தர்ம சங்கடத்தை ஏற்படுத்துகின்றனர். இதை முதலில் சரி செய்யவேண்டும். மற்றப்படி, உண்மையில் பா.ஜ.க.வில் மோடிக்கு எந்த எதிர்ப்பும் இல்லை.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு கட்சியின் கொள்கை முடிவுகளை மேற்கொள்ளக்கூடிய உயர்மட்டக் குழுவான நாடாளுமன்றக் குழுவில் நரேந்திர மோடி இடம்பெற்றது முதல் வெற்றியாகும். அக்குழுவில் கட்சியின் வேறு எந்த முதல்வரும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. சமீபத்தில் கோவாவில் நடைபெற்ற பா.ஜ.க.வின் தேசிய செயற் குழுவில் நரேந்திர மோடியை தேர்தல் பிரசாரக் குழுவின் தலைவராக அறிவித்தது அடுத்துவர இருக்கும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கு ஏற்ற சரியான தேர்தல் யுக்தியாகும். இது நரேந்திர மோடிக்குக் கிடைத்துள்ள இரண்டாவது வெற்றி மட்டுமல்ல அவருக்குக் கிடைத்துள்ள மாபெரும் அங்கீகாரமும் ஆகும்.

பா.ஜ.க ஆட்சி நடத்துகின்ற மாநிலங்களில் செய்துள்ள சாதனையின் காரணமாக மத்தியில் பா.ஜ.க. ஆட்சி மீண்டும் அமைந்திடும் என்கிற நம்பிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது.

## மோடியும் முஸ்லிம்களும்

2002 இல் நடைபெற்ற குஜராத் வன்முறையைக் காரணம்காட்டி நரேந்திர மோடிக்கு எதிராகப் பத்தாண்டுகளாகப் பிரசாரம் செய்துவருகிறார்கள். ஆனால் குஜராத் மக்கள் இவற்றையெல்லாம் சிறிதும் பொருட்படுத்தாமல் நரேந்திர மோடியையே மீண்டும் மீண்டும் முதல்வராக தேர்ந்தெடுத்துள்ளனர்.

இடதுசாரிகள், காங்கிரஸ் தலைவர்கள், மதச்சார்பற்றவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் பே-ாலி அறிவுஜீவிகள் ஆகியோர் ஆங்கில ஊடகங்கள் சிலவற்றின் துணையோடு பா.ஜ.க.வினர் சிறுபான்மையினருக்கு எதிரானவர்கள் என்று பிரசாரம் செய்துவருகின்றனர். கடந்த 50 ஆண்டுகளாக நடைபெற்றுவரும் இந்தப் பிரசாரத்தால் பெருமளவு முஸ்லிம் மற்றும் கிறிஸ்துவ மக்கள் பா.ஜ.க.வைவிட்டு விலகியே இருந்துவந்தனர். பா.ஜ.க.வுக்கு எதிராகவே வாக்களித்தும் வந்துள்ளனர்.

ஆனால், குஜராத்தில் பா.ஜ.க. ஆட்சியால் தங்கள் வாழ்வில் மாற்றத்தையும் முன்னேற்றத்தையும் கண்ட குஜராத் முஸ்லிம்களில் பெரும்பாலோர் இன்று நரேந்திர மோடியின் தீவிர ஆதரவாளர்களாகவே மாறிவிட்டனர். குஜராத்தில் 8 சட்டமன்றத் தொகுதிகளில் முஸ்லிம்கள் பெரும்பான்மையினராக இருந்து வருகின்றனர். கடந்த தேர்தலில் 6 தொகுதிகளை பா.ஜ.க. கைப்பற்றியுள்ளது. முஸ்லிம்களின் ஆதரவு இல்லாமல் இது சாத்தியப்படாது.

60 ஆண்டு கால சுதந்தர பாரதத்தில் குஜராத்தில் மதக் கலவரம் நடக்காதது மோடி ஆட்சிசெய்த பத்தாண்டு காலத்தில் மட்டும்தான். குஜராத் மட்டுமல்ல, பா.ஜ.க. ஆட்சி நடைபெற்றுவரும், நடந்த மாநிலங்கள் எதிலும் மதக்கலவரம் நடைபெறவில்லை. சிறுபான்மையினர் துன்புறுத்தப்படுகின்றனர் என்கிற குற்றச்சாட்டு எதுவும் எழவில்லை. இதற்கு மாறாக இன்று அதிகளவில் இந்து - முஸ்லிம் மதமோதல்கள், கேரளம் மேற்கு வங்கம், உத்தரப் பிரதேசம், மகாராஷ்டிரா, அசாம் போன்ற மாநிலங்களில்தான் காணப்படுகின்றன.

நரேந்திர மோடியின் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் பொருளாதாரக் கொள்கையினால்தான் குஜராத் முஸ்லிம் சமுதாயம் மிக அதிகமாகப் பலனடைந்துள்ளது என்கிறார் மௌலானா வாஸ்தன்வி. குஜராத் தலைநகர் அகமதாபாத்தில் சபர்மதி நதி தூய்மைப்படுத்தப்பட்டு கரைகளில் வசித்துவந்த 13,000 குடும்பங்கள் அப்புறப்படுத்தப்பட்டன. அவற்றில் 68% பேர் முஸ்லிம்கள். அவர்கள் குடியிருக்க அடுக்கு மாடிக் குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. நரேந்திர மோடி அரசு மத அடிப்படையில் எவ்வித பாகுபாட்டையும் காண்பிக்கவில்லை என்பதற்கு இது ஓர் உதாரணம்.

இந்தக் காரணங்களால் குஜராத் மட்டுமல்ல நாடெங்கிலும் உள்ள முஸ்லிம்கள் கணிசமான அளவில் பா.ஜ.க.வுக்கு, வாக்களிக்கத் தயாராக இருக்கின்றனர்.

## மோடி என்ன செய்ய வேண்டும்?

* கட்சியின் வளர்ச்சிக்காக எண்ணற்றோர் காலம் காலமாக பிரதிபலன் பாராமல் பணியாற்றிவருகின்றனர். தலைவர்கள் தொடங்கி சாதாரண தொண்டர்கள்வரை அனைவருக்கும் மரியாதைகொடுத்து அவர்களுடைய அனுபவத்தைக் கட்சிக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ளவேண்டிய மிகப் பெரிய பொறுப்பு நரேந்திர மோடிக்கு உள்ளது.

* பல ஆர்.எஸ்.எஸ். குடும்ப அமைப்புகள் நாடு தழுவிய அளவில் மிகப்பெரிய அளவில் செயற்பட்டுவருகின்றன. கட்சி அரசியலில் ஆர்வம் இல்லாத இந்த அமைப்புகள் பா.ஜ.க.வுக்காக ஒரு வாக்கு வங்கியை உருவாக்கி வந்துள்ளன. அவர்களை மதித்து உடன் அழைத்துச் செல்ல வேண்டிய பொறுப்பும் மோடிக்கு உள்ளது.

* ஹிந்துத்துவா கொள்கையை சிவ-சேனா மற்றும் அகாலிதளம் தவிர வேறு எந்த ஒரு கட்சியும் வெளிப்படையாக அங்கீகரித்ததில்லை. மற்ற மாநிலக் கட்சிகள் பா.ஜ.க.வின் வெற்றிவாய்ப்பை நம்பும்போது ஆதரிக்க முன்வருவர். எனவே மோடி மாநிலக் கட்சிகளைப் பற்றி பெரிதும் கவலைப்படாமல் பா.ஜ.க.வின் சொந்த வாக்கு வங்கியை பலப்படுத்தவேண்டும்.

## ஹிட்லரின் ஜேர்மனியும் மோடியின் இந்தியாவும்

ஹிட்லர் என்னும் ஆளுமை உருவான கதையும் அவர் ஜெர்மனியில் ஆட்சியைக் கைப்பற்றிய வரலாறும் The Rise and Fall of Third Reich இல் விவரிக்கப்பட்டுள்ளது. ஹிட்லர் ஏன், எவ்வாறு யூதர்களைத் தேர்ந்தெடுத்தான், எப்படி வெறுப்பு அரசியலை வளர்த்தெடுத்தான், யூத எதிர்ப்பை எப்படி ஒரு சித்தாந்ததமாக வடிவமைத்தான், அரசு இயந்திரத்தைப் பயன்படுத்தி எப்படித் தன் கனவைச் செயற்படுத்தத் தொடங்கினான் என்பது இந்தப் புத்தகத்தில் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஹிட்லரையும் நரேந்திர மோடியையும் ஒப்பிடுவது அல்ல இந்தக் கட்டுரையின் நோக்கம். மாறாக, ஹிட்லரின் ஜெர்மனியையும் மோடியின் இந்தியாவையும் அருகருகே நிறுத்திவைத்து ஒப்பிடுவதாகும்.

யூதர்களுக்கு எதிரான ஹிட்லரின் வெறுப்பு பிரசாரத்தை ஜெர்மானியர்கள் ஆட்சேபிக்கவில்லை. அதில் பெரிதளவும் உண்மை இருப்பதாக அவர்கள் நினைத்தனர். யூதர்களை ஜெர்மானியர்களாக அவர்களால் ஏற்கமுடியவில்லை. யூதர்களுக்குத் தேச பக்தி இல்லை என்றும் அவர்கள் தனியொரு குழுவாக இருக்கிறார்கள் என்றும் நமக்கு வரவேண்டிய வாய்ப்புகளை தட்டிப் பறித்துக் கொள்கிறார்கள் என்றும் ஜெர்மானியர்கள் நம்பினார்கள். இந்த பெரும்பான்மை நம்பிக்கையின்மீதே ஹிட்லர் தன் வெறுப்பு அரசியலைக் கட்டமைத்துக்கொண்டான். இந்த வெறுப்பு அரசியலைக் கொண்டுதான் அவன் யூதர்களைக் கொல்லத் தொடங்கினான்.

நரேந்திர மோடியும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பினரும் இந்துக்களையே இந்தியர்களாகக் காண்கின்றனர். இஸ்லாமியர்களை இந்துக்களுக்கு எதிரானவர்களாகவே அவர்கள் தொடர்ந்து முன்னிறுத்தி வந்திருக்கிறார்கள். மோடி வெளிப்படையாகவே இஸ்லாமியர்களுக்கு எதிராகப் பொதுக்கூட்டங்களில் உரையாடியிருக்கிறார். 2002 குஜராத் படுகொலைகளில் மோடிக்குப் பங்கு இருக்கிறது என்பது மட்டுமல்ல, 2002 சம்பவத்தை தனது உந்து பலகையாகப் பயன்படுத்தி மேலேழும்பி வந்தவர் அவர். சந்தேகத்துக்கு இடமின்றி அதிலிருந்து பெரும் ஆதாயமும் அடைந்திருக்கிறார்.


அந்தவகையில், ஹிட்லர், மோடி ஆகிய இருவருடைய எழுச்சியின் அடித்தளத்திலும் வெறுப்பு அரசியல் காணக்கிடைக்கிறது என்பதை யாராலும் மறுக்கமுடியாது. மோடி யாரையும் நேரடியாகக் கொல்லவில்லை என்பதை ஒரு வாதமாக முன்வைக்கமுடியாது. ஹிட்லரும்தான் யாரையும் நேரடியாகக் கொல்லவில்லை. ஆனால் நிச்சயமாக ஹிட்லரின் கரங்களில் படிந்த அதே இரத்தக் கறை மோடியின் கரங்களிலும் படிந்திருக்கிறது. அந்தக் கரங்களில் கறை அதிகம், இதில் குறைச்சல் என்று வேண்டுமானால் ஒருவர் வாதிடலாம்.

## தொழில்நுட்பம்

# 11 இலட்சம் திரைப்படங்களை சேமிக்கக் கூடிய தொழில் நுட்பம்!

ஓப்டிகல் விஞ்ஞானத்தை 1873 ஆம் ஆண்டே எர்னஸ்ட் அப்பே கண்டுபிடித்திருந்தாலும் அதில் மாபெரும் முன்னேற்றமோ அல்லது பெரிய கண்டுபிடிப்போ இல்லை. அதை போக்கும் வண்ணம் ஸ்வின்பர்ன் பல்கலைகழகத்தில் விரிவுரையாளர் ஒருவரின் தலைமையில் பொறியியல் விஞ்ஞானிகள் ஒரு புதுவகை இறுவட்டை கண்டுபிடித்திருக்கின்றனர். இது சிடி, டிவிடி, ப்ளுரே தாண்டி ஒரு பெட்டாபைட்(10,48,576 கிகா பைட்) கொள்ளளவு கொண்டது. இந்த டிஸ்கின் மூலம் 11 லட்சம் டிவிடி குவாலிட்டி திரைப்படங்களை சேமிக்கவோ (1ஜிபி குறைவாக ஒரு எம்பி 4 திரைப்பட அளவின்படி கணக்கிடப்பட்டது) அல்லது 10 வருடம் 6 மாத ஹெச்டி தொலைக்காட்சி நிகழ்ச்சியும் அல்லது 18 வருட எஸ் டி தொலைக்காட்சியியை இந்த டிஸ்கில் அடக்கி விடலாம்.

இது ஃபோக்கல் பாயின்ட் எனப்படும் லேசரின் நுணுக்கம் ஒரு மனிதனின் முடியை பத்தாயிரமாய் வகுந்தால் எப்படி இருக்குமோ அந்த அளவுக்கு மிக துல்லியமான ஃபோக்கல் பாயின்ட் டெக்னாலஜி மூலம்தான் இந்த டிஸ்க் ரெடியாகி உள்ளது. மேலும் இது 100வீதம் வேகம் கொண்டது.






புகைப்படங்களை 360 டிகிரியில் எடுக்கக்கூடிய Ricoh Theta எனும் வயர்லெஸ் கமெரா உருவாக்கப்பட்டுள்ளது. 400 டொலர்கள் பெறுமதியான இக்கமெராவில் 4GB நினைவகம் காணப்படுகின்றது. இதன் மூலம் 1,200 படங்களை எடுக்கக்கூடிய வசதி காணப்படுகின்றது.

மேலும் 5 மெகாபிக்சல்கள் உடைய சென்சாரை கொண்டுள்ள இதன் மின்கலத்தினை ஒரு முறை சார்ஜ் செய்த பின்னர் 200 புகைப்படங்களை எடுக்க முடியும்.

# 360 டிகிரியில் புகைப்படம் எடுக்கும் புதிய கமெரா

இதன் வயர்லெஸ் இணைப்பு மூலம் iPhone 4S, iPhone 5 போன்றவற்றினை இணைக்கக்கூடியதாக இருக்கின்ற போதிலும் அன்ரோயிட் சாதனங்களை பயன்படுத்த முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.



## பேஸ்புக்குக்கு இணையாக நட்பு வளையம்

பிரித்தானியாவைச் சேர்ந்த ஒரு தமிழச்சியால் முகநூலுக்கு (facebook) இணையாக 'நட்புவளையம்' www.natpu-valayam.com எனும் ஒரு சமூகவலை இணையத் தளம் உருவாக்கப்பட்டுள்ளது. முகநூலைப் பாவிக்கும் அனைத்து உறவுகளும், இந்த 'நட்புவளையத்தையும்' உபயோகிக்கலாம்.

இதன் முகப்பு பக்கம் ஏறக் குறைய முகநூல் போலவே காட்சி அளிக்கிறது. மேல் பக்கம் அதே நீலக்கலர். சற்றே மாறுபட்டு பட்டி உள்ளது. உள்நுழை விவரங்கள் மற்றும் புதிய கணக்கை உருவாக்கும் பகுதியும் முகநூல் படிதான் உள்ளது.

நடுவில் உலக வரைபடம் நட்பு வளையத்தை இணைக்கும் விதமாக அமைந்து உள்ளது. கீழ் பக்கம் ஏற்கனவே நட்பு வளையத்தில் இணைந்தவர்களின் புகைபடத்தோடு அவர்களின் சுயவிவர சுட்டியை தாங்கி உள்ளது. அதற்கும் கீழே இரண்டு விளம்பரங்கள் மற்றும் இத்தளத்தின் விவரங்கள் புட்டர் பகுதில் இடம் பெறுகிறது. இந்த நட்பு வளையத்தை நீங்களும் உபயோகித்துப் பாருங்கள். தமிழன் எங்கிருந்தாலும் பெருமைதான்!

## காரிலும் இருக்கும் கறுப்பு பெட்டி

கறுப்பு பெட்டி என்றால் அனைவருக்கும் நினைவுக்கு வருவது, அது விமானத்தில் இருக்கும் என்றுதான். அந்த கறுப்பு பெட்டி இப்போது, பேரூந்து மற்றும் கார் போன்ற வாகனங்களுக்கும் பொருத்தப்பட உள்ளது. விமானத்தில் ஏதேனும் விபத்து நிகழ்ந்தால், அந்த விபத்து குறித்த முக்கிய தகவல்களை நிஜத்தை கூறும் கருவியாக இருப்பதுதான் கறுப்பு பெட்டி.

கறுப்பு பெட்டி என்பது, 'ஈவென்ட் டேட்டா ரெக்கார்டர்' அதாவது, நடந்த நிகழ்வுகளை பதிவு செய்ய பயன்படுவது. இது தற்சமயம் கார்களில் வரப்போகிறது என்பது ஆச்சரியமான விஷயம். இதன் மூலம், கார்களில் ஏற்படும் விபத்துகளின் உண்மையான காரணம், இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு உண்மையை விளக்கும் கருவியாக, போலீஸ் விசாரணையின்போது நீதிமன்றங்களில், கறுப்பு பெட்டி ஓர் சாட்சியாக செயல்படக்கூடிய முக்கியமான கருவி ஆகும்.

காரில் கறுப்பு பெட்டி பொருத்துவதன் பயன் குறித்த ஆய்வில், கறுப்பு பெட்டி பொருத்திய கார்களில், ஓட்டுனர்களால் 10 சதவீதம் அளவு விபத்துகள் குறைந்துள்ளது என அறியப்பட்டுள்ளது.




## தடையைத் தகர்க்க...!

தடை செய்யப்பட்ட தள தகவல்களை எப்படி தெரிந்துகொள்வது? சில இடங்களில் கணினி தகவல் சம்பந்தப்பட்ட தளங்களை கூட இண்டர்நெட் சேர்வீஸ் புரைவைடர்கள் ஏதாவது ஒரு காரணத்துக்காக தடை செய்திருப்பார்கள் அந்த நேரத்தில் புராக்ஸி சேர்வரும் கூட உதவாது.

அப்படியான நிலை ஏற்படும்போது பின்வரும் வழியினை பின்பற்றவும். அதற்கு உங்களிடம் அவசியம் ஒரு மின்னஞ்சல் முகவரி இருக்க வேண்டும். உதாரணத்திற்கு ஜிமெயிலை எடுத்துக்கொள்வோம்.

உங்கள் ஜிமெயில் மின்னஞ்சலை திறந்து அனுப்ப வேண்டிய முகவரியில் www@web2mail.com என்பதை எழுதவும். இனி சப்ஜெகட் என்பதில் தடை செய்யப்பட்ட இணையத்தளத்தின் முகவரியை கொடுக்கவும்.

இனி வேறு ஒன்றும் செய்யவேண்டாம் அப்படியே மின்னஞ்சலை அனுப்பி விடுங்கள் குறைந்த பட்சம் நான்கு மணி நேரத்திற்குள் தடை செய்ப்பட்ட தளத்தில் உள்ள தகவல்கள் உங்கள் இன்பாக்ஸில் இருக்கும். சில நேரம் தாமதமாகலாம் ஆனாலும் தகவல் எப்படியும் வந்துவிடும்.

இதில் ஒரு பிரச்சினையும் இருக்கிறது. அதாவது நீங்கள் பார்க்க விரும்பும் தளத்தில் வீடியோ அல்லது இமேஜ்கள் இருக்குமானால் அவை உங்கள் இன்பாக்ஸிற்கு வராது டெக்ஸ்ட்டுகள் மட்டுமே வரும்.


தினம்தோறும் கல்விமுரசு இணைப்பு

தினமுரசு நாளிதழ்

ரூ.10/= மட்டுமே

இப்போது நீங்கள் அறிய விரும்பும் அன்றாடச் செய்திகள் அனைத்துக்கும்

- உள்நாட்டு - வெளிநாட்டு - விளையாட்டுச் செய்திகள்
- உள்நாட்டு - உலக - இந்தியச் செய்திகள்
- கனதிமிக்க கட்டுரைகள்
- தேடித் தொகுத்த பல்சுவை அம்சங்கள்
- சினிமா
- நாள் ராசி பலன்
- வேலைவாய்ப்புத் தகவல்கள்
- மருத்துவக் குறிப்புகள்
- பத்திகள் - "பரமர் சங்கமம்", "பதிவிறக்கப் பெட்டகம்"

A/L, O/L மற்றும் புலமைப் பரிசில் மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் விடைகளுடன் தினமும் வெளியாகின்றன!



# பாப்பா முரசு

இப்பகுதிக்கு சிறுவர்கள், மாணவர்களிடம் இருந்து தரமான ஆக்கங்கள் எதிர்பார்க்கப்படுகின்றது.



# சிறந்த வீரன்

தனது நாட்டு வீரர்களுள் சிறந்த வீரன் ஒருவனைத் தேர்ந்தெடுத்துப் பரிசளிக்க விரும்பினார், அரசர்.

அரசரும், அமைச்சரும் சிறந்த வீரனைக் கண்டறிய மாறுவேடத்தில் புறப்பட்டார்கள்.

ஓர் இடத்தில் நூறு சிலம்பாட்ட வீரர்களின் மத்தியில் ஒருவனாக நின்று கம்பைச் சுழற்றி வீசி அனைவரையும் அடித்து விரட்டினான் ஒரு சிலம்பாட்ட வீரன்.

"அரசே, இவன் வீரன்" என்றார் அமைச்சர். அரசர், ஆமாம் என்பது போலத் தலையசைத்துவிட்டு பயணத்தைத் தொடர்ந்தார்.

அடுத்து ஓர் இடத்தில், ஐம்பது வாள் வீரர்களைத் தனி ஒருவனாக நின்று வாட்போர் புரிந்து ஓடச் செய்தான், ஒரு வாள் வீரன்.

"ஊம்... இவனும் வீரன்தான்..." என்றார் அமைச்சர்.

"ஆமாம்... மேலும் பார்ப்போம்" என்றார் அரசர் வேறு ஓரிடத்தில் கோயில் யானை ஒன்று மதம் பிடித்து, பாகனைத் தூக்கி வீசிவிட்டு ஓடிவந்து கொண்டிருந்தது.

அரசரும் அமைச்சரும் குதிரைகளை வீதியின் ஓரமாக நிறுத்தினர்.

மக்கள் பயத்தால் அலறியடித்துக் கொண்டு ஓடிக்கொண்டிருந்தனர்.

அப்போது எங்கிருந்தோ வந்த ஓர் இளைஞன், மதம் பிடித்த அந்த யானையை அடக்கி, அதை ஒரு கம்பத்தில் கட்டி வைத்தான்

"ஆகா! இவன் பெரும் வீரன்" என்றார் உற்சாகமாக அமைச்சர்.

அரசரும் தலையாட்டினார். பின்னர் இருவரும் அரண்மனையை நோக்கிச் செல்ல ஆரம்பித்தனர். அப்போது ஓர் இடத்தில் கூச்சல் கேட்டு, இருவரும் அங்கே சென்றனர்.

அங்கே, மக்கள் கூட்டத்தின் நடுவே ஓர் இளைஞன் நின்றுகொண்டிருந்தான். அவனுக்கு எதிரில் நின்ற ஒருவர் அவனைக் கடுஞ்சொற்களால் திட்டிக் கொண்டிருந்தார். உலகிலுள்ள அத்தனை இழிவான சொற்களையும் கொண்டு அந்த இளைஞனைத் திட்டினார். அவ்வப்போது அவனை அடிக்கப் போவது போலக் கையையும் ஓங்கிக் கொண்டிருந்தார்.

ஆனால், அந்த இளைஞனோ, சற்றும் முகம் சுளிக்காமல் இதமான வார்த்தைகளால், உண்மை நிலையை அந்த மனிதருக்கு விளக்கிக் கொண்டிருந்தான்.

இறுதியில் உண்மையை உணர்ந்து அமைதியடைந்த அந்த மனிதர், "தம்பி, உண்மை அறியாமல் உன்னை ஏசிவிட்டேன். என்னை மன்னித்து விடு" என்று கூறிவிட்டுச் சென்றார்.

மறுநாள், அரசவையில் - மன்னர் கையில் தங்கக்காசுகள் கொண்ட பரிசுக்குரிய பையை வைத்துக் கொண்டு தனது இருக்கையில் அமர்ந்திருந்தார்.

"அரசே, சிறந்த வீரனைத் தேர்ந்தெடுத்து விட்டீர்களா?" கேட்டார் அமைச்சர்.

"அதோ பாருங்கள்..." என்றார் மன்னர்.

அங்கே, அவர்கள் இறுதியாகப் பார்த்த அந்த இளைஞனை ஒரு காவலாளி அழைத்து வந்து கொண்டிருந்தான்.

வியப்புற்ற அமைச்சர், அரசே, மத யானையை அடக்கிய இளைஞன் வீரன் இல்லையா?" என்று கேட்டார்.

"ஊம்... அவன் வீரன்தான். ஆனால் சினமுற்ற மனம், மதம் பிடித்த யானையை விடவும் கொடியது. எதிரில் நின்றவர் முகம் கடுத்து இழிச்சொற்களால் திட்டிய போதும் கூட கொதிப்படைந்த தன் மனத்தை அடக்கி, தன் முகம் கோணாமல் நிதானமாகப் பேசிய இளைஞனே சிறந்த வீரன்" என்று சொல்லி, அந்த இளைஞனுக்குப் பரிசை அளித்தார் மன்னர்.

## வாரம் ஒரு திருக்குறள்



குடிசெயல் வகை

**குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாச் சுற்றும் உலகு.**


குற்றம் இல்லாதவனாய்க் குடி உயர்வதற்கான செயல் செய்து வாழ்கின்றவனை உலகத்தார் சுற்றமாக விரும்பிச் சூழ்ந்து கொள்வர்.

குறள்:1025

# உங்களுக்குத் தெரியுமா?

- மனிதனின் சிறிய மூளையில் ஒரு இலட்சம் நியூட்ரோன்கள் உள்ளனவாம்.
- நோர்வே, கிரீஸ் நாடுகளில் பேச்சுமொழியை "மாமியார் மொழி" என்றும் எழுத்து மொழியை "தாய்மொழி" என்றும் சொல்கிறார்கள்.
- இலத்தீன் மொழியில் குடை என்ற சொல்லுக்கு நிழல் என்று பொருள். முதலில் வெயிலுக்காகத்தான் குடை பயன்படுத்தப்பட்டது. பிறகுதான் மழைக்கும் பயன்படுத்த ஆரம்பித்தார்கள்.
- நம்ம ஊரில் புடோலங்காய் சுருண்டுவிடாமல் இருக்க அதன் கீழ் முனையில் கல்லைக் கட்டித் தொங்கவிடுவதுபோல, ஜப்பான் நாட்டில் தர்ப்பூசணிக் காய்களை வளர்க்கிறார்கள். காய் சின்னதாக இருக்கும்போதே, விரியும் தன்மையுடைய மெல்லிய டப்பாக்களை காய்களுடன் பொருத்தி விடுகிறார்கள். காய் பெரிதாக ஆகும்போது அது இருக்கும் டப்பா மாதிரியே சதுரமாக வளர்கிறது. இதனால் டப்பாக்களை அடுக்குவதுபோல தர்ப்பூசணிகளையும் அடுக்கி ஏற்றுமதி செய்வது எளிதாக இருக்கின்றது.
- நத்தையின் எடை 15 கிராம்தான் இருக்கும். ஆனால், 450 கிராம் எடையைக் கூட இழுத்துச் செல்லும் வலிமை உடையது.
- ஒரு சராசரி மனிதனுக்கு ஒருநாளைக்கு 1.5 லீற்றர் அளவுக்கு உமிழ்நீர் சுரக்கிறது என்று கணக்கிட்டுள்ளனர்.
- நட்டுவாக்கிளி எனப்படும் பெரிய தேளின் கொடுக்கில் சுமார் 0.5. மில்லிகிராம் நஞ்சு உள்ளது.
- நிலவின் ஒளியிலும் வானவில் தோன்றும். ஆனால், அது இரவில் தோன்றுவதால் நமது கண்களுக்குத் தெரிவதில்லை.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசு தரும் எண்ணம்



**போட்டியில் கலந்துகொள்பவர்கள் தாம் கல்வி கற்கும் தரத்தினை கட்டாயம் குறிப்பிட வேண்டும்.**

மேலே உள்ள படத்தினை வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றிற்கு பரிசு காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி: 21.10.2013

**வர்ணம் தீட்டும் போட்டி இல. 1034**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல:167,
யாழ்ப்பாணம்.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 1013

ல.கீர்த்திகா,
நாகம்மாள் கோயில் வீதி, உடுவில்.

பரிசுக்குரியவர்: 1013

பாராட்டுக்குரியவர்கள்

01. கு.டயூரி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
02. அ.அஷ்வின், கைதடி வடக்கு, நவபுரம்.
03. செ.பத்மபிரியா, கொழும்பு 13,
04. பா. தமிழ்பிரியன், மட்டுவில் தெற்கு, மட்டுவில்.
05. வி.செந்தூரன், சாவகச்சேரி,
07. தே.ரகுந்தினி, நெடுங்கேணி, ஒட்டுசுட்டான்.
08. த.பிரியா, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.



# கணக்குப் புதிர்

**பேருந்தின் இலக்கம் என்ன?**

அஞ்சலி மழை நாளில் பாரிஸ் புறநகர் பகுதியில் ஒரு வேலைக்காக சென்றுகொண்டிருக்கும் போது தனது அலுவலகக் கோப்புக்களை தொலைத்துவிட்டாள், கோப்புக்களை மீளப்பெறுவதற்காக பேருந்து நிலையத்தில் புகார் கொடுக்கச்சென்றாள்.

அங்கு அலுவலகர் பயணித்த பேருந்தின் இலக்கங்களை கேட்டார். ஆனால், அஞ்சலிக்கு தெளிவாக நினைவிருக்கவில்லை. எனினும், பேருந்தின் இலங்கள் தலைகீழாக பார்த்தாலும் வேறு வாசிக்கக்கூடிய இலக்கங்களாக இருக்கும் என்பதும் வாசிக்கக்கூடிய அந்த இலக்கத்தின் வர்க்கமூலம் அவளது அண்ணனின் வயதிற்கு ஒத்தது என்பதும் அவளுக்கு நினைவிருந்தது. பேருந்து அலுவலகர் தாங்கள் 1-500 வரை இலக்கமிடப்பட்ட பேருந்துகளையே பாவனைக்கு விட்டிருப்பதாக கூறினார்.

**கேள்வி:**
பேருந்தின் இலக்கம் என்ன?
அஞ்சலியின் அண்ணனின் வயது என்ன?
விடை: (888)

## வாயுக்கள்

- சிவப்பு நிற ஒளியைத் தருபவை நியான் வாயு.
- நீல நிற ஒளியைக் கொடுப்பது ஆர்கான் வாயு.
- ஆரஞ்சு நிற ஒளியை அளிப்பது சோடியம் வாயு.
- ரேடான் வாயு என்பது நிறமற்ற – மணமே இல்லாத ஒரு கதிரியக்க வாயு.
- ஆர்கான் என்பது மந்த வாயு.
- நாம் சுவாசிக்கும் ஆக்ஸிஜன் வாயு பல உலோகங்களுடன் சேரக்கூடியது.

## பட்டாம் பூச்சி



சின்னச் சின்னப் பூச்சிதான்
சிறுவர் விரும்பும் பூச்சிதான்!
வண்ண வண்ணச் சிறகுடன்
வட்டம் போடும் பூச்சிதான்!

குட்டிக் குட்டிச் செடியிலே
குத்தும் பட்டாம் பூச்சிதான்!
பட்டிப் பூவைத் தேடியே
பறக்கும் வண்ணப் பூச்சிதான்!

கிட்டப் போனால் பிடிக்கவே
எட்டப் பறந்து போகுமாம்!
குட்டிப் பாப்பா பார்த்துமே
கையைத் தட்டிச் சிரிக்குமாம்!

அங்கே பாரு சிரிக்குது
அழகுப் பட்டாம் பூச்சிதான்!
இங்கே பாப்பா சிரிக்குது
இதுவும் பட்டாம் பூச்சிதான்!

**இதுவரை**

**பிரதமர் ஒபேடேவுக்காக ஜனாதிபதி கபாகாவின் மாளிகையையும், அவரது ஆதரவுப் படையையும் தாக்குகிறான் இடி அமீன். ஆயிரத்து ஐநூறு பேர் அமீனின் படைகளால் பலியாகின்றனர். ஜனாதிபதி கபாகா பிரிட்டனுக்கு தப்பியோடுகிறார்.**

**இனி...**



அற்புதன் எழுதிய

# இடி அமீன்

**உண்மைத் தொடர்...**

**அதிர் இடி 09**

**வி**டைபெற்றுச் செல்லவந்த முன்னாள் தளபதியை இடிச்சிரிப்புடன் வரவேற்றான் அமீன்.

அவன் சிரிப்பைக் கேட்டதுமே ஏன் வந்தோம் என்று நினைத்து குறுகிப்போன தளபதிக்கு அமீன் கேட்ட கேள்வி தூக்கிவாரிப் போட்டது.

"எத்தனை நாள் சிறைவாசம் இருக்க உத்தேசம்?" கால்களை ஆட்டியபடி அமர்ந்திருந்த அமீன் முன்னாள் தளபதியை தன் எதிரே நிற்கவைத்து கேள்வி கேட்டான்.

முன்னாள் தளபதிக்கு பேச நா எழவில்லை. அமீன் ஜோக்கடிக்கிறானா, உண்மையாகவே கேட்கிறானா! ஒன்றும் புரியவில்லை.

"நான் கேட்டால் நீர் பதில் சொல்லியாகவேண்டும். இப்போது நான்தான் தளபதி தெரியுமா?

"தெரியும்!"

"நான் நினைத்தால் உம்மை நாய்போல சுடலாம், தெரியுமா?"

"தெ... தெரியும்!"

"நான் நினைத்தால் உமது குடும்பத்தையே இங்கு கொண்டு வந்து என் விருப்பப்படி நடக்கலாம்... தெரியுமா?"

முன்னாள் தளபதி வியர்த்துப் போனார். அவரது சீருடை தொப்பலாகிக் கொண்டிருந்தது.

"வேண்டாம்..!" முன்னாள் தளபதி தன் தகுதிக்கு மாறாக தன் குடும்பத்திற்காக அமீன் முன் இறைஞ்சினார். "என்னை மன்னித்துக் கொள்ளுங்கள், என் குடும்பத்தை விட்டு விடுங்கள்."

இடி அமீன் உரத்துச் சிரித்தான். "உமக்குக் குத்துச்சண்டை தெரியுமா?"

என்றான் திடீரென்று.

"தெரியாது!" என்றார் முன்னாள் தளபதி "அய்யய்யோ:.. உமக்குக் குத்துச் சண்டை தெரிந்தால் மோதிப் பார்க்கலாம். நீர் ஜெயித்தால் உம்மை விடுதலை செய்யலாம் என்று நினைத்தேன். சரி போகட்டும். உம்மை மன்னித்து விடுகிறேன்."

தளர்ந்துபோன நிலையில் புறப்பட்ட முன்னாள் தளபதியை இடி அமீனின் குரல் இடியாக எழுந்து தடுத்து நிறுத்தியது.

"நில்லும்!" இயந்திரம்போல நின்று திரும்பிப் பார்த்தார்.

"நீ முன்னாள் தளபதிதானே?"

"ஆம்"

"சல்யூட் பண்ணாமல் போனால் என்ன அர்த்தம்?" என்ற அமீனின் கேள்விக்கு முன்னாள் தளபதி ஆடிப் போனார்.

"ஒன்று போதாது பத்துத் தடவை சல்யூட் பண்ண வேண்டும். இது தண்டனை!" என்றுவிட்டு

கொடூரமான புன்னகையுடன் ஒன்று... இரண்டு... என்று எண்ணத் தொடங்கினான் அமீன்.

ஒன்பது தடவைகள் சல்யூட் பண்ணியதும் "போதும் நிறுத்தும்! ஏதோ என் முன்னாள் அதிகாரியாச்சே என்பதால் ஒன்றைக் குறைத்துக் கொள்கிறேன்! நேற்று உமது காட்டில் மழை. இன்று என் காட்டில் மழை. எல்லாக் காட்டிலும் எல்லாக் காலமும் மழை பெய்யாது. போய் வாரும்!" என்று அமீன் சிரித்த சிரிப்பில் கூனிப்போனார் முன்னாள் தளபதி.

ஜனாதிபதி கபாகாவின் ஆதரவாளர்கள் என்று கருதப்பட்ட நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர்.

எங்கும் இராணுவ ரோந்தை தீவிரமாக்கினான் இடி அமீன்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் கண்டனம் செய்து உரையாற்றினார்.

அன்றிரவு அவரது இல்லத்துக்கு நேராகச் சென்றான் இடி அமீன்.

இடி அமீன் பற்றி கண்டித்துப் பேசினாரே தவிர அந்த உறுப்பினர் அதற்குமுன்னர் இடி அமீனைக் கண்டதே கிடையாது.

தனக்கு முன்பாக நிற்கும் கறுத்த, நெடுமரம் போன்ற பயங்கரமான உருவத்தை நிமிர்ந்து பார்த்தார்.

"நான்தான் இடி அமீன். ஏண்டா நாயே...! இதற்குமுன்னர் என்னை பார்த்திருக்கிறாயா?" என்று கழுத்தில் பிடித்து தூக்கிய வேகத்தில், பாராளுமன்ற உறுப்பினருக்கு பயத்தில் உதறல் எடுத்துவிட்டது.

அவரை இறக்கிவிட்டு உள்ளே சென்ற அமீனின் பார்வையிலே பட்டாள் அவரது இளம் மனைவி.

"யோவ், நீ அரைக்கிழம், உனக்கு இளம் மனைவி தேவை தானா? என்ன உபயோகம்?" என்ற வக்கிரமான கேள்வியால் அறைபட்டு துடித்துப்போனார் பாராளுமன்ற உறுப்பினர்.

"உமக்கும் வேண்டாம் எனக்கும் வேண்டாம் இவளைக் கொன்று விடவா, அதாவது உரித்துப் பார்த்து விட்டு கொன்றுவிடவா?" அவன் குரலும் அவன் அவளைப் பார்த்த பார்வையும் அவன் கைகள் அவள் மீது பட்டு மீண்டவிதமும், அவன் மிரட்டல்காரனல்ல, சொன்னதைச் செய்யக்கூடியவன் என்பதற்கு சாட்சியம் கூறின.

இடி அமீன் இப்படி இருப்பான் என்று அந்தப் பாராளுமன்ற உறுப்பினர் கனவிலும் நினைத்ததில்லை.

ஆடிப்போனார்.

மன்னிப்புக் கேட்டார்.

மன்றாடினார்.

"இனிமேல் என்னைப் பற்றி..." என்று அமீன் கேட்டு முடிக்கு முன்பாகவே. "பேசவேமாட்டேன்!" என்றார்.

"இல்லை பேசு, ஆனால் என்னைப் பற்றி நன்றாகப்பேசு! உன் மனைவியின் உயிரை தந்திருக்கிறேன். நான் யார்?" என்ற அவனது கேள்விக்கு, எவ்வித தாமதமும் இல்லாமல், "கடவுள்!" என்றார் சட்டென்று.

அந்த வீடே அதிரும்படி சிரித்து விட்டு அவள் மார்பில் தொட்டுவிட்டு, புயல் வந்துபோனதுபோல சென்று விட்டான் இடி அமீன்.

**முன்னாள் ஜனாதிபதி காபாவுக்கு பிரிட்டன் அடைக்கலம் கொடுத்தது.**

ஏற்கனவே வெள்ளையர்கள் என்றாலே இடி அமீனுக்கு பிடிக்கவே பிடிக்காது. கபாகாவுக்கு பிரிட்டன் அடைக்கலம் கொடுத்ததோடு இன்னமும் அவனது வெறுப்பு பன்மடங்காகியது.

"பிரிட்டிஷ் தூதரகத்திற்குள் புகுந்து அங்குள்ள வெள்ளைக்காரக் கழுதைகளை பணயக் கைதிகளாகப் பிடித்து வரவேண்டும். என்றான் அமீன்.

"வேண்டாம்! அதனால் கெட்ட பெயர்தான் மிஞ்சும். பொறுமையாக இரு!" என்று விட்டார் ஒபேடே,

"உகண்டா இராணுவம், உகண்டா இராணுவம் மாதிரியில்லை. வெள்ளைக்காரனுக்கு பூட்ஸ் துடைத்துவிட்டு வந்தவர்கள் எல்லாம் அதிகாரிகளாக இருக்கிறார்கள் இஸ்ரேலிய நாய்களிடம் பயிற்சி பெற்றவர்களும் இருக்கிறார்கள். இவர்களை நம்பினால் எங்கள் தலையைச் சாப்பிட்டு விடுவார்கள்." என்றான் அமீன்.

ஜனாதிபதிக்கு அவன் சொல்வதில் நியாயம் இருப்பதாகவே தோன்றியது. "என்ன செய்யலாம் என்கிறாய்?"

தன் தடித்த புருவத்தை கட்டை விரலால் வருடிக்கொண்டே, "முந்திக் கொண்டு நாங்கள் அவர்கள் தலைகளைச் சாப்பிட்டுவிடலாம். தலைக்கறி சுவையாக இருக்கும்!" என்று அமீன் சிரித்த சிரிப்பை ஜனாதிபதி இரசிக்கவில்லை.

(தொடரும்)



முரசு

## குறுக்கெழுத்துப் போட்டி

வாசக நெஞ்சங்களே!
உங்கள் சிந்தனைக்குத் தீனி போடும்
வினாக்கள் அடங்கிய இப்போட்டியிலே ஆர்வமுடன்
பங்குகொண்டு பரிசுகளையும்,
பாராட்டுக்களையும் பெற வாழ்த்துகின்றோம்.

**வாசகர்களின் கவனத்திற்கு...**
முரசு வாசகர்களின் உரிமையான
வேண்டுகோளுக்கு அமைவாக,
(முரசு 1021 - கு.எ. போ. - 528) குறுக்கெழுத்துப் போட்டியில்
இருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை
ரூபா 1000/= ஆக உயர்த்தப்பட்டுள்ளது என்ற மகிழ்ச்சியான
செய்தியை அறியத்தருகின்றோம்.

### குறுக்கெழுத்துப் போட்டி - 544

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | | 12 |
| 13 | | 15 | 16 | 17 | |
| 19 | 20 | | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | | 29 | |
| 31 | 32 | 33 | | 35 | 36 |

**போட்டி விதிகள்:**

இதற்குரிய விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் ஒட்டி **28.10.2013** க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்புங்கள்.
அனுப்ப வேண்டிய முகவரி: குறுக்கெழுத்துப் போட்டி இல. - 544
தினமுரசு வாரமலர்,
- த.பெ.இல. :-169, யாழ்ப்பாணம்
தங்கள் சரியான முகவரியையும் காசுக் கட்டளையை
மாற்றக்கூடிய அண்மித்த தபாலகத்தின் பெயரையும் குறிப்பிடுக.
சரியான விடையை அனுப்புவோரில் முதல் அதிர்ஷ்டசாலிக்கு 1000 ரூபா பரிசுண்டு,
அடுத்த பத்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர்கள் தினமுரசில் பிரசுரமாகும்.

### குறுக்கெழுத்துப் போட்டி 542 - விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சி (1) | சு (2) | த் (3) | து (4) | வ (5) | ம் (6) |
| ங் (7) | வ (8) | கி (9) | | ம் (11) | ய (12) |
| க (13) | ம் (14) | ரு (15) | வ (16) | பா (17) | ம (18) |
| ப் (19) | ர (20) | தி (21) | பு (22) | | ச (24) |
| பூ (25) | ம் (26) | | ம் (28) | த (29) | கா (30) |
| ர் (31) | ய (32) | நே (33) | ச (34) | ஞ் (35) | ஆ (36) |

**இடமிருந்து வலம்**

01. செவ்வனசம்.
07. கார்ப்புப் பழச் செடி.
15. பாகிஸ்தான் நாட்டின் பிரதமராக வந்து. பெண் பிள்ளைகளின் கல்வியை முன்னேற்ற வேன் என்று உறுதி பூண்டவர். (குழம்பியுள்ளது)
19. கொழிப்பு. கடைசி எழுத்து விடுபட்டுள்ளது.
22. புரட்டாதி மாதத்தில் செய்யப்படும் பொதுச் சிராத்தம். கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (குழம்பியுள்ளது)
25. கடிதல்.(குழம்பியுள்ளது)
31. பரிபூரண நற்குணங்களால் நிறையப்பெற்றவர் என்று பொருள்படும்; வள்ளியின் தந்தை. (குழம்பியுள்ளது)
35. இராஜசின்னத்தொன்று.

**மேலிருந்து கீழ்**

01. இரகசியமாக வைத்துக்கொள்ள வேண்டிய ஒன்பது விஷயங்களில் ஒன்று.
02. பேராசைக்காரன். கடைசி எழுத்து விடுபட்டுள்ளது. (திரும்பியுள்ளது)
03. சிலி நாட்டின் புரட்சிப்பெண் என்று அழைக்கப்படுவர். (இலவசக் கல்விக்காக)
04. ஈரடுக்கு ஒலிக்குறிப்பு. விரைவுக்குறிப்பு.
06. கிராமம் ; சிற்றூர். (திரும்பியுள்ளது)
17. தகுதி ; செருக்கு.
20. அங்கங்களை அச்சொட்டாக காண்பித்து. மனிதனுக்குள் பரவசம் என்ற உணர்வை ஏற்படுத்துபவன். (குழம்பியுள்ளது)
27. சாரியை ; நமது. (திரும்பியுள்ளது)

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 542 இற்கான சரியான விடைகளை அனுப்பி 1000 ரூபா பரிசு பெறும் அதிர்ஷ்டசாலி.**

**ஜே.வடாதின் மரீனா, மடு, மன்னார்.**

பாராட்டுப் பெறும் 10 அதிர்ஷ்டசாலிகள்.

01. சை.மதிமலர், உடப்பு, புத்தளம்.
02. எஸ்.சனாகான், கோவில் ஒழுங்கை, திருகோணமலை.
03. ச.கவிப்பிரியா, குமுளமுனை, முல்லைத்தீவு.
04. எஸ்.எம்.ஹிமாயா, தர்ஹாநகர்
05. தா.சாலினி, உருத்திரபுரம், கிளிநொச்சி.
06. க.பானுஜன், கரவெட்டி மேற்கு, கரவெட்டி.
07. திருமதி ஆர்.சரோஜாதேவி, கொக்குவில் வடக்கு, கொக்குவில்.
08. ம.தர்மிகா, பிரதான வீதி, பதுளை.
09. யோ.காவேரி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.



நான் சாதாரண மனுசன்



ராவண தேசம்

## புதிய வருடத்திற்கு வருகிறது வாலு

புதுமுகம் விஜய் சந்தர் இயக்கும் வாலு படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக ஹன்சிகா நடிக்கிறார். முக்கிய வேடத்தில் சந்தானம் நடிக்கிறார். சமீபத்தில்தான் இந்தப் படத்தில் இடம்பெறும் தனது ஓப்பனிங் பாட்டை முடித்தார் சிம்பு.

அதுபோக, இந்தப் படத்தில் இன்னும் மூன்று பாடல்களும், சிறிய அளவிலான வசனப்பகுதிகளும் மட்டுமே எடுக்கப்பட வேண்டியிருக்கிறதாம். விரைவில் இரண்டு பாடல்களை படமாக்க வெளிநாடு கிளம்புகிறார்களாம். அதை முடித்தபின்னர் 2014 ஆரம்பத்திலேயே படத்தை வெளியிட்டு புதுவருடத்தில் தன்கணக்கை வெற்றிகரமாக ஆரம்பிக்கவேண்டும் எனத் தீர்மானித்துள்ளாராம் சிம்பு.

## பூர்ணாவை செதுக்கினார் பார்த்திபன்

“பார்த்திபன் என்னை பக்குவப்படுத்திவிட்டார்” என்று சொல்கிறார் பூர்ணா. துரோகி, முனியாண்டி விலங்கியல் 3ஆம் ஆண்டு, வித்தகன் உள்ளிட்ட படங்களில் நடித்திருப்பவர் பூர்ணா. அவர் கூறியதாவது: கரு பழனியப்பன் இயக்கும் ‘ஜன்னல் ஓரம்’ படத்தில் பார்த்திபன் ஜோடியாக நடிக்கிறேன்.

வழக்கமாக, யாரிடமும் பதிலுக்கு பதில் பேசமாட்டேன். ஆனால், பார்த்திபனுடன் நடிக்கத் தொடங்கியபிறகு பக்குவமாக பேசுவது எப்படி என்பதை புரிந்துகொண்டிருக்கிறேன். இன்னும் சொல்லப்போனால் எனது கருத்துக்களை அழுத்தம் திருத்தமாக சொல்ல கற்றிருக்கிறேன். வாழ்க்கையில் முக்கியமான சில விஷயங்களையும் எனக்குப் புரியவைத்திருக்கிறார். அவரது தொழில்நுட்ப அறிவு எனக்குப்பிடிக்கும்.

பல்வேறு சம்பவங்கள் குறித்து இருவரும் விவாதிப்போம். ஏற்கனவே ‘வித்தகன்’ படத்தில் பார்த்திபனுடன் நடித்திருக்கிறேன். அப்போதைய எனது பேச்சுக்கும், இப்போதைய பேச்சிலும் எவ்வளவு மாற்றம் தெரிகிறது என்பதை அவர் குறிப்பிட்டு பாராட்டுவார். கடினமான நேரங்களில் அவர்தான் எனக்கு ஆதரவாக இருப்பார். தகராறு, படம் பேசும் போன்ற படங்களிலும் நடித்துவருகிறேன். இவ்வாறு பூர்ணா கூறினார்.

## ரஜினியுடன் டேட்டிங் செல்ல ஆசை

தனிமை தீவில் ரஜினியுடன் டேட்டிங் செல்ல ஆசை வெளியிட்டிருக்கிறார் மல்லிகா ஷெராவத். தமிழில் ‘தசாவதாரம்’ படத்தில் நடித்த மல்லிகா ஷெராவத் ‘ஒஸ்தி’ படத்தில் சிம்புவுடன் குத்தாட்டம் ஆடினார். அடிக்கடி தனது வித்தியாசமான செயல்களால் பரபரப்பை ஏற்படுத்தும் இவர் அமெரிக்க டிவி ரியாலிட்டி ஷோ மூலம் தனது காதலனை தேர்வுசெய்யும் நிகழ்ச்சியில் தற்போது பங்கேற்று வருகிறார். இந்த நிகழ்ச்சியில் பங்கேற்கும் இளைஞர்கள் மல்லிகாவிடம் தங்கள் காதலை வெளிப்படுத்தலாம். யார் மனதை கவர்கிறாரோ அவரை காதலனாக மல்லிகா ஏற்க உள்ளார். இந்த நிகழ்ச்சியில் இதுவரை 15 பேர் பங்கேற்று மல்லிகாவுக்கு காதல் வலை விரித்தனர். ஒருசிலர் வர்ணித்து பேசிய காதல் வசனங்களை கேட்டு மல்லிகா அவர்களுக்கு முத்தத்தைப் பரிசளித்தார்.

காதலனை தேர்வுசெய்த கையோடு மல்லிகாவிடம் ஒரு நிருபர், யாருடன் டேட்டிங் செல்ல ஆசை? என்றபோது “ரஜினியுடன் தனிமை தீவில் டேட்டிங் செல்ல விரும்புகிறேன்” என்று பதிலளித்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.

## சூர்யாவின் விழிப்புணர்வு

தீபாவளி பண்டிகையின்போது ஏற்படும் பட்டாசு விபத்துகளை தடுக்க தீயணைப்பு துறையினர் கடந்த ஒரு வார காலமாக சென்னையின் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு பிரச்சாரம் நடத்திவருவதுடன் விழிப்புணர்வு ஒத்திகையும் நடத்தி காண்பித்துவருகின்றனர். இந்நிலையில் பள்ளி மாணவ, மாணவியர் கலந்துகொள்ளும் விழிப்புணர்வு ஊர்வலம் சென்னை தி.நகரில் நடக்கவிருக்கிறது.

இதற்கிடையில் நடிகர் சூர்யாவை வைத்து விழிப்புணர்வு படத்தை தீயணைப்பு துறையினர் தயாரித்துள்ளார்கள். 2 நிமிடம் ஓடும் இந்த படத்தில் சூர்யா பொதுமக்களுக்கு அறிவுரை வழங்குகிறாராம். படத்திற்கு பின்னணி இசைசேர்க்கும் வேலை நடந்துவருகிறதாம். இந்த வேலைமுடிந்ததும் படத்தை பத்திரிகையாளர்களுக்குப் போட்டுக் காட்டிவிட்டு திரையரங்குகளில் வெளியிடவும், தொலைக்காட்சிகளில் வெளியிடவும் திட்டமிட்டுள்ளதாக தீயணைப்புத்துறை இயக்குனர் ஆர்.சி.குடவாலா தெரிவித்துள்ளார்.

இந்தப் படத்தில் சூர்யா தானாக முன்வந்து நடித்ததுடன் அதற்காக சம்பளம் எதுவும் வாங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.





## திரும்பினார் ரம்பா!

கணவருடன் மனக்கசப்பு ஏற்பட்டு அவரை பிரிந்த ரம்பா மீண்டும் நடிக்கவந்தார். 1990களில் வெற்றிகரமான தொடையழகு நடிகையாக கலக்கிய ரம்பா, கனடா நாட்டு தொழில் அதிபர் இந்திரன் பத்மனாபன் என்பவரை திருமணம் செய்துகொண்டு நடிப்புக்கு முழுக்குப்போட்டார். இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. அதன்பின், கணவருடன் ரம்பாவுக்கு மனக்கசப்பு ஏற்பட்டு சமீபத்தில் பிரிந்துவிட்டதாக கொலிவூட்டில் பேசப்படுகிறது. திருமணம் முடிந்தபிறகு அக்கா, அண்ணி, அம்மா வேடங்களில் நடிக்க ரம்பாவுக்கு அழைப்பு வந்தது. ஆனால், நடிக்காமல் பிடிவாதமாக இருந்தார். இப்போது அந்த பிடிவாதத்தை கைவிட்டு நடிக்க வந்திருக்கிறார். தமிழில் சிம்பு நடிக்கும் படத்தில் அவருக்கு அக்காவாக நடிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்.

## நஸ்ரியாவைத் தெரிந்துகொள்ள...

நய்யாண்டி தொப்புள் விவகாரத்தின்மூலம் ரசிகர்கள் மத்தியில் பரபரப்பாகிவிட்டார் நஸ்ரியா. இந்நிலையில் தன்னைப் பற்றி தெரிந்துகொள்வதற்காக வெப்சைட் ஒன்றினை திறந்துள்ளார்.

இந்த வெப்சைட் சம்பந்தமான விவரங்களை தனது பேஸ்புக் பக்கத்தில் எழுதியிருக்கும் இவர், அதில் தனது புதிய வெப்சைட் முகவரியையும் கொடுத்துள்ளாராம்.

குறுகிய காலத்தில் மலையாள சினிமாவின் சூப்பர் ஸ்டார்களான மோகன்லால் மம்முட்டி ஆகியோரை பின்னுக்குத் தள்ளி பேஸ்புக்கில் அதிக லைக்குகள் பெற்ற நடிகை என்ற பெருமையும் நஸ்ரியாவுக்கு உண்டு.







## ஆரம்பத்திற்கு கிடைத்தது ‘A’ சான்றிதழ்

ஜித்தின் ஆரம்பம் படத்திற்கு ‘A’ சான்றிதழ் வழங்கியுள்ளது தணிக்கை ரசிகர்களின் அமோக எதிர்பார்ப்புடன் ‘தல’ அஜித், இயக்குனர் னுவர்த்தன் கூட்டணியில் உருவாகியிருக்கும் படம் ஆரம்பம்.

படத்தில் அஜித்துடன் இணைந்து ஆர்யா, நயன்தாரா, டாப்சி மற்றும் ராஎன நட்சத்திர பட்டாளமே கலக்கியுள்ளனர். கடந்த சிலநாட்களாக விறுப்பாக நடந்துவந்த இந்தப் படத்தின் போஸ்ட் புரொடக்ஷன் வேள் முடிந்துவிட்டது. இதற்குமுன்னர் வெளியான பில்லா, மங்கா, அசல் போன்ற படங்களுக்கு ‘A’ சான்றிதழ் கிடைவில்லை, இப்படத்திற்கு இச்சான்றிதழ் கிடைத்துள்ளதால் ரசிகடம் எதிர்பார்ப்பு கிளம்பியுள்ளது.

## விஜுக்கும் இருக்கிறது கொலவெறி!

ஜில்லா படத்தினை தொடர்ந்து ஏ.ஆர். கதாஸ் இயக்கத்தில் நடிக்கவிருக்கிறார் விஜய். டத்திற்கு அனிருத் இசையமைக்கிறார். இவரது பமே அமர்க்களமாக ஆரம்பிக்க, கொலவெறி ல் இவரை புகழின் உச்சிக்கு கொண்டுசென்றது. போல கொலவெறி டைப் பாடல் ஒன்றை ய் நடிக்கும் படத்திலும் வைக்க இப்போதே ராகிவருகிறாராம் அனிருத். விஜய் இதுவரை த்தட்ட 25 பாடல்கள்வரை பாடியிருக்கிறார். தாலும் அவற்றிலிருந்து இந்தப் பாடலை திலும் மாறுபட்டதாக அமைக்கவேண்டும் என்ற ணத்தில் இருக்கிறாராம். இந்தப் பாடலின் ம் விஜய் ரசிகர்களிடம் எளிதாக ரீச்சாகி ராம் என கணக்கு போட்டிருக்கிறாராம். பாது தனுஷின் வேலையில்லா பட்டதாரி, கார்த்திகேயனின் மான்கராத்தே இவற்றுடன் வராகவனின் இரண்டாம் உலகம் படத்துக்கான பின்னணி இசை என படு பிஸியாக இயங்கிக் கொண்டிருக்கிறார் அனிருத்.





## கமலுக்கு விருது

15ஆவது மும்பை சர்வதேச திரைப்பட விழா பிரம்மாண்டமாகத் நடைபெற்றது. எட்டு நாட்கள் நடந்த இந்த விழாவில் சர்வதேச திரைப்பட கலைஞர்கள் பலரும் வந்திருந்தனர்.

தொடக்க நாள் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராக நடிகை சோனாக்ஷி சின்ஹா பங்கேற்றார். இந்த விழாவில் இரு சாதனையாளர்களுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்பட்டது.

ஒருவர் பிரெஞ்ச் திரைப்பட இயக்குனர் கோஸ்டா கவ்ராஸ். ஆமென், இஸட், மிஸ்ஸிங், லெ கேபிடல் போன்ற புகழ்பெற்ற அரசியல் படங்களின் எழுத்தாளர், இயக்குனர் ஆவார்.

அடுத்ததாக நடிகர், இயக்குனர், தயாரிப்பாளர் என்று பலதுறைகளில் புகழ்பெற்ற கமல்ஹாசனுக்கு மராட்டிய முதல்வர் பிருத்விராஜ் வாழ்நாள் சாதனையாளர் விருதினை வழங்கினார்.

இதுகுறித்து கமல் கூறுகையில், நான் இந்த விழாவில் பேசுவதற்காக எதையும் முன்தயாரிப்பு செய்யவில்லை. அப்படி செய்தாலும் இங்கே அது கைகொடுக்காது என எனக்குத்தெரியும். ஷ்யாம் பெனகல், கவ்ராஸ், பாலச்சந்தர் போன்றவர்களின் படங்கள் தந்த பாதிப்புதான் என் சினிமா என்றால் அது மிகையல்ல என்றும் என்னைப் போன்றவர்கள் நிறைய கற்றுக்கொள்ள இதுபோன்ற சர்வதேச திரைப்பட விழாக்கள் முக்கியமான களங்கள் எனவும் மகிழ்ச்சியோடு கூறியுள்ளார்.

## சந்தானத்தையும் சீண்டுகிறது சிக்கல்!

ஹாட்ரிக் வெற்றியாளர் ராஜேஷின் இயக்கத்தில் கார்த்தி, காஜல் அகர்வால், பிரபு, சந்தானம் என வெற்றிக் கூட்டணியோடு தீபாவளி சரவெடியில் வெடிக்கவிருக்கும் திரைப்படம் ஆல் இன் ஆல் அழகுராஜா. இந்நிலையில் இப்படத்தின் ட்ரெய்லர் சமீபத்தில் வெளியானது. அதில், குட்காவுக்கு எதிரான விளம்பரத்தை சந்தானம் நக்கலடித்துள்ளதாக புகையிலை கட்டுப்பாட்டு கூட்டணி புகார் அளித்துள்ளது. அவர்கள் அளித்துள்ள புகாரில், விளம்பரத்தில் தம்மடிக்க வேண்டும் என கார்த்தி கேட்க, அதற்கு சந்தானம் குட்கா விளம்பரத்தில் வரும் முகேஷின் குரலை இமிடேட் பண்ணி பேசிக் காட்டுவார். பின்னர் கார்த்தி சிகரெட் வேண்டாம் என சொல்வதுபோல காட்சி அமைக்கப்பட்டுள்ளது. இது அந்த விளம்பரத்தைக் கிண்டலடிப்பது போலுள்ளதாக தமிழ்நாடு புகையிலைக் கட்டுப்பாட்டுக் கூட்டணி தெரிவித்துள்ளது.

மேலும் சந்தானத்துக்கு எதிராக எழுத்துபூர்வ மனுவையும் அளித்துள்ளது. இதுகுறித்து அந்த அமைப்பின் அமைப்பாளர் எஸ் சிரில் அலெக்சாண்டர் கூறுகையில், புகையிலை மற்றும் குட்கா போன்ற போதைப் பொருட்களுக்கு எதிரான மிக வெற்றி கரமான விளம்பரத்தை சந்தானம் கிண்டலடித்துள்ளார்.

இந்த காட்சி நிச்சயம் நீக்கப்பட வேண்டும். புகைப்பழக்கத்துக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளோரை சந்தானத்தின் இந்த கிண்டல் பாதித்துள்ளது என்றும் இது புகையிலைக் கட்டுப்பாட்டுச் சட்டம் பிரிவு 5-க்கு எதிரானதும் எனவும் கூறியுள்ளார்.

# தேன் கிண்ணம்

## கேவலம்



கருக்கப்பட்ட
கால்களால்
எரிக்கப்பட்டு...
விறைக்கப்பட்ட
விரல்களால்
வறுக்கப்பட்டு...
மிச்சங்களான
மச்சங்களால்
எச்சங்களாக்கப்பட்டு...
எடுத்ததெல்லாம்
பிச்சைகளும்...
கொடுத்ததெல்லாம்
காணிக்கைகளும்...
கழற்றியதெல்லாம்
கோவணங்களுமே
கேவலம்...!
தூங்கும் போதும்
துணியைக் கழற்றும்
தன்மானமற்றவர்களால்.

வே.முல்லைத்தீபன்,
ஒட்டுசுட்டான்.

## பிரிவின்றி வாழ்ந்திடுவோம்

அகிலத்தில் நாம்
அகந்தை கொள்ளாமல்
அறிவைக் கொண்டு
அடக்கமாய் வாழ்ந்திடுவோம்.

விரக்தி அடைந்து
வீராவேசம் கொள்ளாமல்
விதியுடன் போராடி
விருப்புடன் வாழ்ந்திடுவோம்.

சண்டைகள் செய்து
சாதனைகள் படைக்காமல்
சாந்தி பெற்று
சமாதானமாய் வாழ்ந்திடுவோம்.

பகை கொண்டு
பாம்புகளாய் சீறாமல்
பாசம் கொண்டு
பண்புடனே வாழ்ந்திடுவோம்.

ஒன்றே குலம்
இரண்டே சாதி
இணைந்தே என்றும்
இடரின்றி வாழ்ந்திடுவோம்


பொறாமையை பொடியாக்கி
தீண்டாமையை தீயிலிட்டு
பிறரை நேசித்து
பிரிவின்றி வாழ்ந்திடுவோம்.




எம்.சி.கலீல், கல்முனை-05.

## நிழல்களினூடு...

இனிதாய் பல கதைகள்
இம்சிக்கும் ஸ்பரிஷங்கள்
இறுகக் கட்டியணைத்து
இன்பத்தில் நனையவைக்கும்
முத்தத்தின் தூறல்கள்
பார்வையின் மொழிகள்
மடிசாயும் பொழுதுகள்
கரங்கோர்த்து நடந்துவரும்
கடற்கரை மணல் வெளிகள்
பாதத்தின் சுவடுகள்
பதித்துவரும் நினைவுகள்
ஊட்டிவிடும் உணவுகள்
ஊடலில் சின்னக் கோபங்கள்
கையசைத்து விடைபெறும்
கடைசி நிமிடங்கள்
கண்களாலேயே விடைகொடுக்கும்
கனத்த பொழுதுகள்
கண்திறந்து கொள்கையிலே
கலைகிறது கனவுகள்
இன்னும் புரியாமலேயே
நீள்கிறது இடைவெளிகள்.



ஆஷா, யாழ்ப்பாணம்.



## காணவில்லை...

கண்ணெதிரே தோன்றும் உறவே
சிலவேளைகளில்
காணாமல் போகிறதே.

ஒரு நாள்
ஒரு பொழுதேனும்
காண வேண்டும்.

காண முடியாது
கண்டால் பேச முடியாது
ஏதோ ஒரு ஏக்கம்
யாதென்றே தெரியவில்லை
விழியிரண்டும் தேடுகிறது
ஏக்கத்துடன் ஏமாற்றமாய்
திரும்புகிறது.

பேசிட உரிமையில்லை
நட்பின் பிடிப்பில் பிடித்துவிட்டது
துயரத்தைப் பகிர்ந்தளிக்க
நட்பிடம்தான் ஆறுதல் தரும்
என எண்ணிணேன்
அதுவும் எனக்கு இல்லை போலும்.

நட்பின் வடிவமே
உண்மையின் உறவே
ஏனோ தெரியவில்லை
தினமும் காண வேண்டும்
ஆனால் எனக்கேது
அப்படி ஓர் எண்ணம்
நான் யாரோ?

செவ்வந்தி - அல்வாய் மேற்கு.

## பு(பி)ரிந்துகொள்...



விழியோரப் பார்வை
வீழ்த்தியது நெஞ்சறைக்குள்
விடுதலை இதுதான் என்று
விரைவாய் அணுகிப் பணிய
விட்டாள் செருப்பால்...
கண்டவுடன் பளிங்குரு காட்சி
காதலில் எனக்குக் கிடைத்த மாட்சி
கடனாய் வாங்கிய செருப்படியும் - என்னமோ
கடுகளவும் கடுக்கவில்லை...
அவள் அடித்தது
ஆழமான காதலைப் படித்த மாதிரி
அன்புக்குரியவள்தான் புரியவில்லை
அடுத்தவர்தான் புரிந்துகொண்டார்
பார்த்தவுடன் கறுப்பென்ன - சிவப்பென்ன
பட்டென பூப்பதுதான்
பாசமாய் முளைக்கும் காதல்
கவனியாது சீதையர் செல்லலாம்
கல்லுக்குள்ளும் ஈரம் உண்டு என்று
காலம் வரும் போதுதான் புரியும்
பூப்பெய்தவுடன் பூக்களைப்
பறிக்கின்றோம் என்று
பூவையர் கதறுகிறார்
புத்திகெட்ட தேவதையே
புரியாத கோதையே - என்னைப்
புரிந்து கொண்டுவிட்டால்
புளகம் எனக்கு எவ்வளவு தெரியுமோ?
புதிராய் கிடக்கும் கணக்குக் கன்னியே
ஒன்றில் என்னைப் புரிந்துகொள் - இல்லையே
ஒருதலைக்காதலைவிட்டு பிரிந்துகொள்.

ஜெயம் ஜெகன், புதுக்குடியிருப்பு.

## கூடைப் பெண்ணின் குமுறல்...

கண்ணா!
காலை எழுந்தவுடன்
என் கைகளில் உன்னை ஏந்தி
கன்னத்தில் முத்தமிட்டு உன் பிஞ்சுக்
கால்களைக் கண்ணில் ஒற்றி
மார்போடு உன்னை அள்ளி
அணைத்து பாலூட்ட ஆசைதான்.

என்ன செய்ய அதிகாலை
சங்கொலி கேட்டு அவசரமாய்
தலை மயிரை அள்ளிச் சொருகி
கூடையை தலையில் மாட்டி
உறையும் பனிக் குளிரில்
குதிரைபோல் வேகமாய் பிரட்டுக்
களத்துக்கு ஓடுகையில்
பாசம் எல்லாம் பரிதியைக் கண்ட
பனித்துளிப் போல்
மறைந்தே போகுதே.

மதியம் பிள்ளை
மடுவத்திலிருந்து உன்னை
தூக்கி வந்து மடியில் கிடத்தி
கொஞ்சி உன் மழலை மொழி
கேட்டு அள்ளி அணைத்து பாலும்
சோறும் ஊட்டி பரவசப் பட
ஆசைதான்.

என்ன செய்ய பச்சை மாவில்
பிசைந்த பாதி வெந்த ரொட்டியை
அவசரமாய் பிய்த்து
அரைவயிறு விழுங்கி
பச்சைத் தண்ணீரை குடித்து
கத்தும் கங்காணிக்குப் பயந்து
கடுகதிபோல் மதியவேளை
மலைக்கு மீண்டும் ஓடுகையில் பாசம்
எல்லாம் பஞ்சாப் பறந்து போகுதே.

மாலை வேளை மலையிறங்கி
மீண்டும் வந்து உன்னை மடியில்
கிடத்தி
முத்தமிட்டு முலைப்பாள் ஊட்டி
முகம் மலர்ந்திட ஆசைதான்.

என்ன செய்ய - கசிப்பு குடிக்க
அப்பா பட்ட கடனை அடைக்கவும்
ஆச்சியின் செத்த வீட்டுக்கு அதிகார
துரையிடம் வாங்கிய கடனை
அடைக்கவும் அரைவயிறு
சோற்றுக்காய்
மலையேறி ஓடியோடி மாடுபோல்
உழைத்தும் சத்தான சாப்பாடு
இன்றி உதிரம் காணாமல்
பால் சுரக்காமல் போவதால்
பாசம்கூட பாலைவனம் போல்
வரண்டு போகுதே.


கண்ணா!
நீ வளர்ந்து நன்றாய் படித்து
பல்கலைக்கழகம் போய்
பட்டங்கள் பெற்று சட்டங்கள் கற்று...

பரம்பரையாய் பாவி நாங்கள்
மலையக மண்ணில் மாடாய்
உழைத்து களைத்து
ஓடாய் தேய்ந்தும்

ஏன் என்றும் கேட்க நாதியின்றி
காலமெல்லாம் கடனாளியாகவே
சந்தோஷம் காணாமலே
கடனாளியாகவே வாழ்ந்து
இந்த மண்ணுக்கே உரமாகும்
மலையக மாந்தரின் மடைமையைப்
மாற்றுவாயாக மகனே!



ஞெ.கே. வேணி,
பலாங்கொடை.



# அன்புள்ள அம்மா

பிரசவம் ஒரு இயற்கை நிகழ்வு. உலகில் 3 விநாடிக்குள் ஒரு குழந்தை பிறக்கின்றது. ஆனால் ஒவ்வொரு தாய்க்கும் இது வாழ்வில் ஓர் முக்கியமான காலம். மகிழ்ச்சி, பயம், கடின உழைப்பு கலந்த ஓர் புதிய அனுபவம்.

கர்ப்ப காலத்தில் தாய்மாருக்கு மனதில் எழும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் விதத்திலும் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மாற்றம், பிரச்சினைகள் என்பவற்றை விளக்கவும் எடுத்த முயற்சி இது. சற்று ஆழமாக காலை வைத்திருப்பதாக தோற்றலாம். ஆனால் இந்த கணினி யுகத்தில் கண்ணாடித் தன்மை (Transparency) அவசியமென நான் கருதுகின்றேன். மருத்துவம் மூடுமந்திரமாய் இருந்த காலம் விண்ணேறிவிட்டது. நோயாளிகள் தங்கள் பிரச்சினைகளை நன்கு விளக்கமாக அறியவிளைகின்றனர். **Dr. சி.நவநீதன்**

# ஆரம்ப கால கர்ப்பத்தில் ஏற்படும் பிரச்சினைகள்

**கருச்சிதைவின் அறிகுறிகள் என்ன?**

குருதிப்போக்கு, வயிற்று நோ என்பக கருச்சிதைவின் ஆரம்ப அறிகுறிகள் ஆகும். எனவே உடன் வைத்திய ஆலோசனையை நாடவேண்டும் கருச்சிதைவை தடுக்க முடியாது விடினும் ஏனைய தொடரும் சிக்கல்களை (உ+ம்: குருதிப்போக்கு, நோய்த்தொற்று) தவிர்க்க முடியும்.

**அடிக்கடி கருச்சிதைவு ஏற்படுவது ஏன்?**

இதற்கு பல காரணங்கள் உள்ளது. இதற்கு நிபுணத்துவ ஆலோசனையை பெறுதல் அவசியமாகும். தூரப்பயணம் செய்வது கருச்சிதைவை ஏற்படுத்தும் என்பது தவறான கருத்தாகும்.

**கருப்பைக்கு வெளியே கருத்தங்குதல் (Ectopic Pregnancy)**

சாதாரணமாக கருக்கட்டிய முட்டை கருப்பையில் 4ஆம் நாள் பதிவுறும். இவ்வாறு நிகழாவிடின், கரு, பலோக்கியன் குழாயில் (அதாவது கருப்பைக்கு வெளியே) தங்கக் கூடும். கருவின் வளர்ச்சிக்கேற்ப பலோப்பியன் குழாய் விரிவடைய இயலாமல் வெடிக்கும் நிலை ஏற்படும். இதனால் பெருமளவு குருதிப்போக்கு ஏற்படும்.

கடுமையான வயிற்று நோ, குருதிப் போக்கு என்பன, இதற்கான அறிகுறிகளாகும். இது சாதாரணமாக 5 முதல் 8 கிழமைகளுக்குள் நடைபெறும். எனவே கருவுற்ற தாய்மார், கடுமையான வயிற்று நோவிற்கு உள்ளானால் உடனடியாக வைத்தியரை நாடவேண்டும்.

**கர்ப்பகாலத்தில் வாந்தி வருவது ஏன்?**

கர்ப்பத்தின் போது கரு HCG என்னும் ஹோர்மனை உற்பத்தி செய்கிறது. இதுவே வாந்தியை தூண்டுகிறது. கர்ப்பத்தின் போது அதிகளவு வாந்தி எடுப்போர்களின் கரு மிகவும் உறுதியானது எனக்கூறுவார்கள்.

**வாந்தியை தடுக்க முடியுமா?**

இது ஒரு இயற்கை நிகழ்வாதலால் இதை முற்றாக தடுக்கமுடியாது. சாதாரணமாக இது 3ஆம் மாதம் வரை நீடிக்கும். வாந்தி கடுமையாக இருப்பின் வைத்தியரை நாடி ஊசி மூலம் நீர்ச்சத்தை பெறுதல் அவசியமாகும். வாந்தி அதிகமாக உள்ளநேரங்களில் உணவை சிறிய அளவுகளாக பல முறை உண்பது நல்லது. சிலருக்கு உணவு சமைக்கும் மணமே வாந்தியை தூண்டுவதுண்டு.

**வாந்தியைக்குறைக்க சில அறிவுரைகள்**

01.படுக்கையை விட்டு எழு முன்னரே பிஸ்கட் அல்லது தானிய உணவுகள் எதையும் சாப்பிட்டுப் பாருங்கள்.

02.நித்திரையால் எழுந்தவுடன் படுக்கையில் சற்று நேரம் அமர்ந்திருந்து ஆறுதலாக சுவாசியுங்கள்.

03.பொரித்த காரம் கூடிய உணவுகளை தவிருங்கள்.

04.பழங்கள் மரக்கறி வகைகளை அதிகம் உட்கொள்ளுங்கள்.

05.வயிறு முற்றாக வெறுமையாவதை தவிருங்கள்.

**மூச்சிளைப்பு**

பெரும்பாலும் 4ஆம், 5ஆம் மாதங்களில் மூச்சிளைப்பு ஏற்படும். இது தாயின் சுவாசவேகம் அதிகாரிப்பதால் ஏற்படுகிறது. உங்கள் வயிற்றில் உள்ள குழந்தை பெருமளவு இடம் பிடிப்பதால் (நீங்கள் 11 கிலோவை சுமக்கிறீர்கள்) இது ஏற்படுகிறது. உடலில் குருச்சோகை இருந்தால் மூச்சிளைப்பு மேலும் அதிகரிக்கிறது. படுக்கும் பொழுது மேலதிகமாக தலையணை ஒன்றை தோளின் கீழாக வைப்பதன் மூலம் மூச்சிளைப்பை ஓரளவு குறைக்கலாம்.

(தொடரும்)



# பருக்களை நீக்க உதவும் பழங்கள்



**செர்ரி:** செர்ரிப் பழத்தை அரைத்து, அதில் சிறிது ரோஸ் வோட்டர் சேர்த்து கலந்து, முகத்திற்கு மாஸ்க் போட்டு 20 நிமிடம் கழித்து முகத்தை கழுவவேண்டும். இந்த முறையை வாரம் 2 முறை செய்துவந்தால் பருக்கள் நீங்கி, சருமம்பொலிவோடு இருக்கும்.

**தக்காளி:** தினமும் தக்காளியை அரைத்து அதனை முகத்திற்கு தடவி 20 நிமிடம் மசாஜ் செய்து ஊறவைத்து கழுவினால், பருக்கள் படிப்படியாக மறைந்துவிடும்.

**சிவப்பு திராட்சை:** சிவப்பு திராட்சையை தயிர் சேர்த்து அரைத்து, முகத்தில் தடவி ஊற வைத்து 15 நிமிடம் கழித்து கழுவவேண்டும். இந்த முறையை வாரம் 3 முறை செய்துவந்தால் முகப்பருக்களை எளிதில் மறையச் செய்யலாம்.

**ஒரேஞ்சு:** சிட்ரஸ் பழங்களில் ஒன்றான ஒரஞ்சு பழமும் சருமத்தின் அழகை அதிகரிப்பதில் முக்கிய பங்கினை வகிக்கிறது. அதற்கு ஒரேஞ்சு பழத்தைக்கொண்டு முகத்தை மசாஜ் செய்யலாம் அல்லது ஒரேஞ்சு பழத்தோலை பொடி செய்து, முகத்திற்கு :.பேஸ் பேக் போடலாம்.

# மாரடைப்பு தரும் ஆண் ஹார்மோன்



ஆண் ஹார் மோன்கள் ஆணுக்கு சிறப்பான வலிமைகளை தருகின்றன. வலிமை மிக்க உடல் வளமும் தொடர்ந்து நீண்ட காலம் வரை இனப் பெருக்கம் செய்யக் கூடிய சக்தியும் ஆண்களுக்கு மட்டுமே உள்ள இரண்டு பெரிய பலம் ஆகும்.

இத்திறன்கள் பெண்களுக்கு இல்லை தான். ஆனாலும் குறைந்த ஆயுளும் நோய்களை எதிர்த்துப் போராடும் சக்திக் குறையும் ஆண்களின் இரண்டு பெரிய பலவீனங்கள். டெஸ்டிரோஜன் என்ற மிகச் சக்தியுடைய ஆண் ஹார்மோன் உடலுக்கு நல்ல வலிமையை கொடுத்து இதயத்துக்கு வந்து போகும் அனைத்து ரத்த குழாய்களிலும் அடைப்பினை ஏற்படுத்தும் ஒரு பொருளை உண்டாக்கி விடுகிறது.

எச். டி. எல். என்கிற அதிகத் திறனுடைய லிப்போ புரதம் கொழுப்பு பொருட்களைக் கட்டுப்படுத்தி ரத்தக்குழாய்களில் உள்ள அடைப்புகளை சரி செய்து கல்லீரலையும் நல்லநிலையில் வைத்துக் கொள்ள பெரிதும் உதவுகிறது.

மனித ரத்தத்தில் இந்த லிப்போ புரதத்தை உண்டாக்க உதவும் தூண்டு சக்தி இந்த டெஸ்டிரோஜனுக்கு இல்லை. மாறாக இந்த திறமை பெண் ஹார்மோனாகிய ஈஸ்டிரோஜனுக்குதான் உண்டு. இதனால்தான் மாரடைப்பு என்ற பேரிழப்பு ஆண்களுக்கே அதிகம் ஏற்படுகின்றது.

அதிக ரத்த அழுத்தமும், கொலஸ்ட்ரால் கொழுப்புகளால் மாரடைப்பு பெண்களிடம் மிகவும் குறைவு. உடல் வலிமை வேறு. உடலின் எதிர்ப்பு சக்தி வேறு என்பதாகும். வலிமை இயற்கையாகவே ஆண்களுக்கும் நோய் எதிர்ப்பு சக்தி பெண்களுக்கும் தரப்பட்டு விட்ட வரப்பிரசாதமாகும்.

தற்போது உடல் உழைப்பு குறைந்து விட்ட காரணத்தால் கொழுப்பு சக்தி அதிகமாக உடலில் சேர்ந்து மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு மேலும் அதிகமடைந்துள்ளது. அதனால்தான் பஸ் ஓட்டும் போதே மாரடைப்பால் இறந்து விடும் டிரைவர்கள் பற்றிய செய்திகளை அடிக்கடி படிக்கிறோம்.

மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பு இயற்கையாகவே ஆண்களுக்கு அதிகம் இருக்கிறது. இதை சரி செய்ய தினமும் 30 நிமிடம் உடற்பயிற்சி செய்ய வேண்டும். காலை உணவை எந்த காரணம் கொண்டும் தவிர்க்க கூடாது. இவை ஓரளவு மாரடைப்பில் இருந்து நம்மைக் காப்பாற்றும்.

# அளவுக்கு மிஞ்சினால்....

ஒரே நாளில் 42 தடவைகள் இடைவிடாது சுய இன்பத்தில் ஈடுபட்ட 16 வயதுடைய வாலிபன் மரணமடைந்துள்ளான். இந்த விநோத சம்பவம் பிரேஸில் நாட்டின் ரொபியாடோ நகரில் இடம்பெற்றுள்ளது.

"என்னுடைய மகனின் இந்த சுயஇன்ப அடிமைத்தனம் பற்றி நான் முன்னரே அறிந்திருந்தேன். நல்ல மருத்துவரிடம் அவனை அழைத்துச் செல்வதற்கு நான் தீர்மானித்திருந்தேன். ஆனால் என்னுடைய தீர்மானம் தாமதமாகிவிட்டது. அதனால் என்னுடைய மகனை இழந்துவிட்டேன். என்னுடைய மகன் இரவு முழுவதும் சுய இன்பம் காண்பதிலேயே அதிக நேரத்தினை செலவிட்டான்" என்று குறிப்பிட்டிருந்தார்.

தான் சுயஇன்பம் காண்பதை வெப்காமில் பார்த்து ரசிக்கும்படி தங்களை கேட்டுக் கொள்வதாக தெரிவித்த சக நண்பர்கள், அவன் அனைத்துவிதமான பெண்கள் மீதும் அழவுகடந்த காமஉணர்வுடன் நோக்குவதாகவும் சக நண்பர்கள் மேலும் குறிப்பிட்டனர்.

மரணமடைந்த இளைஞனின் அறையிலிருந்து ஏராளமான ஆபாச புத்தகங்கள் மற்றும் பிரத்தியேக கணினியில் ஏராளமான ஆபாசப் படங்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இடுப்பு எலும்புகளை வலுப்படுத்தும் பயிற்சிகள்

ஜிம்மில் தரப்படும் உடற்பயிற்சியில் மிக முக்கியமானதும் மிக அத்தியாவசியமானதும் ப்ளோர் எக்ஸர்சைஸ் எனப்படும் தரைப் பயிற்சிகள்தான். நமது யோகப்பயிற்சிகளை முன்னிறுத்தியே பலவித பயிற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றது. கீகல் பயிற்சிகள் இடுப்பு எலும்புகளை வலுப்படுத்துவதற்கென்றே பிரத்யேகமாக செய்யப்படுகின்றது. தரையில் படுத்துக் கொண்டு இடுப்பு தசைகளை சுருக்குதலும் பின்பு விரிவாக்குதலும் என பல வித நிலைகளால் இப்பயிற்சிகள் செய்யப்படுகிறது. இப்பயிற்சி பெண்களுக்கு பிரசவத்திற்கு பின் ஏற்படும் தசை தளர்தலை சரி செய்ய கூடிய பயிற்சியாகும். இந்த பயிற்சியை தொடர்ந்து செய்து வந்தால் வயிற்று பகுதியில் ஏற்படும் தேவையற்ற சதையை படிப்படியாக குறைக்க முடியும்.



பெண்கள் பக்கத்திற்குரிய தரமான ஆக்கங்கள் வாசகர்களிடமிருந்து வரவேற்கப் படுகின்றன.

லேடிஸ் ஸ்பெஷல்

# பெண்களின் ஆரோக்கியம்

திருமணத்திற்கு முன்புவரை சிற்றிடையும், ஒட்டிய வயிறுமாக இருக்கும் பெரும்பாலான பெண்கள், திருமணமாகி ஒரு குழந்தைபெற்ற பிறகு இடையும், வயிறும் பெருத்து விடுகின்றனர். தேசிய குடும்பநல மற்றும் சுகாதார ஆய்வில் 15 முதல் 45 வயதிற்குப்பட்ட பெண்களின் 11 சதவீதம் பேர் உடல் பருமனாவது தெரியவந்துள்ளது.


மெனோபாஸ் பருவத்தை அடையும் 40 - 60 வயதில் உடல் பருமனான நிலைமாறி, தற்போது 20 - 30 வயதுக்குள் குண்டாகிவிடுகின்றனர். உடல் பருமனாகும்போது அதிகப்படியான கொழுப்புகள் தோலுக்கு அடியில் படிகின்றன. வயிற்றில் சேரும் கொழுப்புகள்தான் மிகவும் ஆபத்தானது.

அடி வயிற்று கொழுப்பினால் நீரிழிவு, இருதயம் தொடர்பான நோய்கள் மற்றும் விரையில் மெனோபாஸ் நிலையை அடைவதன் மூலம் புற்றுநோய் அபாயம் உள்ளது. அதிக அளவு தண்ணீர் குடித்தால் உடலின் நச்சுத்தன்மை வெளிவேறும்.

தூங்கி எழுந்த ஒருசில மணி நேரத்தில் காலை உணவை தொடங்கலாம். முழு தானியங்கள், புரோட்டீன் நிறைந்த உணவுகளை சாப்பிடவேண்டும். இரவில் வெகு சீக்கிரம் சமையலறையை மூடிவிடவேண்டும். தாமதமாக உணவு உண்பதை தவிர்ப்பது நல்லது.

கேழ்வரகில் கல்சியம் அதிகம் உள்ளது. ஓட்ஸ் கொழுப்பை குறைக்கிறது. பார்லி தானியம் நீரிழப்பை குறைக்கிறது. பெண்களின் ஹோர்மோன் செயற்பாட்டுக்கு சோயா நல்லது. இவற்றை உணவில் தவறாமல் சேர்க்கவேண்டும்.

வாயுத்தொல்லை, நெஞ்செரிச்சல், மலச்சிக்கல் போன்ற தொந்தரவுகளிலிருந்து விடுபட விழிப்புடன் இருக்கவேண்டும். ஹோட்டல் உணவை தவிர்ப்பது நல்லது. முறையான உடற்பயிற்சி செய்து வயிற்றுக் கொழுப்பை குறைப்பதே பெண்களுக்கு ஆரோக்கியமானது.



# பெண்களின் பயம்

## மன உளைச்சலுக்கு நவீன சாதனம்

பெண்களுக்கு எதிரான குற்றங்கள் அதிரித்துவருகின்றன. இந்நிலையில் பெண்கள் தனியாக செல்லும்போதோ, அலுவலகத்திலோ அவர்களுக்கு ஏதேனும் தொந்தரவுகள் காரணமாக அச்சம் இருக்குமானால் அதை பதிவுசெய்யும் கருவி ஒன்றை தெற்கு டில்லியை சேர்ந்த யாஷ்பாட்டியா என்பவர் கண்டுபிடித்துள்ளார்.

டில்லி தேசிய நிறுவனத்தில் பேஷன் டெக்னாலஜி பயின்ற பட்டதாரியான இவர் கண்டுபிடித்துள்ள இக்கருவி புளூடூத் தொழில்நுட்பத்தைக் கொண்டது. ஏழு கிராம் எடையுள்ள சதுர வடிவில் இருக்கும் இச்சாதனம் ரீச்சார்ஜபள் பேட்டரிகளை கொண்டது எனத் தெரிவித்துள்ளார். மேலும் இக்கருவியானது இரத்த அழுத்தம், இதயத்துடிப்பு, சுவாச விகிதம் போன்றவற்றையும் கண்டறிய உதவுகிறது.

அதோடு இக்கருவியை பொருத்திக்கொண்ட பெண்களுக்கு வாழ்க்கையில் அச்சுறுத்தும் தருணங்கள் வரும்போது பயம் மற்றும் நடுக்கத்தை நீக்கி பிரச்சினைகளை எதிர்கொள்ளும் உடலியல் மாற்றங்களை கொடுக்கிறது, என்று பாட்டியா தெரிவித்தார்.

பொது இடங்களில் திடீரென ஏற்படும் கூட்டநெரிசலில் சிக்கிக்கொள்ளும் பெண்கள் ஆபத்தில் இருந்து தன்னை காப்பாற்றிக்கொள்ளவும் இது உதவும். அதாவது பெண்கள் இந்த கருவியை பொருத்தியிருந்தால், அவர்கள் ஏதேனும் சிக்கலில் மாட்டிக்கொள்ளும் போது இக்கருவியானது அப்பெண்ணின் குடும்ப உறுப்பினர்கள் அல்லது நண்பர்களின் செல்போனுக்கு மின் அணு மூலம் குறுந்தகவல் அனுப்பும் ஆற்றல் கொண்டது என பாட்டியா தெரிவித்துள்ளார்.

# பெண்களே! ஆண்களுடன் பேச தயக்கமா?



**தினமும்** நாம் செல்லும் இடங்கள், சந்திக்கும் நபர்கள் என அனைத்து இடங்களிலும் பெண்களை மட்டுமே காண முடியாது. ஆண்களும் தான் இருப்பார்கள். எனவே அவர்களிடம் எப்படி அணுக வேண்டும், எப்படி பழகவேண்டும் என்பதை தெரிந்துகொள்ள சில டிப்ஸ்கள் இதோ....

ஆண்களின் மத்தியில், நம்முடைய நடையும், நிற்கும் ஸ்டைலும், எந்தளவிற்கு நாம் தன்னம்பிக்கையுடன் இருக்கிறோம் என்பதைக் வெளிக்காட்டும். எனவே எப்பொழுதும் முதுகை நிமிர்த்தி, கழுத்தை நேராக வைத்து இருந்தால், அது தன்னம்பிக்கையுடன் இருக்கும் தோற்றத்தைத் தரும். ஆண்களை ஈர்க்க, மற்றொரு வழி நன்றியுடன் இருத்தல். சில பெண்கள் தன்னம்பிக்கையுடன் இருக்கின்றோம் என்று நினைத்துக்கொண்டு, திமிராக நடந்து கொள்வார்கள். ஆனால் அது தேவையற்றது. ஆகவே அடக்கத்துடனும், அமைதியுடனும் நடந்துகொண்டாலே போதுமானது.

தன்னம்பிக்கையை வளர்த்துக்கொள்ள அனைவருடனும், அடக்கத்துடன் பழக வேண்டும். எல்லா விதமான மனிதர்களுடனும் பழக முடியும் என்ற நிலையை அடைய, அனைவருடனும் சகஜமாக பழகவேண்டும் என்பது மிக முக்கியம். பொதுவாக அனைவருடனும் பழகுவது என்பது, ஒருவரை முன்னோக்கி எடுத்துச்செல்லும். இதன் மூலம் ஆண்களிடையே, நன்றாக பழகக்கூடியவர் மற்றும் தன்னம்பிக்கை அதிகம் உடையவர் என்ற எண்ணங்கள் உண்டாகும். பல பெண்கள் வெளியிடங்களில் பேசுவதே இல்லை. முக்கியமாக ஆண்களிடம் பேசுவதே இல்லை. இதுமுற்றிலும் தவறு. தோழமையோடு பேசினால்தான் அனைவருடனும், முக்கியமாக ஆண்களிடம் தன்னம்பிக்கையுடன் பழகமுடியும்.

## தேவையற்ற முடிகளை நீக்குதல்

முகத்தில் வளர்ந்துள்ள தேவையற்ற முடிகளை நீக்க விரும்பினால், இம்முறையைச் செய்துபாருங்கள். ஒரு கிண்ணத்தில், ஒரு தேக்கரண்டி தேன், ஒரு மேசைக்கரண்டி சீனி, சில துளிகள் எலுமிச்சை சாறு ஆகியவற்றை எடுத்துக்கொள்ளுங்கள்.

இதனை ஒரு கரண்டி கொண்டு நன்றாக அடித்துக் கலக்கிப் பசை போலாக்குங்கள். பின் இதனை அப்படியே ஒரு மைக்ரோவேவ் ஓவனில் மூன்று நிமிடங்கள் வைத்து சூடு செய்யுங்கள்.

பிறகு வெளியே எடுத்து, கை சூடு தாங்கும் பதத்தில் வந்ததும், அதனை முகத்தில் முடி வளர்ந்துள்ள பகுதிகளில் தடவிக் கொள்ளுங்கள். குறிப்பாக முடியானது எந்த திசையை நோக்கி வளர்ந்துள்ளனவோ, அந்தத் திசைகளில் தடவவேண்டியது முக்கியம். இப்போது ஒரு சுத்தமான பருத்தியால் ஆன துணி ஒன்றை எடுத்துக் கொண்டு, முகத்தில் இக்கலவை தடவிய பகுதியின் மேல் போர்த்தி அழுத்தி எதிர்த்திசையில் இழுங்கள்.

## கோதுமை மா அல்வா

தேவையான பொருட்கள்

கோதுமை மா - அரை கிலோ,
சுக்குத்தூள் - 10 கிராம்,
நெய் - அரை கிலோ,
முந்திரி, திராட்சை, நட்ஸ் - தேவைக்கேற்ப,
வெல்லம் அல்லது சீனி - அரை கிலோ.

செய்முறை:

கோதுமை மாவில் தண்ணீர் விட்டு, பக்கோடா மாவு பதத்துக்குப் பிசையவும். அதை சூடான எண்ணெயில் பக்கோடா பொரிப்பதுபோல பொரித்தெடுத்து, ஆறியதும், மிக்சியில் பொடித்துக் கொள்ளவும். நெய்யை சூடாக்கி, அதில் முந்திரி, திராட்சை, நட்ஸ் சேர்த்து வறுத்து, அடுப்பை அணைத்து இறக்கிவைக்கவும். 5 நிமிடங்கள் கழித்து, அதில் 750 மி.லி. தண்ணீர்விட்டு, மறுபடி அடுப்பில் வைத்துக் கொதித்ததும், பொரித்த கோதுமை மாவு, சுக்குத்தூள் சேர்க்கவும். வெல்லமாக இருந்தால் தண்ணீர்விட்டு, அடுப்பில் வைத்து, ஒரு கொதிவந்ததும், இறக்கி வடிகட்டி, மாவில் சேர்க்கவும். சீனி என்றால் அப்படியே சேர்த்துக் கிளறவும். கலவை நன்கு சேர்ந்து வந்ததும், இறக்கி, நெய் தடவிய தட்டில் கொட்டி, துண்டுகள் போடவும்.





## தலைமுடியைக் காக்க...

'உன் தலைமுடி உதிர்வதைக் கூட தாங்க முடியாது அன்பே' என்று ஒரு திரைப்பட பாடல் உள்ளது. ஒரு காதலனால் தலைமுடி உதிர்வதை தாங்க முடியுமோ முடியாதோ தெரியாது. ஆனால், நிச்சயமாக இளம் பெண்களால், தங்களது தலைமுடி உதிர்வதைத் தாங்கவே முடியாது. அதற்காக எத்தனை வேண்டுமானாலும் பிரயத்தனம் செய்வார்கள்.

தலைக்கு சீகக்காய் உபயோகப்படுத்துபவர்கள், பொதுவாக சாதம்வடித்த கஞ்சியில் சீகாக்காய் பவுடரைப்போட்டு தேய்த்துக் குளிப்பார்கள்.

ஆனால், சீகக்காய் பவுடரை முந்தைய நாள் இரவே ஒரு லீற்றர் தண்ணீரில் தேவையான அளவுக்குப் போட்டு நன்கு கரைத்து வைத்துவிடுங்கள். பிறகு காலையில் அதனை அடுப்பில் வைத்து நன்கு காய்ச்சி பாதி அளவுக்கு வரும்வரை கொதிக்க வையுங்கள். பிறகு அதனை தேய்த்துப் பயன்படுத்துங்கள். இது நிச்சயம் நல்ல பலனைக் கொடுக்கும். சீகக்காயின் முழுச்சாறும் உங்கள் தலைமுடிக்குக் கிடைக்கும்.

## வாசகர்களின் கவனத்திற்கு...

முரசு வாசகர்களின் உரிமையான வேண்டுகோளுக்கு அமைவாக,
(முரசு 1021 - வாரமொரு அதிர்ஷ்டசாலி - 375)
இப்போட்டியிலிருந்து வெற்றியாளருக்கு வழங்கப்படும் பரிசுத்தொகை ரூபா 250/= என்பதை அறியத்தருகின்றோம்.

250/= ரூபா. வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி

பரிசுப் போட்டி இல :-400

**கேள்வி:** இரத்த அழுத்தம், இதயத்துடிப்பு, சுவாச விகிதம் போன்றவற்றையும் கண்டறிய உதவுகிறது.

**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி:- 28.10.2013**

விடையைப் கீழுள்ள கூப்பனில் எழுதி, தபாலட்டையில் அனுப்பி வைக்கவும். அனுப்பி வைக்க வேண்டிய முகவரி:

வாரம் ஒரு அதிர்ஷ்டசாலி,
பரிசுப் போட்டி இல : 400
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல - 167, யாழ்ப்பாணம்.

சரியான விடையை எழுதியவர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படுவர்.

பரிசுப் போட்டி இல :- 388 இற்கான விடை:- அன்பும், அரவணைப்பும், பாதுகாப்பும்.
பரிசுபெறும் அதிர்ஷ்டசாலி:- க.கதிர்காமநாதன், சங்கம் ஒழுங்கை, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

400

பெயர் : ..........
முகவரி : ..........
..........
தே.அ. அட்டை இல : ..........
விடை : ..........
..........
கையொப்பம் : ..........

அல்ல, மோடியின் கரங்களில் கறையே இல்லை என்று சிலர் வாதிடும்போது தவிர்க்கயியலாதபடி ஜெர்மானியர்கள் நினைவுக்கு வந்துவிடுகிறார்கள். இப்போது இஷ்ரத் ஜஹான் வழக்கு பற்றிய விவாதங்களிலும்கூட இவர்கள் நரேந்திர மோடியைத் தப்புவிக்கவே ஆர்வமாக இருக்கிறார்கள். "இஷ்ரத் ஜஹான் மோதல் கொலை மோடிக்குத் தெரியாமல் நடந்திருக்க வாய்ப்பே இல்லையா? 2002 சம்பவத்தில் மோடி நேரடியாக ஈடுபட்டார் என்று எங்காவது நீதிமன்ற தீர்ப்பு கூறுகிறதா? (கரண் தாப்பருடனான முடிவுறாத டி.வி பேட்டியின்போதும் மோடியே இதையே கேட்டார்). மோடியின் குஜராத்தில் ஏற்பட்டிருக்கும் வளர்ச்சி உங்கள் கண்களுக்குத் தெரியவில்லையா? அந்த ஒரு சம்பவம் (2002) நீங்கலாக மோடிமீது ஏதாவது குற்றம் சுமத்த முடியுமா உங்களால்?"

நம் கண்முன்னால் ஒரு பெரும் குற்றம் நிகழ்ந்திருக்கிறது. அதை ஒருவர் தூண்டிவிட்டிருக்கிறார் அல்லது பின்நின்று இயக்கியிருக்கிறார் அல்லது கண்டும் காணாமல் விட்டிருக்கிறார். குறைந்தபட்சம், அதிலிருந்து நேரடி பலன் ஈட்டியிருக்கிறார். இருந்தும் எப்படி அவரை நம்மில் சிலரால் உயர்த்திப் பிடிக்க முடிகிறது? அவரைத் தாங்கி பிடிக்கவேண்டும் என்று எப்படி, ஏன் சிந்திக்கிறோம்? 'குஜராத் மாதிரி வளர்ச்சி' நம் கண்களைச் கூசச் செய்கிறதா? அழிவைவிட்டுவிட்டு வளர்ச்சியைமட்டுமே அன்னப்பறவைப் போல் நாம் உறிஞ்சி எடுத்து மகிழ்கிறோமா? என்றால், இப்படிப்பட்ட cherry picking மதிப்பீடுகளை ஹிட்லருக்கும்கூட நம்மால் அருளமுடியும் அல்லவா?

இந்துத்துவா கொள்கையோடு உடன்படுவதால் மோடியை உயர்த்திப் பிடிப்பவர்களைக் கூட புரிந்துகொள்ளமுடிகிறது. ஆனால், கற்றறிந்த, நடுத்தர வர்க்க இந்தியர்களில் ஒரு சாரார் மோடியை அவருடைய 'குஜராத் மாதிரி வளர்ச்சிக்காக' 2002ஐ வசதியாக மறந்துவிட்டு ஆதரிப்பதைப் பார்க்கும்போது அச்சமே ஏற்படுகிறது. மோடியை உயர்த்திப் பிடிப்பதன் மூலம் இவர்கள் வெறுப்பு அரசியலையும்கூட சேர்த்தே உயர்த்திப்பிடிக்கிறார்களா? இன்னும் வெளிப்படையாகச் சொல்லவேண்டுமானால், இஸ்லாமிய வெறுப்பைத்தான் இவர்கள் மோடி ஆதரவாக முன்வைக்கிறார்களா? மீண்டும் மீண்டும் மோடியை idolize செய்வதன்மூலம் இவர்கள் தெரியப்படுத்தும் செய்தி என்ன?, யூதர்களை அடியோடு வெறுத்த பலர் ஹிட்லரை மனமுவந்து ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

அறம்சார்ந்த விழுமியங்களை நாம் மீட்டெடுக்கவேண்டிய தருணமிது. ஹிட்லரின் ஜெர்மனி செய்த தவறை மோடியின் இந்தியா இிழைக்கக்கூடாது. குஜராத் அரசு ஆவணங்கள் சொல்வதைப்போலவே அந்த மாநிலம் வளர்ச்சியடைந்திருந்தாலும்கூட நாம் நரேந்திர மோடியை நோக்கி அறம்சார்ந்த கேள்விகளை எழுப்பியே தீரவேண்டும். 2002ஐ நாமும் மறக்கக்கூடாது. மோடி அதனை மறந்துபோகவும் அனுமதிக்கக்கூடாது. மோடியின் செயல்களை நாம் நியாயப்படுத்தி பேசும் ஒவ்வொரு முறையும் நாம் வரலாற்றில் பல அடிகள் பின்னோக்கிச் செல்கிறோம். இப்படி பின்னோக்கி நகர்ந்துநகர்ந்து செல்லும்போது ஒரு கட்டத்தில் நாம் ஹிட்லரின் ஜெர்மனியைச் சந்திக்கவேண்டியிருக்கும்.


அறம் அத்தனை முக்கியமல்ல, வளர்ச்சியைக் காட்டினால்போதும் என்னும் அபாயகரமான செய்தியை அரசியல்வாதிகளுக்கு நாம் வெளிப்படுத்துவது இன்றைய சமூகத்தை மட்டுமல்ல, இனிவரும் சமூகங்களையும் சேர்த்து பாதிக்கும். அதற்குத் துணைபோன பெருமை மட்டும் நமக்கு எஞ்சி நிற்கும்.

## மோடி காட்டும் அபிவிருத்தியின் மறுபக்கம்

இந்தியாவில் மோடி அலை வீசுகிறது. இன்று தேர்தல் வைத்தால் கூட, 545 சீட்டுகளில் 544 சீட்டுகளை மோடி கவ்விப் பிடிப்பார் என்று பி.ஜே.பி.யினர் கூறிவருகிறார்கள். மோடி பிரதமரானால், ஒபாமா மோடியின் காலடியில் விழுவார் என்ற அளவுக்கு பேசுகிறார்கள். மோடி ஒரு சர்வரோக நிவாரணி. இந்தியாவை பீடித்திருக்கும் அத்தனை பிணிகளுக்கும் மோடி ஒருவர்தான் தீர்வு என்றரீதியில் பேசிவருகிறார்கள். இது உண்மையா?, மோடி இந்தியாவின் சர்வரோக நிவாரணியா?

இடதுசாரிகள் ஆதரித்தாலும் மக்களுக்கு எதிரான டாடா, நானோ கார் ஆலையை மேற்கு வங்கத்திலிருந்து விரட்டியடித்தார் மம்தா பானர்ஜி. அங்கிருந்து பெட்டியைத் தூக்கிக்கொண்டு நேராக ரூத்தன் டாடா சென்ற இடம் குஜராத். குஜராத்தில் கட்டப்படும் நானோ கார் ஆலைக்காக, 1100 ஏக்கர்கள் நிலம் ஒதுக்கப்பட்டன. மோடியின் இராஜதந்திரம் வென்றுவிட்டது. குஜராத்தை தொழில் வளர்ச்சியடைந்த முன்னோடி மாநிலமாக்க மோடி விரைந்து நடவடிக்கை எடுக்கிறார் என்று மோடியின் அடிப்பொடிகள் புகழ்ந்தனர். ஆனால், அந்த 1100 ஏக்கர் நிலத்தை வாங்குவதற்கான முத்திரைத்தாள் கட்டணம்கூட ரத்தன் டாடா நிறுவனத்திடமிருந்து வசூலிக்கப்படாமல் விலக்களிக்கப்பட்டது தெரியுமா? மோடி அரசில் ஊழலே இல்லை என்று கூறப்படுகிறது. ஒரு மிகப்பெரிய முதலாளி. பல கோடி ரூபாய்களுக்கு அதிபதி. அந்த முதலாளியிடம் நிலம்வழங்கி, அதற்கு முத்திரைத்தாள் கட்டணம்கூட வசூலிக்காமல் தொழில் தொடங்கச் சொல்வது இராஜதந்திரமா? அதுமட்டுமல்ல... ஒரு நிலத்தை விவசாய நிலத்திலிருந்து வேறு பயன்பாட்டுக்காக மாற்றினால், ஒரு சதுர மீற்றருக்கு குஜராத் விதிகளின்படி ரூபாய் 6 செலுத்தவேண்டும். இந்த 6 ரூபாய் செலுத்துவதிலிருந்தும் ரத்தன் டாடா நிறுவனத்துக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்ல, ரத்தன் டாட்டாவின் காலடியில் மொத்த குஜராத்தையே அடகு வைத்தவர்தான் மோடி. மேற்கு வங்கத்திலிருந்து ரத்தன் டாட்டாவை மம்தா பானர்ஜி விரட்டியடித்ததும் குஜராத்



யூதர்களுக்கு எதிரான ஹிட்லரின் வெறுப்பு பிரசாரத்தை ஜெர்மானியர்கள் ஆட்சேபிக்கவில்லை. அதில் பெரிதளவும் உண்மை இருப்பதாக அவர்கள் நினைத்தனர். யூதர்களை ஜெர்மானியர்களாக அவர்களால் ஏற்கமுடியவில்லை. யூதர்களுக்குத் தேச பக்தி இல்லை என்றும் அவர்கள் தனியொரு குழுவாக இருக்கிறார்கள் என்றும் நமக்கு வரவேண்டிய வாய்ப்புகளை தட்டிப் பறித்துக்கொள்கிறார்கள் என்றும் ஜெர்மானியர்கள் நம்பினார்கள். இந்த பெரும்பான்மை நம்பிக்கையின்மீதே ஹிட்லர் தன் வெறுப்பு அரசியலைக் கட்டமைத்துக்கொண்டான். இந்த வெறுப்பு அரசியலைக் கொண்டுதான் அவன் யூதர்களைக் கொல்லத் தொடங்கினான்.

அரசோடு ஒப்பந்தம் கையெழுத்திட்டார் ரத்தன் டாட்டா. இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதி என்ன தெரியுமா? குஜராத்திலிருந்து டாட்டா நானோ ஆலையின் இயந்திரங்கள் மற்றும் இதர பாகங்களை குஜராத்தில் உள்ள ஆலைக்கு எடுத்துவர ஆகும் மொத்த செலவான 700 கோடியையும் குஜராத் அரசே ஏற்றுக்கொள்ளும். சரி... இந்த சலுகையோடு நிறுத்தப்பட்டதா என்றால் இல்லை. நானோ கார் ஆலையை குஜராத்தில் தொடங்குவதற்காக மோடி அரசு, டாட்டா நிறுவனத்துக்கு 9570 கோடி ரூபாய் கடன்வழங்கும். இந்தக் கடனை டாட்டா நிறுவனம் அடுத்த 20 ஆண்டுகளில் மெல்ல மெல்ல திருப்பிச் செலுத்தினால் போதும். இதற்கான வட்டி எவ்வளவு தெரியுமா? அதிர்ச்சி அடையாதீர்கள். புள்ளி ஒரு சதவீதம்தான் இதற்கான வட்டி.

இது மட்டும்தான் சலுகையா என்றால், இல்லை. முதல் இரண்டாண்டுகளுக்கு டாட்டா நிறுவனத்துக்கு வழங்கப்பட்ட 1100 ஏக்கருக்கான தவணைத் தொகையை செலுத்த வேண்டியதில்லை. இதுதவிரவும், தொழில் வரி, மற்றும் இதர வரிகளுக்கு சலுகை. டாட்டா நானோ கார் தொழிற்சாலை குஜராத்துக்கு வந்தது முதல் அடுத்த இருபது ஆண்டுகளுக்கு, குஜராத் மக்களின் வரிப்பணம் டாட்டாவுக்கு அள்ளி வழங்கப்படும் அளவு என்ன தெரியுமா? 30 ஆயிரம் கோடி. 20 ஆண்டுகளில் 50 இலட்சம் நானோ கார்களை உற்பத்தி செய்வதாக டாட்டா நிறுவனம் அறிவித்திருந்தது. ஒரு காரின் விலை ஒரு லட்சம் என்று வைத்துக்கொண்டால், 50 லட்சம் கார்களுக்கு குஜராத் மக்கள், ஒரு காருக்கு .60 ஆயிரம் வீதம் மானியமாக அளிக்கிறார்கள். இன்று சாலையில் ஓடும் ஒவ்வொரு நானோ காரும், குஜராத் மக்களின் வரிப்பணத்தில் கிடைத்த மானியத்தால் ஓடுகிறது. குஜராத் மக்களின் வரிப்பணத்தில் சலுகை பெற்ற ரத்தன் டாட்டாவுக்கு வெறும் இலாபம் மட்டுமே.

இந்த விபரத்தை மோடி ஆதரவாளர்களிடம் கூறினால், குஜராத்தில் வேலை வாய்ப்பை பெருக்குவதற்காக மோடி இந்தச் சலுகைகளை அளிக்கிறார் என்று கூறுவார்கள். 30 ஆயிரம் கோடி செலவழித்து வேலைவாய்ப்பை பெருக்குவதற்கு பதிலாக, அரசே மேலும் பல பணியிடங்களை உருவாக்கினால், பல்வேறு வேலைவாய்ப்புகள் உருவாகுமே...!!! ரத்தன் டாட்டா போன்ற பன்னாட்டு முதலாளிக்கு இலாபத்தை வழங்கி எதற்காக வேலை வாய்ப்பை உருவாக்கவேண்டும்...?

சரி ஒரு வாதத்துக்காக இதை ஏற்றுக்கொள்ளலாம். உண்மையில், குஜராத்தில் தொடங்கப்பட்ட நானோ கார் ஆலையால் வேலைவாய்ப்பு பெருகியதா?

குஜராத்தில் அமுலில் உள்ள சட்டத்தின்படி ஒரு தொழிற்சாலை தொடங்கப்படுகையில் 85 சதவிகிதமான பணியாளர்கள் உள்ளூரிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இதுதவிரவும் மேலாண்மை மற்றும் கண்காணிப்பாளர் பணியிடங்களில் (Managerial and Supervisorial positions) குறைந்தபட்சம் 60 சதவிகிதம் உள்ளூர் மக்களால் நிரப்பப்படவேண்டும். இந்த சட்டம், உள்ளூர் வேலைவாய்ப்பை உத்தரவாதப்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது.

ஆனால் டாட்டாவின் நானோ ஆலைக்காக இந்த சட்டத்தையும் தளர்த்தி உத்தரவிட்டுள்ளார் மோடி. அப்படி தளர்த்தி உத்தரவிடப்படுகையில், அதில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ன தெரியுமா?

'டாட்டாவுக்கு வழங்கப்படும் இந்தச் சலுகை சிறப்புச் சலுகை. இந்தச் சலுகை, மற்ற தொழிற்சாலைகளுக்கும் தொழில்களுக்கும் பொருந்தாது'. எப்படி இருக்கிறது மோடியின் இராஜதந்திரம்?

மோடியின் இந்த செயலுக்கும், ஸ்பெக்ட்ரத்தை சகாயவிலையில் முதலைகளுக்கு விற்ற ஆ.ராசாவின் செயலுக்கும் ஏதாவது வேறுபாடு இருக்கிறதா?

குஜராத்தில் தொழில் முதலீடு அதிக அளவில் இருக்கிறது என்றால்... அதில் வியப்படைய என்ன இருக்கிறது? இப்படி சலுகைகள் வழங்கப்பட்டால் எந்த தொழில் அதிபர் குஜராத்தில் தொழில் தொடங்க விரும்பமாட்டார்?

வறுமை ஒழிப்பு, சத்துக்குறைவான குழந்தைகள் என்று பல்வேறு அளவீடுகளில் குஜராத் மற்ற மாநிலங்களைவிட பின்தங்கியே உள்ளது. முன்னேற்றம் என்ற பெயரில் சந்திரபாபு நாயுடு ஐதராபாத்தை முன்னேற்றியதும், கர்நாடகா மாநிலத்தில் பெங்களூரு மட்டும் முன்னேறியதும் போலவே, அகமதாபாத் உள்ளிட்ட நகர்ப்புறங்களில் மட்டும் உட்கட்டமைப்பை மேம்படுத்தி, ஒட்டுமொத்த குஜராத்தே வளர்ந்துவிட்டதாக மாயையை உருவாக்குகிறார் மோடி. வறுமையில் உள்ளவர்களை சென்றடையாத வளர்ச்சி, என்ன வளர்ச்சி?

மோடி ஊழலுக்கெதிரானவர் என்று வாதிடுகின்றனர் பி.ஜே.பி.யினர். பி.ஜே.பி. கட்சியைச் சேர்ந்த பாபு போகாரியா என்பவர் சட்டவிரோதமாக குவாரி நடத்தியதற்காக 2006ம் ஆண்டு வழக்கில் சிக்கியவர். அவர் மீதான குற்றச்சாட்டுகள் விசாரணையில் இருந்தபோதே, அவரை தன் அமைச்சரவையில் சேர்த்துக் கொண்ட நேர்மையாளர்தான் மோடி. ஊழலுக்கு எதிராக போராடும் போராளியாக தன்னைக் காட்டிக்கொண்ட மோடிதான், வலுவில்லாத ஒரு லோக்பால் மசோதாவை குஜராத் மாநிலத்தில் அறிமுகப்படுத்தியவர்.

சி.ஏ.ஜி அறிக்கை ஸ்பெக்ட்ரம் விவகாரத்தில் ஏற்பட்ட மொத்த இழப்பீடாக குறிப்பிட்ட ஒரு லட்சத்து எழுபத்தாறாயிரம் கோடியை வைத்து இன்றுவரை அரசியல் செய்து கொண்டிருக்கக்கூடிய கட்சி பி.ஜே.பி. இந்த பி.ஜே.பி.யின் பிரதம வேட்பாளராக, ஊழலுக்கு எதிரான பிதாமகனாக தன்னை அடையாளம் காட்டிக்கொள்ளும் நரேந்திர மோடியின் அரசு, 16 ஆயிரம் கோடி ஊழலில் ஈடுபட்டிருப்பதாக 2012ஆம் ஆண்டுக்கான சி.ஏ.ஜி. அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது. இந்த அறிக்கை குஜராத் சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டபோது, எந்தவிதமான விவாதமும் நடத்த அனுமதிக்காமல், ஒட்டுமொத்த எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் சஸ்பெண்ட் செய்தவர்தான் இந்த மோடி. 2013ஆம் ஆண்டுக்கான அறிக்கையில், ரிலையன்ஸ், எஸ்ஸார் உள்ளிட்ட பல்வேறு பன்னாட்டு முதலாளிகளுக்கு சலுகைகளை அள்ளிவழங்கி கோடிக் கணக்கில் நஷ்டத்தை ஏற்படுத்தி இருக்கிறார் மோடி என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

குஜராத் சட்டமன்றத்தில் எவ்விதமான எதிர்ப்பையோ, விவாதத்தையோ அனுமதிக்க மறுப்பவர் மோடி. சட்டமன்றத்தில் விவாதத்தில் பங்கெடுப்பதைவிட, அரசியல் மேடைகளில் சோனியா குடும்பத்தையும், மன்மோகன் சிங்கையும், பாகிஸ்தானையும் திட்டுவதையே முழுநேர வேலையாக வைத்துள்ளார் மோடி.

இந்த மோடிக்கும், காங்கிரஸ் கட்சியில் உள்ள அரசியல்வாதிகளுக்கும் என்ன வேறுபாடு? காங்கிரஸ் கட்சி அரசியல்வாதிகளுக்கு எந்த விஷயத்திலும் வேறுபாடு இல்லாதவரே இந்த மோடி. சென்னை மொழியில் சுருக்கமாகச் சொன்னால், மோடி ஒரு டுபாக்கூர் பேர்விழி.

இவரது டுபாக்கூர் வேலைகளுக்கான சிறந்த உதாரணம், உத்தராகாண்ட் வெள்ளத்திலிருந்து ஒரே நாளில் 15 ஆயிரம் பேரைக் காப்பற்றினார் என்ற ப்பி.ஆர் ஸ்டன்ட்.

அதனால், 10 ஆண்டுகளாக ஆண்ட காங்கிரஸ் கட்சிக்குப் பதிலாக மோடி ஒரு ஐந்து ஆண்டுகள் ஆண்டால் என்ன?, கருணாநிதி ஐந்து ஆண்டுகள் ஆண்ட பிறகு ஒரு மாற்றத்துக்காகத்தானே ஜெயலலிதாவை தேர்ந்தெடுத்தோம்... அதுபோல மோடிக்கு ஒரு வாய்ப்பு கொடுத்தால் என்ன? ஒரு மாற்றம் அவசியம்தானே...?

கேள்விகள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகத்தான் இருக்கின்றன. ஆனால் மோடியை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளமுடியாது என்கின்றனர். "ஏழைகளைச் சென்றுசேராத பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தியே அல்ல என்பதில் உறுதியாகவுள்ள இந்திய பொருளியலாளர்கள்"



# இப்போது ஏன்?

கடந்த 2008இல் சிட்னி மைதானத்தில் எழுந்த இனவெறி குறித்த சர்ச்சையில் சச்சின் ஏன் உண்மையை மறைத்தார் என்பது விளங்க வில்லை என்று ரிக்கி பொன்ரிங் தனது நூலில் வினா எழுப்பியுள்ளார். 2008 சிட்னி டெஸ்ட் போட்டியில் ஹர்பஜன் சிங் இனவெறியைத் தூண்டும் வகையில் அன்ட்ரூ சைமன்ஸை நோக்கி வார்த்தைப் பிரயோகம் செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டது. பின்னர், விசாரணைக்குப் பிறகு ஹர்பஜனுக்கு மூன்று ஆட்டங்களுக்குத் தடை விதிக்கப்பட்டது. இதனால் இரு நாட்டுக் கிரிக்கெட் சபை களுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. இதன்பின்னர் நடைபெற்ற மேலதிக விசாரணையில் சம்பவம் நடைபெற்ற வேளை ஹர்பஜனுக்கு அருகில் நின்ற சச்சினிடம் இந்த விவகாரம் தொடர்பாகக் கேட்டபோது, சச்சினின் விளக்கம் ஹர்பஜனுக்குச் சாதகமாக அமையவே அவருக்கு 3 போட்டித்தடை நீக்கப்பட்டு அபராதம் மட்டும் விதிக்கப்பட்டது.

இந்நிலையில்தான் சச்சின் ஏன் உண்மையை மறைத்தார் என்று, இன்று பொன்ரிங் கேட்கிறார். போட்டி நடுவரிடம் ஹர்பஜன் குற்றவாளி என்பதற்கு போதிய ஆதாரம் இருந்தது. ஆனால் விசாரணையின்போது சச்சின் இவற்றை மறைத்துவிட்டார். ஏன்தான் இப்படி நடந்தாரோ புரியவில்லை என்று ஆதங்கப்பட்டுள்ளார் பொன்ரிங். இதற்கு சச்சினிடம் ஏதும் பதில் இருக்குமோ தெரியவில்லை.

# ரன் வெள்ளம்



♦இந்திய அணி, அவுஸ்திரேலி யாவுக்கு எதிரான இரண்டாவது ஒரு நாள் போட்டியில் அவுஸ்தி ரேலியா பெற்ற 359 ஓட்டங்களைத் தாண்டி மகத்தான வெற்றி யொன்றைப் பதிவுசெய்துள்ளது. இந்த வெற்றி பல புதிய ஒரு நாள் பதிவுகளையும் உருவாக்கி உள்ளது.

♦2006 இல் ஜொஹானஸ் பேர் நகரில் ஆஸ்திரேலிய அணி 435 ஓட்டங்கள் குவிந்திருந்தது. இதனை தென்னாபிரிக்க அணி துரத்திப் பிடித்து வெற்றியைப் பதிவுசெய்தது. இதற்கு அடுத்த அதிக ஓட்டங்கள் குவித்து வெற்றி பெற்ற ஆட்டமாக இது அமைந்தது.

♦359 என்ற ஓட்ட எண்ணிக்கை இலக்கை இந்தியாவுக்கு எதிராக அவுஸ்திரேலியா நிர்ணயித்த மூன்றாவது முறை இதுவாகும். 2003 உலகக் கிண்ண இறுதிப்போட்டி, மற்றும் 2004 வி.பி. கிண்ண இறுதிப்போட்டியிலும் இது நடந்தது. ஆனால் அந்த இரண்டு போட்டிகளிலும் இந்தியா தோல்வியுற்றது. அதோடு 300 ஓட்டங்களுக்கு மேல் என்ற இலக்கை அவுஸ்திரேலியாவிற்கு எதிராக இந்தியா எதிர்கொண்ட பன்னிரண்டாவது முறை இதுவென்பதும், இம்முறை மட்டுமே வெற்றிபெற முடிந்ததென்பதும் பதிவு.

♦முன்னதாக, கிங்ஸ்ரன் ஜமெய்க்காவில் மே.இந்தியாவுக்கு எதிராக இலங்கை ஒரு விக்கெட் இழப்புக்கு 348 ஓட்டங்கள் பெற்றது சிறந்த பதிவாக இருந்தது. அது சரிக்கப்பட்டு இப்பொழுது இந்தியா ஒரு விக்கெட் இழப்புக்கு 362 ஓட்டங்கள் குவித்து வெற்றிபெற்றுள்ளது.

♦அவுஸ்திரேலிய அணியின் முதல் ஐந்து துடுப்பாட்ட வீரர்கள் ஒரு நாள் போட்டியில் அரைச்சதம் பெற்ற ஒரு சந்தர்ப்பம் இதுவாகும்.

♦2008 இல் கராச்சியில் நடைபெற்ற போட்டியொன்றில் பாகிஸ்தான் வீரர்கள் ஐந்து பேரும், சிம்பாப்பே வீரர்கள் மூன்று பேரும் என்று மொத்தம் எட்டு அரைச்சதங்களுக்கு மேல் பெற்றிருந்தனர். இப்பொழுது ஒரு நாள் போட்டிகளில் இரண்டாவது முறையாக இந்தப் போட்டியில் எட்டு அரைச் சதங்களுக்கு மேல் பெறப்பட்டன.

இந்தப் போட்டியில் பௌண்டரிகள்ால் மாத்திரம் (ஆறுகள், நான்குகள், இரண்டு வகையும் பௌண்டரி என்ற சொற்பதத்துக்குள் அடக்கம்). 438 ஓட்டங்கள் பெறப்பட்டுள்ளன. சாதனைப் பட்டியலில் இது மூன்றாவது இடமாகும். இதில் மொத்தம் 75 நான்குகளும், 23 ஆறுகளும் அடக்கம். இரண்டு நாடுகளுமே பரஸ்பரம் ஒவ்வொரு நாட்டுக்கு எதிராகவும் அதிகூடிய பௌண்டரி பெற்றதும், இந்தச் சந்தர்ப்பமே.

♦சராசரியாக ஒரு ஓவருக்கு ஆறு ஓட்டங்கள் என்றவகையில் அறுபதுக்கு மேற்பட்ட ஓட்டங்களை ஏழு பந்துவீச்சாளர்கள் விட்டுக்கொடுத்துள்ளனர். இப்படியான சந்தர்ப்பம் ஒரு நாள் போட்டிகளில் நான்காவது தடவையாகும்.

♦விராட் கோஹ்லி 52 பந்துகளில் சதம் பெற்றமை ஒரு நாள் போட்டிகளில் இந்திய வீரரின் அதிவேக சதமாக அமைந்தது. அதோடு அவுஸ்திலேிய அணிக்கு எதிராக ஒரு வீரரின் அதிவேக சதமாகவும் அமைந்துள்ளது. எனினும் ஒரு நாள் போட்டிகளில் அதிவேக சதம் அடித்த பெருமை, 2005இல் இந்தியாவுக்கு எதிராக கான்பூரில் சாஹிட் அப்ரிடி எடுத்த நாற்பத்தைந்து பந்துகளில் சதம் என்பதே இன்னமும் முதலிடத்தில் உள்ளது.

# ஓய்வேது

இலங்கை கிரிக்கெட் அணியின் ஆக்ரோஷ வீரராக கடந்த 14 ஆண்டுகளாக வலம்வந்த திலகரட்ண டில்சான் டெஸ்ட் அரங்கிலிருந்து விடைபெற்றிருக்கின்றமை அறிந்ததே. இதுவரையில் 87 டெஸ்ட் போட்டி களில் விளையாடி 5492 ஓட்டங் களையும், 39 வீக்கெட்டுக்களையும் வீழ்த்தியிருக்கும் டில்சான் சீறி வரும் பந்துகளை பாய்ந்து தடுப் பதில் தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரர் ஜென்டி ரோலஷி ர்க்கு இணையானவராக பலராலும் புகழப்பட்டிருக்கின்றார்.

இலங்கை அணியைப் பொறுத்த வரையில் டில்சானின் இழப்பு பாரிய இடைவெளியை ஏற்படுத்தும் என்பது மறுக்கமுடியாதது.

ஒவ்வொரு ஆரம்பத்திற்கும் முடிவு என்பது இன்றியமையாதது என்றவகையில் டில்சானுடைய ஓய்வும் எதிர்பார்க்கப்பட்டதொன்றே.

அந்தவகையில் டில்சான் கிரிக்கெட் அரங்கிலிருந்து ஓய்வு பெற்றாலும், அவரினால் அறிமுகப் படுத்தப்பட்ட "டில்ஸ்கூப்" என்றென்றும் அவரை ஞாபகப்படுத்திக் கொண்டே இருக்கும்.

2009ஆம் ஆண்டு இருபது - 20 உலகக்கிண்ணப் போட்டிகளின் போது இங்கிலாந்தில் வைத்து குறித்த துடுப்பாட்டப் பாணியை டில்சான் அறிமுகப்படுத்தியிருந்தார்.




அதாவது துடுப்பாட்ட வீரருக்கு நேராக வருகின்ற வேகப்பந்துகளை முழங் காலில் இருந்து இலக்குக் காப்பாளரின் தலைக்கு மேலால் செல்லும்வகையில் தூக்கி அடிப்பது. இது பலரையும் ஆச்சரியப்படவைத்ததனால் முன்னாள் அவுஸ்ரேலிய அணித்தலை வரும், நேர்முக வர்ணனையாளருமான அஜன் சப்பல். "டில்ஸ்கூப்" எனப்பெயர் இட்டி ருந்தார். இப்போது பலரும் குறித்த துடுப்பாட்ட முறையைப் பின்பற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



விளையாட்டு
ஜோசெப் கிருஷ்ணா

மோ பரா இங்கிலாந்தின் நீண்டதூர வெற்றிகர ஓட்ட வீரராவார். முப்பது வயதாகும் இவர் 2012இல் நடைபெற்ற லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் ஐந்தாயிரம் மற்றும் பத்தாயிரம் மீற்றர் ஓட்டப்போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றவர். அதேபோல ஓகஸ்ட் மாதம் நடைபெற்று முடிவடைந்த உலக சம்பியன்ஷிப் போட்டி களிலும் இதே இரண்டு போட்டிகளிலும் தங்கப்பதக்கம் வென்றவர். இவர் தனது அடுத்த இலக்குப் பற்றிப் பேசும்போது ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள லண்டன் மரதன் போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெறவேண்டும் என்று ஆசைப்படுவதாகக் கூறியுள்ளார். இவர் பிறந்த நாடு சோமாலியா.

# உள்ளேயிருந்து...



பின்னர் தனது எட்டாவது வயதில் பிரித்தானியாவுக்குக் குடிபெயர்ந் தார். பிரித்தானியா சார்பில் கலந்துகொண்டு பதக்கங்கள் வெல்வது தனக்கு மிகவும் பெருமையாக உள்ளது என்றுகூறும் மோ பரா இன்னொரு அவதானத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். நிறைய தடகள ரசிகர்களால் அவதானிக்கப்பட்ட ஒரு விடயத்தையே இவர் இப்பொழுது சுட்டிக்காட்டியுள்ளார். குறிப்பாக கென்ய தடகள வீரர்கள் பற்றியதாகவே அந்த விமர்சனம் அமைந்திருந்தது. அதாவது இவர்கள் கடந்த இலண்டன் ஒலிம்பிக் போட்டிகள், பின்னர் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் போட்டிகளில் கென்யாவின் சார்பாக விளையாட்டுக் களில் பங்குகொண்டிருந்தனர். ஆனால் ஆறு மாதங்கள் கழித்துப் பார்த்தால், இன்னொரு நாட்டுக்காக விளையாடிக் கொண்டிருக்கிறார்கள் என்று மனம் வருந்தியுள்ளார்.

அதிகபணம் பெறும் ஒரே நோக்கத்திற்காக தமது தாயக அடையாளத்தையே மாற்றிக்கொண்டு இன்னொரு நாட்டுக் குடியுரிமை யைப் பெறுவது எவ்வளவு சுயநலம் என்பதை இவர் சுட்டிக் காட்டுகிறார். பணம் பாதாளம்வரை பாயும். அப்படியிருக்க விளையாட்டு மைதானத்தில் பாயாதா என்ன?

# நீர் ஊற்றுவோம்



பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு அநியாய அவப்பெயர் தேடிக்கொடுத்தவர்கள் மூவர். அவர்களுள் அப்போது பதினேழு வயதான மொகஹட் ஆமீரும் ஒருவர். அந்த வயதிலேயே சர்வதேச கிரிக்கெட்டில் குறிப்பிடத்தக்க இடத்தைப் பிடிப்பார் என்று கணிப்பிடப்பட்டிருந்த ஆமிர் தன்னையே வீழ்த்தி, இங்கிலாந்தில் மூன்றுமாதச் சிறைத் தண்டனையும் அனுபவித்து வெளியே வந்தார். இப்போது தான் செய்த அநியாயத்தனமான செயலால் தனக்கும், தன் குடும்பத்துக்கும் நாட்டுக்கும் அவமானத்தைத் தேடி விட்டேன். அதற்கான தண்டனையும் அனுபவித்துவிட்டேன். இப்போது ஐ.சி.சி. எனக்கு விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்கி, பாகிஸ்தான் உள்ளூர் போட்டிகளில் விளையாட அனுமதிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் என்று மிகப் பணிவாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனக்கு இரண்டாவதாக ஒரு சந்தர்ப்பம் தாருங்களேன் என்று கெஞ்சிக் கேட்டிருக்கிறார் ஆமிர். இந்த விடயத்தில் பாகிஸ்தான் கிரிக்கெட் சார்ந்த உயரதிகாரிகளும் தங்களால் இயன்ற முயற்சிகளைச் செய்திருக்கிறார்கள் போலவே தெரிகின்றது. இத்தகைய குற்றச்சாட்டுக்களில் மாட்டிக்கொண்ட பலர் இவர் அளவுக்கு மீண்டும் கிரிக்கெட் விளையாட கெஞ்சிக் கொண்டிருந்ததில்லை என்று கூறலாம். இதற்குக் காரணம் இவரது துடிப்பான இளவயதும், கிரிக்கெட் மீதுகொண்ட அடங்காத தாகமும் ஆகத்தான் இருக்க வேண்டும். ஆகவே மொஹமட் ஆமீருக்கு இன்னொரு சந்தர்ப்பம் வழங்கலாம் என்றே தோன்றுகின்றது. அவர் குற்றத்தை ஒப்புக்கொள்கிறார். அதற்காகக் கழிவிரக்கம் கொள்கிறார். மீண்டும் இப்படி ஒரு தவறு நடைபெறாதென்று உறுதியளிக்கிறார். தனக்குக் கிரிக்கெட் தவிர வேறொன்றும் தெரியாதென்கிறார். இத்துறை விடயங்கள் மேலும் ஆமிர் மீண்டும் கிரிக்கெட் உல்கத்துக்குள் பிரவேசிப்பது சரியா கத்தான் இருக்கும். அவருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுப்பது பற்றிச் சாதகமாகப் பரிசீலிக்கலாமே.

# இடைத்தரகராகும் மதகுரு



போகிறபோக்கைப் பார்த்தால் மன்னார் ஆயர் ராயப்பு ஜோசேப் முழுமையான ஒரு அரசியல்வாதியாகிவிடுவார் போலிக்கு என்றார் நண்பர் ஒருவர்.

"அவர் எப்பவோ அரசியல்வாதியாகி விட்டாரே, அது உங்களுக்குத் தெரியாதா?" என்றார் இன்னொருவர்.

மன்னார் ஆயர் மட்டுமல்ல, வடக்கில் இருக்கிற அநேகமான கிறிஸ்தவ மத குருமார் முழுநேர அல்லது பகுதிநேர அரசியல்வாதிகளாகத்தான் கனகாலகமாகத் தொழில் பாக்கினம். வெளிநாட்டு இராஜதந்திரிகள், தூதுவர்களே! அவர்களைத்தானே தேடிவருகிறார்கள் என்று விளக்கமளித்தார் அருகில் நின்ற மூன்றாவது ஆள்.

வடபகுதியில் உள்ள பெரும்பாலான கிறிஸ்தவ மதகுருமாரைப் பற்றிய பரவலான பொதுமக்களின் அபிப்பிராயம் இப்படித்தான் உள்ளது. இதை யாரும் மறுக்கவும் முடியாது.

இதில் மன்னார் ஆயர் வணக்கத்துக்குரிய ராஜப்பு ஜோசப்புதான் முன்னிலை வகிக்கிறார்.

தமிழ்த் தேசியத்தின் பாதுகாவலராக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மையான ஆலோசகராக, அந்தக் கட்சிக்குள் நடக்கின்ற போட்டிகள், குத்துவெட்டுகளில் சமாதானத் தூதராக, இடைத்தரகராக, தேர்தல் வியூகத்தை வகுக்கும் முக்கிய பிரதானியாக, பிரசாரகராக என அவர் வகிக்கின்ற பாத்திரங்கள் அதிகம்.

இதனால், அவர் ஏனைய அரசியல் தரப்புகளுடன் கடந்த சிலமாதங்களுக்கு முன்னர் கடுமையாக மோதியுமிருந்தார். குறிப்பாக அமைச்சர் றிஷாட் பதியுதீனுக்கும் மன்னார் ஆயருக்குமிடையில் நடந்த மோதல்கள் உலகறிந்தவை.

இந்த மோதல்களில் இரண்டு தரப்புக்குமிடையில் இருக்கின்ற பரஸ்பரம் இலாபநட்டக் கணக்குகளே முக்கிய காரணங்களாகின.

இதுபற்றி கடுமையான விமர்சனங்களும் உண்மைகளும் பலவிதமான உட்கதைகளும் உண்டு. காலம் ஒரு நாள் அவற்றை திறந்துகாட்டும்.

இலங்கையில் வேறு மதத்தவர்களும் அரசியலில் ஈடுபடுகிறார்களே. அப்படியென்றால், இங்குள்ள கிறிஸ்தவ மதகுருக்கள் அரசியலில் ஈடுபடுவதை ஏன் தவறாகப் பார்க்கிறீர்கள்? என்று நீங்கள் கேட்கக்கூடும்.

வெளிப்படையாகப் பார்த்தால் உங்கள் கேள்வி நியாயமானதே. ஆனால், மதகுருக்கள் மக்களை வழிப்படுத்தவேண்டியவர்கள். அதற்காகவே சமூகம் அவர்களுக்கு முன்னிலையான மதிப்பை வழங்கிக் கௌரவிக்கிறது.

அப்படி முன்னிலை மதிப்பைப் பெறுவோருக்கு அதிகமான பொறுப்புகளுண்டு.

பொதுவாக மதகுருமாரை எந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் மதிப்பதுண்டு. உதாரணமாக, கிறிஸ்தவ மதகுருமாருக்கும் அருட்சகோதரிகளுக்கும் சைவ சமயத்தவர்களும் பெருமதிப்பளிப்பதுண்டு.

அதைப்போல பௌத்தத் துறவிகளை பிற சமயத்தைச் சேர்ந்தவர்களும் மதித்தனர். அவ்வாறே இஸ்லாமிய மௌலவிகளையும் பிற சமூகத்தினர் உயர்வாக மதித்தனர்.

ஆனால், இலங்கையின் இனவாத அரசியல் மக்களை மட்டுமல்ல, மதங்களையும் பிரித்து, தனித்தனிக் கூறுகளாக்கி விட்டன.

இனவாத அரசியலைத் தங்களின் நலனுக்காக கையில் தூக்கிய அரசியல்வாதிகள் மதகுருக்களையும் பயன்படுத்தத் தொடங்கினர்.

இதனால், அந்தந்த சமூகங்களைச் சேர்ந்த மதத்தலைவர்களும் மதகுருமாரும் தத்தம் சமூக நிலைப்பட்ட அரசியலுக்குள் சிக்கி அரசியலில் மூழ்கத் தொடங்கி விட்டனர்.

மதகுருக்கள் அரசியலில் ஈடுபடத் தொடங்க, அவர்கள் மீதான மதிப்பும் மெல்ல மெல்லக் குறையத் தொடங்கியது.

பேரினவாத ஒடுக்குமுறை மேலோங்கிய போது அதனைச் சார்ந்து சில பௌத்த துறவிகள் நின்ற காரணத்தினால், ஒட்டுமொத்தமாகவே பௌத்த துறவிகளின் மீதான மதிப்பு பிறசமூகங்களிடம் மங்கியது.

இப்பொழுது, அதை ஒத்த தன்மை தமிழ்த் தேசிய அரசியலுடன் நிற்கும் மத-குருமாரையும் சூழத் தொடங்கியுள்ளது.

குறிப்பாக தமிழ்த் தேசியக் கட்சிகளிடத்திலும் தமிழ்த் தேசியக் கருத்தியலிலும் நீடித்த குறைபாடாக இருக்கும் ஜனநாயகமின்மை, பிற்போக்குக்குக் குணாம்சம் போன்றவற்றைக் களையாமல், பேணிப் பாதுகாக்கும் மதத்தலைவர்களின் மீதான கேள்விகள் அதிகரிக்கத் தொடங்கிவிட்டன.

இதற்கு நல்ல உதாரணம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளே தொடர்ந்து கொண்டிருக்கும் உள்முரண்பாடுகளையும் அதற்குள்ளிருக்கும் ஜனநாயமின்மையையும் தீர்க்காமல் அதற்குள்ளிருக்கும் அமைப்புகளை கட்டுப்படுத்தி வைத்திருப்பதாகும்.

அப்படி உள்முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணாமல் பொத்திப்பொத்தி வைத்திருக்கவே மேலும் மேலும் முரண்பாடுகளும் உட்பகையும் பெருகிக் கொண்டிருக்கிறது.

இதனால்தான் வடமாகாண சபை வேட்பாளர் தெரிவு தொடக்கம் பதவியேற்பு நிகழ்வு, அமைச்சுப் பகிர்வு போன்றவற்றில் எல்லாம் இழுபறிகளும் முரண்பாடான அறிக்கைகளும் ஏட்டிக்குப் போட்டியான நிலைமைகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன.

இப்படி உள்முரண்பாடுகள் முற்றி வெடிக்கும் நிலையில் குறிப்பிட்ட ஆண்டகையே தலையிட்டு சமரசம் - தரகு - செய்துவைக்கிறார்.

தற்போதும் முள்ளிவாய்க்காலில் பதவிப் பிரமாணம் செய்யவிருந்த மாகாண சபை உறுப்பினர்களை அந்தத் தீர்மானத்தில் இருந்து விலக்கியிருக்கிறார். எனினும் ஆண்டகையின் கட்டளையிலிருந்து ஒரு ஆடு (சிவாஜிலிங்கம்) விலகிவிட்டது.

என்னதான் இராஜதந்திரமாக காய்களை நகர்த்தி, கிழிஞ்சல்களைக் கையால் மறைத்தாலும் தொடர்ந்து ஏற்படும் பொத்தல்களை அவரால் மறைக்கவே முடியாது. இறுதியில் மதத்தலைவர் என்ற அடையாளமும் இல்லை. அரசியல் தலைவர் என்ற அடையாளமும் இல்லை.

இடைத்தரகர் என்ற கதைதான் மிஞ்சும். வரலாறு எப்போதும் உண்மையையும் உண்மைக்காகத் தியாகம் செய்வதையுமே தன்னுடைய பதிவேட்டில் வைத்திருக்கிறது.

**நன்றி:தேனீ**

# பிறக்கிறது இஸ்லாமிய புத்தாண்டு

## முஹர்ரம்




இஸ்லாமிய புதியதொரு வருடம் சந்திக்க இருக்கின்றது. முஹர்ரம் மாதத்தை முதலாகக் கொண்டு ஆரம்பிக்கும் இஸ்லாமியப் புத்தாண்டில் தூய பிரகடனத்தை ஒவ்வொரு முஸ்லிமுக்கும் நினைவுபடுத்திக் கொண்டிருக்கிறது. நடப்பு வருடத்தில் செய்த பாவங்களையும் தவறுகளையும் எண்ணி மனம் வருந்தி அவற்றுக்காக அல்லாஹ்விடத்தில் மன்னிப்புக்கோரி அவற்றை அழித்துவிட்டு புதியதொரு வருடத்தை ஈமானிய உணர்வுகளோடு வரவேற்று இஸ்லாத்துடன் பின்னிப்பிணைந்த வாழ்க்கைக்கான திட்டத்தை தீட்டிக் கொள்ளவேண்டிய தருணம் இது.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவில் குடியேறிய நிகழ்ச்சியை (ஹிஜ்ரத்தை) அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களின் வருடக்கணக்கு கணிக்கப் பட்டுள்ளது. எனவே இதனை ஹிஜ்ரி என்று அழைக்கின்றனர். அல்லாஹ்வின் அருட்கொடையால் நாம் ஹிஜ்ரி 1434ஐ கடந்து ஹிஜ்ரி 1435இல் காலடி வைக்கிறோம்.

ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாகக்கொண்டே வருடத்தின் ஆரம்ப மாதமாக முஹர்ரம் கணிக்கப்படுகிறது. ஆங்கில, தமிழ், சிங்கள வருடங்கள் சூரிய சுழற்சியைக் கொண்டு கணிக்கப்பட்டாலும், சந்திர சுழற்சியின் மூலமாகவே முஸ்லிம்களின் வருடங்கள் கணிக்கப்படுகின்றன. இது இஸ்லாமியவருடத்தின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. ஆனால் அனைத்தும் 12 மாதங்களைக் கொண்டவை.

நபி (ஸல்) அவர்கள் மதீனாவுக்கு வந்தபோது யூதர்கள் ஆஷூரா தினத்தில் நோன்பு நோற்பதை கண்டார்கள். நபியவர்கள் அவர்களிடத்தில் நீங்கள் நோற்கின்ற இந்த நோன்பு எந்த நாள் என்று வினவினார். அதற்கு அவர்கள், "இது ஒரு புனிதமான நாளாகும். இதில் அல்லாஹ் மூஸா(அலை) அவர்களையும் அவர்களது சமுதாயத்தினரையும் ஃபிர்அவ்னிடமிருந்து காப்பாற்றினான், மேலும் ஃபிர்அவ்னையும் அவனது கூட்டத்தினரையும் கடலிலே மூழ்கடித்தான். இதனால் மூஸா (அலை), அல்லாஹ்வுக்கு நன்றிசெலுத்தும் முகமாக அந்நாளில் நோன்பு நோற்றார்கள். ஆகையால் நாங்களும் நோன்பு நோற்கின்றோம்" என்றார்கள். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூஸாவை பின்பற்றுவதற்கு உங்களைவிட நாமே தகுதியானவர்கள் என்றுகூறி, நபி (ஸல்) அவர்களும் நோன்பு நோற்று பிறரையும் நோன்புநோற்க ஏவினார்கள். முஸ்லிம்கள் அனைத்து விடயங்களிலும் யூதர்களுக்கு மாற்றமாக தங்களது நடவடிக்கைகளை ஆக்கிக்கொள்ள வேண்டும் என்பதனையே இஸ்லாம் வலியுறுத்துகின்றது. யூதர்களும் ஆஷூரா நோன்பை நோற்றுவந்ததனால் அவர்களுக்கு மாற்றமாக ஒன்பதாவது நாளும் நோற்கவேண்டும் என்று நபிகளார் கூறியிருக்கின்றார். "வருகின்ற வருடம் நான் இருந்தால் ஒன்பதாவது நாளும் நோன்பு நோற்பேன்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள் ஆனால் நபியவர்கள் அதற்கு முன்னரே மரணித்துவிட்டார்கள்.

சிறப்புப் பொருந்திய புனிதமிகு 4 மாதங்கள் முஹர்ரம், துல் கஃதா, துல் ஹிஜ்ஜா, ரஜப் ஆகும். புனிதமான இம்மாதங்களில் பேணுதலாகவே இருக்கவேண்டும். எவ்வாறு ஹரத்தின் எல்லைகளின் புனிதத்துவத்தை மீறி பாவம்செய்தால் பன்மடங்கு பாவம் கிடைக்குமோ அதே போன்று புனிதமான இம்மாதங்களில் பாவம்செய்வதென்பது பன்மடங்கு பாவங்களை ஈட்டித்தரும். அதே போன்று இம்மாதங்களில் நன்மை செய்வது பல மடங்கு நன்மைகளையும் ஈட்டித்தரும். மேலும் இம்மாதங்களில் போர் புரிவது தடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும் இறை நிராகரிப்பாளர்கள் போரை முதலில் ஆரம்பித்தால் அதனை தடுப்பதற்காக வேண்டி முஸ்லிம்களும் போர் புரியலாம். இந்த புனிதத்தன்மை, பொதுவாக முஹர்ரம் மாதம் உட்பட ஏனைய மூன்று மாதங்களுக்கும் பொதுவானவையாகும்.

முஸ்லிம்களின் வருடக் கணிப்பீட்டில் முதல் மாதம் முஹர்ரம் மாதமாகும். உமர்(ரழி) அவர்கள் தனது ஆட்சிக் காலத்தில் நபித் தோழர்களை ஒன்றுசேர்த்து எப்பொழுது முதல் இஸ்லாமிய வருடம் ஆரம்பிக்கப்படவேண்டும் என்று ஆலோசனை கேட்டார்கள். இதன் அடிப்படையில் பலரும் பல மாதங்களை குறிப்பிட்டார்கள். இறுதியில் முஸ்லிம்களின் முதல் மாதமாக முஹர்ரம் மாதத்தையும் வருடம் ஆரம்பிப்பது நபிகளார் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்ற நாள் என்றும் முடிவெடுத்தார்கள்.

நபி(ஸல்) அவர்கள் உலகத்துக்கு அனுப்பப்பட்ட உன்னத நோக்கத்தை அடைந்துகொள்வதில் அவர்களுக்கு சாதகமாக அமைந்த ஒரு பாரிய திருப்புமுனையான ஹிஜ்ரத் நிகழ்ச்சியை அடிப்படையாககொண்டே இஸ்லாமிய புதுவருடம் கணிக்கப்படுகிறது.

நபியவர்கள் "ஹிஜ்ரத்" ஊடாக இஸ்லாத்திற்கு எதிரான சக்திகளையும் அத்துமீறல்களையும் மிகைத்து தூய இஸ்லாத்தை வாழ்வில் பிரதிபலிக்கச் செய்வதற்கான புதியதொரு வாழ்க்கையை தெரிவுசெய்தார்கள். அதற்கான இலட்சியப்பயணமே ஹிஜ்ரத் நிகழ்வாகும். இன்று ஒவ்வொரு வருடமும் இஸ்லாமியப் புத்தாண்டின் போதும் இதனை நினைவுபடுத்தும் நாம், எம் வாழ்வில் எத்தனை தீய செயல்களை விட்டும் ஒதுங்கி புதிய வாழ்வுக்கு எம்மைத் தயார்ப்படுத்தியிருக்கிறோம்?

வருடத்தின் இறுதிக்கட்டத்தில் இருக்கும் நாம், இந்த வருடத்தில் அமைந்த எமது செயற்பாடுகளை ஒருகணம் மீள்பரிசீலனை செய்ய வேண்டிய தேவையுண்டு. எத்தனை தடவைகள் அல்குர்ஆனை ஓதி முடித்தேன்? பர்ளுத் தொழுகைகளை உரியநேரத்திற்கு நிறைவேற்றினேனா? எத்தனை தடவைகள் தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றினேன்? சுன்னத்தான தொழுகைகளை எந்தளவு நிறைவேற்றினேன்? எனது சொத்திலிருந்து எத்தனை ரூபாய்களை இறைபாதையில் செலவு செய்தேன்? மற்றைய சகோதரர்களுடனும் இரத்த உறவுகளுடனும் உறவுகளைப் பேணி நடந்தேனா?


மொத்தத்தில் இறைவனுக்கும் மனிதனுக்கும் நான் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை எந்தளவு நிறைவேற்றியுள்ளேன்? என எமக்குள் நாம் கேட்டுக்கொள்வதோடு, செய்த பாவங்களுக்கும் தவறுகளுக்கும் அல்லாஹ்விடத்தில் மன்றாடி பாவ மன்னிப்புத் தேடிக்கொள்ளவேண்டும். இந்த வருடத்தைவிட அடுத்த வருடம் எனது வாழ்வில் ஈமானியப் பூக்கள் பூத்துக் குலுங்கவேண்டும் என்ற உறுதிப்பாட்டையும் எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

எனவே, எமது உள்ளத்தையும் புறத்தையும் பரிசுத்தப்படுத்தி புதிய வருடத்தோடு நிஜங்களின் நிதர்சனமாய்த் திகழும் இஸ்லாத்தை இம்மண்ணில் உயிர் வாழச்செய்ய முன்வருவோம். ஒவ்வொரு வருடமும் எம்மைவிட்டுப் பிரிந்துசெல்லும் போது எமது ஆயுட்காலம் குறைவடைந்து மரணம் எம்மை அண்மித்துக் கொண்டிருக்கிறது என்பதனை நினைவில் வைத்துக் கொள்வோம்.

மேலும், பூக்கவிருக்கும் புதுவருடத்துடன் எமக்கு மத்தியில் காணப்படும் அனைத்து பிளவு-களையும் மனக்கசப்புக்களையும் உதறித் தள்ளிவிட்டு சகோதரத்துவத்தை, பரஸ்பர புரிந்துணர்வை கட்டியெழுப்பி இஸ்லாத்தின் இலச்சினையை உயரச்செய்வோம்.

# "ஈத் பெருநாள்" பூரிப்பு

அப்ரார் A.அஸீஸ்,
யாழ்ப்பாணம்.



கதீஜா வீடு கலகலத்து பெரும் அமளிதுமளிப்பட்டுக் கொண்டிருந்தது! மக்கள், பேரப்பிள்ளைகள் என்று அனைவரும் அவள் வீடுவந்து குவிந்துகொண்டிருந்தனர். மகிழ்ச்சி வெள்ளத்தில் கரைபுரண்டோடிக் கொண்டிருந்த அவள் இல்லம் குறும்புப் பேச்சுக்களாலும், குதூகல குழந்தைகளின் மழலைத்தனத்தினாலும் நிறைந்து ஆனந்த இல்லமாக அந்த இல்லத்தை இறுமாப்படையச் செய்து கொண்டிருந்தது.

உம்மா... உம்மா... இந்தாங்க உங்களுக்கும் வாப்பாவுக்கும் உங்க மருமகன் எடுத்துத்தந்த உடுப்புக்கள் என்று மூத்த மகள் ஹப்ஸா முந்திக்கொண்டு கொடுக்க, இளைய மகள் கரீமா இந்தாங்கம்மா இதுதான் ஏன்ட பங்களிப்பு என தனது கடமையை செய்ய அவற்றை பெற்றுக் கொண்டு அகமகிழ்ந்தாள் கதீஜா.

ஏம்மா... இருக்கிறதய உடுத்தக் காணோம், மேலும் மேலும் அடுக்க எனக்கு தேவையா? என்றவளை இடைமறித்த கரீமா... இதெல்லாம் எங்க திருப்திக்கும் சந்தோஷத்துக்கும் தானே உம்மா தாரோம்! நாங்க முதல்ல உங்களுக்குத்தான் எடுப்பதை வழமையாக்கிக் கொண்டுள்ளோம். அதிலதான் உம்மா எங்களுக்கு "பரக்கப் பொழியுது! ம்மா" நாங்க உங்களோடு அன்பும் பாசமுமாய் இருந்தால்தானே அல்லாஹ்வும் எங்களோடை அன்பாக இருப்பார் உம்மா!

சரி மக... நீங்க சொல்லுவது ரொம்ப ரொம்ப சரி மக... நீங்க இப்போ உங்க தாய், தந்தையருடன் எப்படி நடக்கிறீங்க என்பதை பார்த்துத்தானே எதிர்காலத்தில உங்க பிள்ளைகள் செய்யும். அதுவும் நல்லதுதான் என்று ஆமோதித்தவளாக, தன் அலுவல்களை கவனிப்பதற்காக அடுக்களை சென்றாள்.

ஆமாம். விடிந்தால் இனிய ஹஜ்ஜுப் பெருநாள் அவர்களை எதிர்நோக்கி வரவேற்க காந்திருக்கும் இவ்வேளையிலே! அதை அரவணைக்கத்தான் இத்தனை ஆரவாரங்களும் ஆர்ப்பரிப்புக்களும் உண்மையில் கதீஜா குடும்பத்தை "கொடுத்துவைத்த குடும்பம்" என்றுதான் கூறவேண்டும். ஒற்றுமைக்கு எடுத்துக் காட்டான அவர்கள் எந்த விஷேசம் என்றாலும் அத்தனை மக்கள், மருமக்கள் அனைவரும் தாய்வீடு வந்துதான் அந்த விஷேசத்தை கொண்டாடி மகிழ்ந்து திருப்தியடைவார்கள். அந்த பெருநாள் வரவுக்கான ஆரவாரங்கள்தான் அத்தனையும்.

டிங்... டிங்.. டெலிபோன் மணி ஹோலில் அலறவே, அருகில் நின்ற கரீமா... அதனை எடுக்கவே, "அஸ்ஸலாமு அலைக்கும்" என்ற குரலைக்கேட்ட கரீமா! ஆ... "வ அலைக்கு முஸ்ஸலாம்" நூர் தங்கச்சி... எப்படி சுகமா? என்ன ஹஜ்ஜு கடமையெல்லாம் இனிதாக நிறைவேற்றினீங்களா? வரவர நம்ம குடும்பத்திலே "ஹாஜிம்மாக்கள்" பெருகிக் கொண்டு போறாங்க அப்படித்தானே என்றாள்! அல்ஹம்து லில்லாஹ்! எல்லாம் அல்லாட நாட்டம் "அரபா"வை முடித்து இப்போ மினாவிலேதான் தங்கியுள்ளோம்! அய்யாமுல் தஸ்ரீக் நாள் 11, 12, 13 நாட்களில் தங்கி உழ்கிய்யா நிறைவேற்றிவிட்டுத்தானே மக்கா புறப்பட வேணும். உங்க எல்லோருக்கும் ஈதுல் அழ்ஹா வாழ்த்துச் சொல்லத்தான் தாத்தா ஹோல் எடுத்தேன் என்றாள்! உங்களுக்கும் எங்க வாழ்த்துக்கள்!

தங்கச்சி இத மச்சான் பிள்ளைகளுக்கும் கூறுங்க!

சரி தாத்தா... நான்கூறியதாக உம்மா, வாப்பா, தாத்தா, நானாமார், மச்சான்மார்களுக்கும் பிள்ளைகளுக்கும் சொல்லுங்க! அல்லாஹ்வுக்காக தியாகம் செய்யவந்த நாம் செய்யவேண்டிய அமல்கள் அதிகம் இருக்கு. கழியும் விநாடிகளைக்கூட தஸ்பீஹ், திக்ரு, ஸலவாத், குர்ஆன் ஓதுதல், துஆ பிரார்த்தனையில் ஈடுபட மறந்திடாதீங்க நூர் தங்கச்சி!

"ஜஸாஹல்லா ஹுஹைரா" தாத்தா "முபாரகல்லாஹு" தாத்தா! அப்போ நான் வைக்கின்றேன். போனை என்றவளாக ஸலாம் கூறிவிடைபெற்றார். கரீமாவும் அந்த அழகிய வாழ்த்துடன் அவர்களின் நல்வழி நடப்பின் நினைவுகளையும் பெருமையோடு ஒவ்வொருவருக்கும் எடுத்துச்சொல்லி, ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் ஹஜ்ஜு செய்துவந்த அந்த நாளை நினைவூட்டிக் கொண்டிருந்தாள்! அந்த வேளை மஹரிப் தொழுகையை முடிந்தபின்னால்,

அல்லாஹு அக்பர்! அல்லாஹு அக்பர்! என்ற தக்பீர் முழக்கம் பள்ளிவாசல்களில் இருந்து காற்றில் கலந்து செவியை அடைந்தது.

உமம்மா... நீங்க எனக்கு "அடை" சுட்டுத்தந்திடணும் என்பது பேத்தி இக்ராவின் நச்சரிப்பு!

உமம்மா.. நீங்க செய்ற வட்டிலப்பம் தொதல்தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும். இது பேரனின் அன்புக் கட்டளை, இவற்றை கேட்டுச்சிரித்த கதீஜா ம்மா சரிக்கட்டி தந்தா பேச்சு என்றபோது!

ஓ... அடுத்த வீட்டு கீதா குடும்பம், முன்வீட்டு வசந்தா குடும்பம், பின் வீட்டு காந்தா, குடும்பங்களை பெருநாள் விருந்துக்கு அழைக்கலயே என்று எண்ணியவளாய் அடுத்த வீட்டு கீதாவை அழைக்க வாசலுக்குச் சென்றவள், எதிர்வீட்டு ஜுமானா வாசல் எந்தவித ஆரவாரமும் இல்லாது அமைதியாக மூடப்பட்ட கதவுடன் நிசப்தமாக இருப்பதை உணர்ந்தவள் "தீயை" மிதித்தவள் போலானாள்.

வழமையாக அவர்களை கவனிப்பவள், மக்கள் வரவின் திளைப்பில் மறந்துவிட்டது மனதில் வலியை ஏற்படுத்தியது. "அஸ்தஹ் பிருள்ளாஹ்!" என்று மனதுக்குள் இறையிடம் மன்னிப்புக்கேட்டவளாக, வீட்டினுள் ஓட்டமும் நடையுமாக விரைந்தாள்!

என்னம்மா? ஏன்? இப்படி படபடப்பா வாறீங்க என்றால், எதிரே நின்ற கரீமா மகள்.

பாருங்க புள்ள! பாவம் ஜுமானா நான் எப்பவும் அவங்கல்ல ஒரு கண் வைத்து, என்ன இல்ல, இருக்கு என்று பார்த்து உள்ளதை அல்லாஹ் பேரால கொடுப்பேன். இன்று மறந்திட்டன் என சொன்னவளாக.... வந்ததும் வராததுமாக அனைத்து உணவுக்குரிய பொருட்கள், ஜுமானா பிள்ளைகளுக்கு தேவையான உடுபுடைவைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்தாள்!

உம்மா இந்த அபாயா சல்வார் சராராவையும் காசையும் கொடுங்கம்மா என்று ஒரு மகள் கொடுக்க, இந்த சல்லியை கொடுங்க என்று மறு மகள் கொடுக்க, அனைத்தையும் பேக்கில் வைத்து வலது கையால் கொடுப்பது இடது கைதெரியாத படி" எடுத்துச் சென்றாள் ஜுமானாவிடம்!

கதவைத்தட்டி உள்ளே சென்ற கதீஜா பெருநாள் உடை, கேட்டு அழுது கொண்டிருந்த மகளை கலங்கிய கண்களுடன் அமைதிப்படுத்திய ஜுமானாவை பார்த்து பரிதவித்துவிட்டாள்!

இந்தாங்க மக! அல்லாஹ் எப்பவும் நல்லதை நாடுவான். இதுல உங்களுக்கு தேவையான எல்லாம் இருக்கு, சிறப்பாக பெருநாளைக் கொண்டாடுங்க என்றவாறு கையில் செலவுக்கான சல்லியையும் கொடுத்துவிட்டு விடைபெற்றாள்!

ஜுமானாவுக்கு தான், கண்டது கனவா, நனவா என்றதொரு தாக்கம்.. "திக்கற்றவர்களுக்கு தெய்வம்தானே துணை என்று தான் எண்ணிய எண்ணத்தின் ஈடேற்றத்தை கண்டு உள்ளம் பூரித்தது! அந்த வல்லவ்னாம் அல்லாஹ்வுக்கு நன்றி கூறியவளாக, ஹப்ஸா குடும்பத்தினருக்கு துஆ செய்தவளாக பெருநாள் இரவை சிறப்பித்து இனியநாளை கொண்டாட தயாரானாள்.

**(யாவும் கற்பனை)**

# "வரும்... ஆனா... வராது"

கவிஞர், ஓவியர் கலைவாதி கலீல் சேர் சொன்ன சுவையான சம்பவம் இது, ஒரு மாணவனிடம் 'இலை'யைப் பார்த்துவரைவோம். ஓடிப்போய் இலை ஒன்றைப் பிய்த்துக் கொண்டுவா?.. என்றாராம். அந்த மாணவனும் ஆர்வத்துடன் ஓடினானாம். "எங்கேடா ஓடுகிறாய்..?" என்று அதட்டினாராம் அதிபர். "ஆட்டுக்கு இலை பிய்க்கப் போறன் சேர்" என்றானாம். "டேய், ஆட்டுக்கு இலைபிய்க்க வாடா ஸ்கூலுக்கு வாறீங்க? என்றாராம் அதிபர். இல்ல சேர்... கலீல் சேருக்கு... சித்திரம் வரைய... என்றானாம் அந்த மாணவன். "ஓ...ஹோ...ஆட்... 'ஆர்ட்'டுக்கா?" என்று சிரித்தாராம் அதிபர்.



கின்னியா அமீர் அலி

மேலும் கீழும் கோடுகள் போடு, அதுதான் ஓவியம்.

போட்டுப் பார்த்தேன்.

"வரும்" மாதிரியும் இருந்தது.

"வராது" போலவும் தெரிந்தது.

"சீச்சீ...! இந்தப் படம் அசிங்கம்...! என்று விட்டுவிட்டேன்.

செந்தமிழும் நாப்பழக்கம்.

சித்திரமும் கைப்பழக்கம்.

'நா' பழகி நாளாயிற்று.

'கைப்பழக்கம்' சரியில்லை.

வரையும் ஆசை வரையறையின்றி வளர்ந்துகொண்டே போனது.

1983. கவிதை வெறி என் தலைக்கேறிய காலம் அது. 'ஊர்க்குருவி' என்ற பெயரில் கையெழுத்துப் பத்திரிகை ஆரம்பித்தேன். ஓவியர் இஸ்மாயில், கதை கவிதைகளுக்குப் பட்ம் வரைந்துதருவார்.

அவரைப் போலவே நானும் படங்கள் வரைய முயற்சிப்பேன்.

சிவாஜி கணேசனை வரைவேன். அவர் ஜெமினி கணேசனாய்ச் சிரிப்பார்! எம்.ஜீ.ஆரை வரைவேன். நம்பியார் இருப்பார்! ஊஹூம்... நமக்கு... வரும்... ஆனா வராது... என விட்டுவிட்டேன்.

எங்கள் மகன் ரியாட் நன்றாக வரைகின்றான்.

தந்தையின் ஆசைகள் மகன் வழி நிறைவேறுமோ...? நண்பர், ஸ்ரீதர் பிச்சையப்பா, தான் அவனது குரு. அவர் மறைந்தாலும், ரியாட்டின் கோடுகளுக்குள் இடைக்கிடையே...! முகங்காட்டிப் போகின்றார். கனிவுமதி, அமீரடீன், கே.முகம்மட் போன்ற ஓவிய நண்பர்களின் நெறிப்படுத்தலில் ரியாட்டின் ஓவிய முன்னேற்றம் ஒழுங்காகிவருகிறது.

ஓவியர் இஸ்மாயிலிடம் ஒருநாள் சொன்னேன். நானும் வரையணும்!

"ஓ! வரையலாமே..." என்றவர், மேலும் கீழும் கோடுகள் போட்டார்...

அதுதான் ஓவியம்!

ஓ! வியந்தேன்! - உங்கள்...

ஓவியந் "தேன்!" எனச் சொல்லி வியந்தேன்.

"யானை" வரையச் சொன்னார். வரைந்தேன். அது, தும்பிக்கையைத் தூக்க முடியாமல் சரிந்து, நின்றது.

"கை பழகச் சரிவரும்!" என்றார்.

வரும்... ஆனா... வராது.... என்றேன்.

ஓவியர் இஸ்மாயில் என்னிடம் சொன்னார், "நானும் கவிதை எழுதணும்..."

"ஓ! எழுதலாமே...! என்றேன்.

"யாப்பருங் கலக்காரிகை"யைப் புரட்டிப் புரட்டிக் கவிதை இலக்கணத்தைச் சொல்லிக்கொடுத்தேன்.

"தேமா" - புளிக்குது... என்றார். புளிமா - கசக்குது என்றார்.

எழுத... எழுதச் சரிவரும்! என்றேன்.

இன்று -

முப்பது வருடங்கள் ஆகிவிட்டன...

நான் ஓவியம் வரையவுமில்லை.

ஓவியர் இஸ்மாயில் கவிதை எழுதவுமில்லை.

"சொற்சுவை தெரிதல்வேண்டும்!
சுவைபடச் சொல்தல் வேண்டும்!
கற்பனை வளர்தல் வேண்டும்! கவி
நயம் பிறப்பில் வேண்டும்!"

-கவியரசு கண்ணதாசன்-

நாவலப்பிட்டி வைத்தியசாலையில் எம்.எல்.டி.யாகக் கடமையாற்றும் ஜாபீர், வார்ட்டுப் பள்ளியில் என்னோடு ஒன்றாகக் கற்றபோது, நான்காம் வகுப்பில் அழகாக 'வாழைமரம்' வரைவான்.

"அக்குறணை நவாஸ்" மூதூருக்கு வந்திருந்தபோது, இந்திய "அமைதிகாக்கும் படை" முகாமில் வைத்து என்னைப் பார்த்து வரைந்தான்.

கலேவெல எஸ்.எச்.அமீன் மாலை தீவிலிருந்து, "டைனோசர்" வரைந்தனுப்புவான். கவிஞர் எம்.ஐ.எம்.ஸுபைர் ஓவியங்களோடு வெண்பா மடல் வரைவார்.

கவிஞர் எஸ்.நளீம். நாடறிந்த நல்ல ஓவியர். அவருடைய கருத்தாழக் கோடுகளும் கவிதைகளே!

கிண்ணியா மத்திய கல்லூரி - அப்துல் மஜீது மண்டபச் சுவர்களில் வரையப்பட்டிருக்கின்ற, 'அறபு எழுத்தாணி'யின் அழகே தனி...! இனி,

என் ஓவிய ஆசைக்குவருவோம். அதற்கு முன்னால்... எனக்கு முன்னால் வந்து, சிரிக்கிறார் றகுமான் சேர். அவருடைய சிறுவயதில்... சித்திரப்பாட சேர் வகுப்புக்கு வந்து, "இன்றைக்கு என்ன படம் வரையலாம்?" என்றுகேட்ட போது... றகுமான் சேர் சொன்னாராம்....

"கருவாடு கீறுங்க... இல்லேன்னா, செத்த நாயொண்ணு கீறுங்க சேர்..."

-அபிமன்யு-

# ஒற்றுமை- கையாலாகாத்தனங்களை மறைக்கும் வெற்றுக்கோஷம்?



**வட** மாகாண சபைக்கு தெரிவுசெய்யப்பட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வுகடந்த வெள்ளிக்கிழமை (11-10-2013) யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வினை அக்கட்சியின் ஒன்பது உறுப்பினர்கள் புறக்கணித்தனர்.

வட மாகாண சபைத் தேர்தல் முடிந்து மூன்று வாரங்கள்கூட முற்றாக முடியவில்லை. -அதற்குள்தான் எத்தனை குடுமிச் சண்டைகள், குழிபறிப்புகள், வாதப்பிரதிவாதங்கள்!

இத்தனைக்கும் அத்தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் அனைத்துக் கட்சிகளாலும் முன்வைக்கப்பட்ட முதன்மைக் கோஷம் "ஒற்றுமையே தமிழர்களின் பலம்"

வட மாகாணசபைத் தமிழர்கள் ஒற்றுமையாகத்தான், தெளிவாகத்தான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பினால் முன்னிறுத்தப்பட்ட வேட்பாளர்களுக்கு பெருவாரியாக வாக்களித்து அமோக வெற்றிபெற வைத்துள்ளனர்.

ஆனால், அந்தக் கோஷத்தை முன்வைத்து வெற்றிபெற்றவர்களோ, அவர்களுக்கு வாக்களித்தவர்களின் கையிலுள்ள மை காயும்முன்னரே, 'ஒற்றுமை' என்பதெல்லாம் காலாகாலமாக தேர்தலில் சுலபமாக வெல்வதற்கு மட்டும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் கையாலாகாத்தனங்களை, அரசியல் வங்குரோத்தை மறைப்பதற்காக எழுப்பப்படும் வெற்றுக்கோஷம், வெறும் பம்மாத்து -என்று சொன்னவர்களின் கூற்றின் உண்மைத்தனத்தை வெகு விரைவாகவே நிரூபித்துவிட்டார்கள்.

ஒற்றுமையின் வெளிப்பாடாக, கூட்டாகச் செய்யவேண்டிய சத்தியப் பிரமாணத்தை, ரெலோ அமைப்பின் ஆட்சிப்பீட உறுப்பினர்களில் ஒருவரான எம்.கே. சிவாஜிலிங்கம் முள்ளிவாய்க்காலில் செய்தார்.

அதே அமைப்பின் இன்னொரு உறுப்பினர் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனின் கொழும்பு வாசஸ்தலத்திற்குச் சென்று அவர் முன்னிலையில் செய்துகொண்டுள்ளார்.

புளொட்டின் உறுப்பினர்களான சித்தார்த்தன் மற்றும் லிங்கநாதன் ஆகியோர் அக்கட்சியின் செயலாளர் முன்னிலையில் செய்தார்கள்.

அதே அமைப்பைச் சேர்ந்த வேறு இருவர் முதலமைச்சர் முன்னிலையில் செய்துகொண்டுள்ளார்கள். ஈ.பி.ஆர்.எல்.எவ். (சுரேஷ் அணி) உறுப்பினர்களில் மூன்று பேர் வவுனியாவில் ஒரு சட்டத்தரணி முன்னிலையில் மேற்கொண்டனர்.

அக்கட்சியின் வவுனியாவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் அந்த வவுனியா நிகழ்வில் கலந்துகொள்ளாமல் தான் முதலமைச்சர் முன்னிலையில் செய்துகொள்ள தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். அக்கட்சியின் இன்னொரு உறுப்பினர் ஏற்கனவே முதலமைச்சரின் கொழும்பு வாசஸ்தலத்திற்குச் சென்று அவரின் முன்னிலையில் செய்துகொண்டுள்ளார்.

ஒரே குழப்பமாக இருக்கிறதா?. ஒரே வேடிக்கையாக இருக்கிறதா? தலையைச் சுற்றுகிறதா?. தமிழ்ப் பிரதிநிதிகளின் ஒற்றுமை மெய்சிலிர்க்க வைக்கிறதா? யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியைப் புறக்கணித்தமைக்கு அவர்களது சால்ஜாப்பு.

"தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தனிப்பட்ட சிலர் முடிவுகளை எடுப்பது பிழையெனவும் அதனை மக்களுக்காக தெரியப்படுத்தும் வகையிலேயே நாம் நேற்று இடம்பெற்ற . வட மாகாண சபைக்கான உறுப்பினர்களின் சத்தியப் பிரமாண நிகழ்வை பகிஷ்கரித்தோம்".

**ஆகா! மக்களுக்குத் தெரியப்படுத்துவதில் எத்துணை கரிசனை!**

என்னதான் சாக்குப்போக்குகளைச் சொன்னாலும், அந்தப் புறக்கணிப்புக்கு, அந்த முரண்பாடுகளுக்கு நிஜமான காரணம், இவர்கள் எதிர்பார்த்ததுபோல் இவர்களுக்கோ, இவர்களால் சிபாரிசு செய்யப்பட்டவர்களுக்கோ வடமாகாண சபை அமைச்சரவையில் இடங்கள் கிடைக்கவில்லை என்பதுதான்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன், வடமாகாணத் தமிழ் மக்களால் அதிகப் பெரும்பான்மை வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர், முன்னாள் நீதியரசர், இதுவரை ஊழல்போன்ற கறைகள் எதுவும் படிந்திராதவர்.

அவர் வெளிப்படையாகவே கூறுகிறார்; "தனது தம்பி சர்வேஸ்வரனுக்கு அமைச்சர் பதவி அளிக்கும்படி சுரேஷ் பிரேமச்சந்திரன் கேட்டிருந்தார். ஆனால் அதனை என்னால் கொடுக்க முடியவில்லை. அதனால்தான் அவருக்குக் கோபம்".

சுரேஷ் பிரேமச்சந்திரன் சொல்கிறார்; "இல்லை யில்லை! எனது கோபத்திற்குக் காரணம் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவருக்குக் கொடுக்கும்படி முதலமைசரைக் கேட்டிருந்தேன். அவர் கொடுக்கவில்லை".

யாரோ ஒருவர் பொய்சொல்கிறார். முதலமைச்சர், முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரனா? பிரேமச்சந்திரனா?

அவரின் முல்லைத்தீவு மாவட்ட விசுவாசத்தால்தான் அவரது கட்சியைச் சேர்ந்த ஐங்கரநேசன் அத்துறையில் திறமையுள்ளவர் என்ற காரணத்தால் அவருக்கு அமைச்சர் பதவி அளிக்கப்பட்டு அவர் அதனை ஏற்றுக் கொண்டமையினால் - அவரைக் கட்சியிலிருந்து விலக்குமளவிற்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் போய்விட்டார் என்றால் பாருங்களேன்!

அதனை நாம் நம்ப வேண்டுமாம்! சித்தார்த்தனதும், சிவாஜிலிங்கத்தினதும் புறக்கணிப்பும் அவர்கள் எதிர்பார்த்த அமைச்சர் பதவி தமக்கு தரப்படவில்லை என்பது தெரிந்ததே.

இதற்கு ஏன் முழுப் பூசணிக்காயை உள்ளங்கை அளவு சோற்றில் மறைக்கும் நகைச்சுவை நாடகம்?

வட மாகாண சபைக்கு இருப்பதோ நான்கு அமைச்சுகள்தான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கென்றும், அவர்கள் கேட்கும் ஆட்களுக்கென்றும், சாதி, சமயம், பெண் பிரதிநிதித்துவம் என்ற அடிப்படைகளிலும் இந்த நான்கு அமைச்சுப் பதவிகளை பகர்ந்தளிக்கப்பட வேண்டும் என முதலமைச்சரைக் கட்டாயப்படுத்தினால், பாவம் அவர் எங்கே போவார்?.

இது கணித மேதை ராமானுஜம் உயிர்பெற்று வந்தாலுமே தீர்க்கமுடியாத விடயமாயிற்றே!.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் மிகச் சரியாகவே, அந்த நான்கு அமைச்சுப் பதவிகளையும் தகுதி அடைப்படையிலேயே அளித்திருக்கிறார்.

அத்துடன், அமைச்சர்கள் தங்கள் பணிகளை காத்திரமானவகையில் மேற்கொள்வதற்கு உறுதுணையாக ஒவ்வொரு இலாகாவுக்கும், தேர்வுசெய்யப்பட்ட உறுப்பினர்களில் அத்துறைகள் சம்பந்தமான திறமைசாலிகளை நியமித்துள்ளதோடு, 13ஆவது அரசியல் திருத்தத்தின் எந்தச் ஷரத்துகளின் அடிப்படையில் அப்பணிகள் அவர்களுக்கு அளிக்கப்படுகிறது என்பதையும் பட்டியலிட்டு வெளியிட்டுள்ளார்.

இதுவரையிலான அவரது செயற்பாடுகள், வட மாகாண சபைக்கு மட்டுமல்லாது, கிழக்கு மாகாண சபை உட்பட இதர மாகாண சபைகளுக்கும், ஏன் ஸ்ரீலங்கா அரசிற்குமே ஒரு நல்ல முன்னுதாரணமாகும்.

தமிழ்ப் பிரதேசம், தமிழர்களின் பூர்வீகம் என்றெல்லாம் வாய்கிழியக் கத்துகிறார்கள். ஆனால் அமைச்சுப் பதவிகள் என்றால் பிரதேசம், மாவட்டம் என்று பேசி, தங்களின் அசிங்கங்களை, நிர்வாணமாகத் தெரியும் சுயநலன்களை மறைக்க, அவற்றை முன்னிறுத்தியும், நியாயப்படுத்தியும், ஒட்டு மொத்த தமிழினத்தையே அசிங்கப்படுத்துகிறார்கள்.

அத்துடன் சேர்த்து அவர்களது கட்சிகளின் ஆதரவாளர்களையும், அக்கட்சிகளுக்காக உடைமைகளையும் உயிர்களையும் அர்ப்பணித்தவர்களையும் அசிங்கப்படுத்துகிறார்கள். கொச்சைப் படுத்துகிறார்கள். ஒரு தமிழ் அமைச்சர், கட்சி, சாதி, சமய, பால், பிரதேசம், மாவட்டம் ஆகியவற்றைக் கடந்தவராகச் செயற்படும் தன்மையற்றவராக, குறுகிய மனப்பான்மை கொண்டவராக ஏன் செயற்படவேண்டும்?

மொத்தத் தமிழ் இனமே இன்னலுற்றிருக்கும் இவ்வேளையில் அப்படி ஒருவர் செயற்படுவாரானால் அவர் ஒரு தமிழ் அமைச்சராக மட்டுமல்ல, ஒரு தமிழராக இருக்கும் தகுதியையே இழந்தவராக, தமிழ்மக்கள் அவரை ஒதுக்கி ஓரம் கட்டிவிடவேண்டும்.

தமது அவலங்கள்தீர, தமது வாழ்வாதாரங்கள் மேம்படவேண்டிய வழிவகைகளை மேற்கொள்வார் என்ற நம்பிக்கையால்தான்- -ஒரு புதிய காற்றாகச் செயற்படுவார் என்ற நம்பிக்கையால்தான் - முதலமைச்சர் விக்னேஸ்வரனைத் தமிழ் மக்கள் தெரிவு செய்திருக்கிறார்கள்.

இப்பொழுதுதான் அவர் பதவியேற்றிருக்கிறார். அவர் தனது பணிகளைச் சரிவரச் செய்யாதிருப்பதற்குத் தடையாக ஸ்ரீலங்கா அரசாங்கத்திலிருக்கும் கடும்போக்காளர்களும், சிங்களப் பேரினவாதிகளும்தான் முட்டுக்கட்டை போட முனைவார்கள்.

ஆனால், தமிழ்ப் பிரதிநிதிகளே அந்தக் கைங்கரியத்தைச் செய்கிறார்கள்!

முதல்மைச்சர் விக்கினேஸ்வரன் தனது பணிகளில் சறுக்கலாம். அதைக் காலம் கணிக்கும். ஆனால் அவர் சறுக்கவேண்டும் என்றே "கால்தடக்குகள்" போட்டுக் கொண்டிருப்பது என்ன நியாயம்?

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்த வடமாகாண சபைக்குத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் கடுமையாக உழைக்கட்டும். வடமாகாண சபைத் தேர்தலில் மாகாணசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டவர்கள் முதலமைச்சர் விக்னேஸ்வரனின் தலைமையில், அவர்களுக்கு வாக்களித்தவர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றட்டும். அவர்களது வாழ்வாதாரங்களை செழுமைப்படுத்தட்டும்.

அந்தப் பணிகளை அவர்களுக்கு விட்டுவிட்டு, தமிழ் மக்களால் இலங்கை பாராளுமன்றத்திற்கு தமிழ்பேசும் வாக்காளர்களால் தெரிவுசெய்யப்பட்ட ரி.என்.ஏ.யைச் சேர்ந்த 13 பிரதிநிதிகளுக்கும் அரசாங்கம் மாதாமாதம் கைநிறையச் சம்பளம், மற்றும் கொடுப்பனவுகள், வாகன வசதிகள் ஆகியவற்றை வழங்கிவருகிறது.

இவர்கள் அனைவரும் கொழும்பிலும், சிங்களப் பிரதேசங்களிலும் இருந்துகொண்டு, அதிகாரப் பரவலாக்கத்திற்கும், தமிழர்களின் உரிமைகளுக்கும்வேண்டிய செயற்பாடுகளை மேற்கொண்டு இலங்கை அரசாங்கத்திற்கு வேண்டிய அழுத்தங்களைக் கொடுப்பதில் கவனம் செலுத்தவேண்டும்.

வேண்டுமானால் மாவீரர்களின் கல்லறைகளுக்கு மலர் தூவுவது சம்பந்தமான செயற்பாடுகளையும் அவர்கள் மேற்கொள்ளட்டும்.

"ஜனாதிபதி முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்யவேண்டாம் என்று நாம் அனைவரும் இணைந்து நின்று கூறினோம்" என்பது இவர்களின் இன்னொரு குற்றச்சாட்டு!.

இப்படிக் கூறுபவர்கள் பாராளுமன்றப் பிரதிநிதிகளாக ஏற்பு நிகழ்ச்சியில் இவர்கள் செய்துகொண்ட சத்தியப் பிரமாணத்தின் சில வரிகளை தமிழ் மக்கள் நினைவு கொள்வது அவசியம்.

இலங்கை குடியரசிற்கு விசுவாசமுள்ளவனாக இருப்பேன். அதன் அரசியல் அமைப்பிற்கும் சட்டத்திற்கும் இணங்க பற்றுதியோடு பணியாற்றுவேன். அவற்றை உறுதியாக போற்றிக் காப்பேன். தனிநாடொன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ, இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ ஆதரவளிக்கவோ, ஆக்கமளிக்கவோ, ஊக்குவிக்கவோ, பரிந்துரைக்கவோ மாட்டேன்.

இதென்ன இரட்டை வேடம்?, இதை விடவா அது மோசம்?. ஏமாற்றுப் பேச்சுகளுக்கு ஒரு எல் லை இல்லையா?

"நாம் விலகமாட்டோம். தமிழ்த் தேசிய கூட்டமைப்பில் இருந்துவிலகி எந்த சந்தர்ப்பத்திலும் தனித்து இயங்கப்போவது இல்லை" என்ற வக்கணை வேறு.

இதென்ன வாதம்?, இதென்ன நேர்மை அரசியல்?.

விலகினால் அரசியலில் செல்லாக் காசாகிவிடுவோம் என்கிறார்களா? அல்லது, உள்ளுக்குள் இருந்துகொண்டு குழி பறித்துக்கொண்டே இருப்போம் என்கிறார்களா?

## (04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறான சமூகச் சீரழிவுகளை கட்டுப்படுத்துவதற்கு மட்டக்களப்பு மாவட்டத்தில் பிரதேச செயலாளர்களின் ஊடாக பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு யுத்தத்தின் பின்னால் ஏற்பட்ட பாதிப்புக்கள் என்று ஒரு பெரிய பட்டியலே அடுக்கக்கூடிய நிலை ஒன்று காணப்படுவதனை நாம் அவதானிக்க முடிகிறது. அந்தவகையில் தற்போது ஏற்பட்டுவரும் பெண்கள் மற்றும் குடும்பங்கள் மீதான நுண்கடன் நிறுவனங்கள் கடன்களை வழங்கும் தனியார்களுடைய நெருக்குதல்களை இல்லாமல் செய்ய வேண்டிய பொறுப்பு தனிநபர்கள் ஒவ்வொருவர் மீதும் சுமத்தப்பட்டுள்ளன என்றே சொல்லவேண்டும்.

கடந்த மாத இறுதியில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தின் தலைவரான வ.கமலதாஸ் ஆகியோர் இந்த கடன்வழங்கும் நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்து குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தன.

அந்தவகையில், பெண்களுடைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்காக புதுவாழ்வு எனும் விற்பனை நிலையத்தினை (27.09.2013) மட்டக்களப்பு நகரின் மத்தியில் திறந்து வைத்து உரையாற்றிய அரசாங்க அதிபர், மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிக வட்டிக்கு கடன்களை வழங்கும் நிறுவனங்கள் பெண்களின் வீடுகளுக்கு சென்று பெண்களை துன்புறுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருவதாக எனக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. இவ்வாறான பெண்களுக்கான சுயதொழில் விருத்தியினை மேற்கொள்ளும் நிகழ்வுகளின்மூலம் சின்ன விடயங்கள்கூட பெரியபெரிய மாற்றங்களை ஏற்படுத்தும் ஒரு ஊடகமாக அமையும் எனத் தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், நுண்கடன் வழங்கும் நிறுவனங்கள், தனியார் பிழையான நோக்கங்களில் அல்லது அழுத்தம் கொடுத்து மக்களை துன்பப்படுத்தும் எண்ணத்தில் கடன்களை வழங்குகின்ற நிலையில் மாற்றம் ஏற்படவேண்டும் என்பதும், உரிமைகள் பறிக்கப்படும் நிலைப்பாடும் இல்லாமல் போகவேண்டும் என்பதே அனைவரதும் சிந்தனையாகும் என்பதே உண்மையாகும்.






# நிலவுக்கு விண்ணப்பம்

வாக்குறுதி கொடுப்பது
அரசியலில் மட்டுமல்ல.
சரசவியலிலும் சகஜம்!

கட்டியணைக்கையில்
வாக்குறுதிகள் நீளும்!
காரியம் முடிந்ததும்
காற்றில் பறக்கும்!

காதலிகள் ஜாக்கிரதை
காதலர்கள் குளிர்மொழிகள்
தரம் பிரித்து மெய் அறிக!

இதோ ஒரு காதலி
தன் தோழியிடம்
புலம்புகிறாள் கேள்மின்.

நெஞ்சில் நிறைந்தவர் - இன்று
நினைவைத் துறந்தாரோ?
கொஞ்சி மகிழ்ந்தவர் - எங்கே
பஞ்சாய்ப் பறந்தாரோ?

உச்சந்தலையில் அடித்து - ஓர்
சத்தியம் செய்தவர்
பட்சம் இழந்தாரோ - எனை
துச்சமாய் நினைத்தாரோ?

நெஞ்சினை மஞ்சமாய்
நினைத்து துயின்றவர் - இன்று
நெருப்பினை உமிழ்ந்தாரோ?- அன்பு
கொடுப்பின் மறந்தாரோ?

தோளை அணைத்து - எனை
தொட்டுத் தழுவியவர் - அந்த
நாளை மறந்தாரோ?

விரிந்த மஞ்சத்தில் - என்னில்
சரிந்த நாளை மறந்தாரோ?

கொவ்வை இதழ் என்று
கொத்தி மகிழ்ந்திருந்த
கோலம் மறந்தாரோ?

கோபுரக் கலசம் என்றும்
கோலக் கனிகள் என்றும்
எந்தன் நெஞ்சில் சரணடைந்த
நினைப்பை மறந்தாரோ?

ஆலிலை வயிறு என்றும்
நூலிழை இடை என்றும்
ஆயிரம் தரம் சொன்ன
நாளினை மறந்தாரோ?

வாழையின் மடல் என்று
வாகன கால் வருடி.
துகிலினை மிக விலக்கி
துணிவுடன் எனை ஆண்ட
அந்த நாளினை மறந்தாரோ?

பூ மஞ்சம் சதிராட
பூந் தேகம் களமாக
பூஞ் சிரிப்பை பரிமாறி
மாய்ந்திருந்தோம் உயிர் மாறி!

நெஞ்சணையில் நகக் குறிகள் - எம்
பஞ்சணையில் போர்க்குறிகள்!
மஞ்சத்தில் வஞ்சமில்லை
நெஞ்சில் சுகத்துக்கு பஞ்சமில்லை!

நாளினை மறந்தாரோ - எந்த
நாளினை மறந்தாரோ?

மோக முத்தத்தில் - எம்
முகம் நனைய
போக யுத்தத்தில் - எம்
மனம் நனையும்!

அலை அலையாய்
ஆசை எழ
கலை பயிலும்
களம் விரியும்!

உள்ளத்தில் இன்ப
வெள்ளம்!
தேகத்தில் வியர்வை
வெள்ளம்!

இடை வளைந்து - என்
இதழ் பிடித்து - வெட்க
தடை உடைத்து
படை எடுத்த
குடை சாயா மன்னரடி!

இத்தனையும் அவள்
உரைக்க
'போதுமடி நித்திரை
கொள்' என்றாள்
தோழி.

பத்திரமாய் - பக்குவமாய்
தூங்குவதற்கு
பஞ்சணையையும்
விரித்தாள் தோழி!

பஞ்சணை எதற்கடி
தோழி
பஞ்சணை எதற்கடி?
கொஞ்சிட அவர்
இன்றி
பஞ்சணை எதற்கடி?"

'வண்டில்லாத
பூவுக்கு வாசம் ஏனடி?
மழை இல்லாத
ஊருக்கு குடை ஏனடி?
கடல் இல்லாத
ஊருக்கு தூண்டில் ஏனடி?

சூரிய ஒளி இல்லாமல்
தாவரம் செழிக்க முடியுமா?
வீரிய அவரில்லாமல்
என் மனம் தழைக்க இயலுமா?

மழை இல்லாத பூமி
மலர முடியுமா?
அவரில்லாமல் என் மனம்
மகிழ முடியுமா?

தோழிக்கு விடை
சொல்லத் தெரியவில்லை.

'போனவரை எண்ணி
பொழுதைத் தேய்க்காதே!
பொய்களினை நம்பி
மெய் உருகாதே!
என்றாள் தோழி.

என்னை மறந்தாலும் - அவரை
எண்ண மறக்கவில்லை!
கண்ணை மறந்தாலும் - என்
கண்ணாளனை மறக்கவில்லை!
மண்ணை மறந்தாலும் - என்
மன்னவரை மறக்கவில்லை!

பஞ்சணையில் படுத்திருந்தால்
அன்றணைத்த நினைவு வரும்!
கல்லணையில் படுத்தாலும்
அவர் தேக நினைவுவரும்!

என் செய்வேன் தோழி
நான் என் செய்வேன்?

நினைவை நழுவ விட
நெஞ்சு மறுக்கிறது!
கனவில் தழுவிவிட
கைகள் துடிக்கிறது!

என் செய்வேன் தோழி
நான் என் செய்வேன்.

கூடிக் கலந்த சுகம்
நாடி துடிப்பதுபோல
நினைவில் அனுதினமும்!

என் செய்வேன் தோழி
நான் என் செய்வேன்?

எரியும் நிலவொளியில்
அவரைத் தேடுகிறேன்!
இரவு முழுவதையும்
விரயம் ஆக்குகிறேன்!

தூங்க இமை கவிழ்த்தால்
இமையில் அவர் நினைவு!
பாரம் தாங்காமல்
இமைகள் துடிதுடிக்கும்!

என் செய்வேன் தோழி
நான் என் செய்வேன்?

தோழிக்கு வியப்பு
சிறிதளவு குறும்பு
'நிலவொளியில் தேடுகிறாய்
நிலவு இல்லாத இரவில்
இந்தப் பெருவெளியில்
எப்படித் தேடுவாய்?'
என்று கேட்டாள்.

'நிலவுக்கு ஒரு
விண்ணப்பம் போடுவேன்
என் எண்ணப்படி!'
என்றாள் அவள்.

'என்ன விண்ணப்பம்
உரை பார்க்கலாம்!'
'நிலவே நிலவே
போகாதே!
நீல வானத்தைவிட்டு
பிரியாதே!
என்னவர் போனார்
எனைப் பிரிந்து!

விழிவலை விரித்து
தேடுகிறேன்!
மறுபடி அவரைக்
காணும்வரை
நிலவொளி வேண்டும்
நின்றுவிடு!'
தோழிக்கு
அழுவதா? சிரிப்பதா?
என்று தெரியவில்லை!

நிலவுக்கு காதலி போட்ட
விண்ணப்பம்
திருக்குறளிலும் உண்டு
இதோ பாரீர்.

"விடாஅது சென்றாரைக்
-கண்ணினால்- காணப்
படாஅதி வாழி மதி!"

அதிகாரம்: 122 - குறள்: 1210

---




**சிந்தியா! சில தமிழ் ஊடகங்கள் மக்களின் உணர்வுகளைச் சீண்டிவிட்டு இனரீதியான முறுகலை ஏற்படுத்தி குளிர்காய நினைப்பது ஊடக தர்மமா?**

**ம.ஓவியநாதன், யாழ்ப்பாணம்.**

மக்களை வழிப்படுத்தவேண்டிய பொறுப்புமிக்க ஊடகங்களில் சில இவ்வாறு செயற்படுவது என்னமோ உண்மைதான்.

கடந்த கால நிலவரங்கள் இலங்கை ஊடகத்துறை ஏதோ ஒரு பக்கம் சார்ந்து நிற்கவேண்டிய கட்டாயத்தை ஏற்படுத்தியிருந்தது. அந்தவகையில் குறுகிய நலம்கொண்டவர்களின் கைகளுக்குள் அகப்பட்ட ஊடகங்கள் தொடர்ந்தும் குறுகிய நலன்களை முன்னிலைப்படுத்தி செய்திகளை வெளியிட்டு வருகின்றன என்பது வேதனையான விடயம்தான். இவ்வாறானவர்கள் தங்களின் தவறுகளையும், தாங்கள் சுமந்திருக்கும் சமூகப்பொறுப்பையும் உணர்ந்து செயற்படவேண்டும்.

**சிந்தியா! கூட்டமைப்பு, மாவீரர் துயிலும் இல்லங்களை புனரமைக்க நினைப்பது தேவைதானா?**

**K.சந்திரிக்கா, கொள்ளுப்பிட்டி.**

பல்வேறு விமர்சனங்கள் இருந்த போதிலும், கடந்த 30 வருடப் போராட்டத்தில் இழந்த உயிர்கள் அனைத்தும் மதிக்கப்பட வேண்டியவை. அதிலும் விடுதலைப் போராட்ட அமைப்புக்களில் இணைந்து உயிர்களை மாய்த்துக்கொண்ட இளைஞர் -யுவதிகளின் நோக்கம் உயரியதாகவே இருந்தது. (தலைமைகள் தவறான வழியில் செயற்பட்டமை வேறு விடயம்)

எனவே அவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். ஆனால் அவர்களுக்குச் செய்கின்ற மரியாதைகள் எஞ்சியிருக்கின்ற உயிர்களின் சுமூகமான வாழ்விற்கு இடையூறுகளை ஏற்படுத்தாத வண்ணம் அமைவது இன்றியமையாதது. எனவே காலச் சூழல்களுக்கு ஏற்றவகையில் நினைவுகூரல்களும், மரியாதைகளும் அமைவது விவேகமானதாக இருக்கும்.

**சிந்தியா! இலங்கை பொருளாதாரத்தில் தள்ளாடிக் கொண்டிருக்கையில் பொதுநலவாய மாநாடு தேவைதானா?**

**எம்.காந்தன், பதுளை.**

காந்தன்! அரசியல் நோக்கங்களுக்காக பொதுநலவாய மாநட்டை விமர்சிப்பவர்களின் கருத்தை உள்வாங்கிக் கொண்டு இந்தக் கேள்வியைக் கேட்கின்றீர்கள் என்பது புரிகின்றது.

பொதுநலவாய மாநட்டை நடாத்துவதன் மூலம் சர்வதேச முதலீட்டாளர்களையும் உல்லாசப் பிரயாணிகளையும் கவர்ந்திழுப்பதற்கு அரசாங்கம் முயற்சிக்கின்றது.

அரசாங்கத்தின் இந்த எதிர்பார்ப்பு வெற்றியளிக்குமென்றே தெரிகின்றது. பொதுநலவாய நாடுகளின் மாநாட்டைத் தொடர்ந்து பல்வேறு முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்கான வாய்ப்புக்கள் இப்போதே தெரிய ஆரம்பித்திருக்கின்றது.

**சிந்தியா! அழகான ஆண்களை மன்மதன் என்கிறார்களே! உண்மையில் மன்மதனுக்குரிய குணாம்சங்கள் அவர்களிடம் உ ண்டா?**

**மு.சிந்துஜா, வேலனை.**

மன்மதனுடைய குணாம்சங்கள் எப்படிப்பட்டவை அல்லது மன்மதனுக்கு இருக்கவேண்டிய குணாம்சங்கள் என்னவென்று நீங்கள் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை நீங்கள் கொஞ்சம் விளக்கமாகச் சொன்னால் உங்கள் கேள்விக்குப் பதிலளிக்க இலகுவாக இருக்கும்.

**என்ன சிந்தியா! நம்ம சச்சின் ஓய்வு பெறுகிறாராமே?**

**கே.எம்.சபீனா, மாளிகாவத்தை.**

ஒவ்வொரு ஆரம்பத்திற்கும் முடிவு நிச்சயம். இதுவே உலக நியதி. எனினும் சிலரது முடிவுகள் தாங்கமுடியாத இழப்புக்களையும் வேதனைகளையும் ஏற்படுத்துகின்றன. அவ்வாறே சச்சினின் முடிவும் இருக்கின்றது.

இந்திய மக்களின் கிரிக்கெட்டின்



கடவுளாகப் போற்றப்படுகின்ற சச்சின் டெண்டுல்கர் தனது 24 வருட சர்வதேச கிரிக்கெட் வாழ்வை முடித்துக் கொள்கின்றார். இது கிரிக்கெட் உலகின் பேரிழப்பாக இருக்கும். இருந்தபோதிலும் அவரின் சாதனைகளும் தனிப்பட்ட குணாம்சங்களும் கிரிக்கெட் வீரர்களுக்கு முன்மாதிரியானவையாக திகழ்ந்து கொண்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

**சிந்தியா! சொற்புத்தி, சுயபுத்தி. இதில் சிறந்தது எது?**

**கி.தமயந்தி, கிளிநொச்சி.**

தங்களது கீழ்த்தரமான எண்ணங்களையும், ஆழ்மனதின் விருப்பங்களையும் நேரடியாக வெளிப்படுத்த நாதியற்ற மானிடர்கள் வாழ்கின்ற இவ்வுலகிலே சுயமாக பிரச்சினைகளை ஆராயாமல் ஏனையவர்களின் கருத்துக்களுக்கும் உசுப்பேத்தல்களுக்கும் வடிகாலாக அமைவது என்றும் ஆரோக்கியமானதாகவே இருக்காது. எங்களை நாங்களே தரமிறக்கிக் கொள்வதற்குத் தான் வழிவகுக்கும் என்பதை உணருகின்ற எவரும் சொற்புத்தி கேட்டு நடக்கமாட்டார்கள்.

**சிந்தியா! நீங்கள் நல்லவரா?, கெட்டவரா?**

**எஸ்.நரேன், மன்னார்.**

நரேன்! உங்களின் கேள்விக்கான பதிலைத் தேடுவதற்காக என் மனச்சாட்சி தராசை தூக்கிப் பார்த்தபோது, தராசின் முட்கள் அங்கும் இங்கும் அலை மோதிக்கொண்டிருப்பதைத்தான் நான் உணரக்கூடியதாக இருக்கின்றது.

அப்படியானால் கமலின் பாணியில் இரண்டும் கலந்த கலவை நான் என்று சொல்லலாம் என்று நினைக்கின்றேன்.

ஸ்ரீ ராம ஜெயம்

## மலையாள மாந்திரிக சக்தி



ஸ்ரீ துர்க்கை தாசன், தேச பந்து, கலாநிதி, பேராசிரியர், P.K.சாமி JP ஐயா

இன்று பெய்கின்ற மழையில் பூக்கின்ற பூக்கள் நிரந்தரம் அல்ல. காலம் காலமாக மணம் வீசும் மல்லிகை பூ மணம் போல 48 வருட காலமாக மாந்திரிக துறையில் சாதிக்க முடியாத விசயங்களைக் கூட சாதிக்கும் உச்சாட பீடம் என்றால் 48 வருட காலமாக தொன்று தொட்டு மலையாள மாந்திரிக துறையிலும் ஜோதிட துறையிலும் செம்மையாக செயல்படும் நிறுவனத்தில் உங்கள் குறை நிறைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

1. ஓடிப் போனவர் தேடி வர வேண்டுமா?
2. தொடர்ந்து கணவன் மனைவி பிணக்கா?
3. காதலன் காதலி பிணக்கு தீர வேண்டுமா?
4. கல்யாணம் கை கூட வேண்டுமா?
5. கல்வியில் சித்தி பெற வேண்டுமா?
6. இழந்ததை ஈடு கட்ட வேண்டுமா?
7. குடி போதையை நிவர்த்தி வேண்டுமா?
8. தீராத நோய்க்கு பரிகாரம் தேவையா?
9. இழந்ததை மீட்க வேண்டுமா?
10. ஆண்மை குறைபாடுகளா?
11. தெட்ட தெளிவான ஜாதக குறிப்புகளுக்கு....

MALAYALA MANTHIRIKA UCHCHADA PEEDAM
23, Mayfield Road, Kotahena, Colombo - 13.
Tel : 011 2342463/4, 011 2470615 Fax : 011 2344831
E-mail : drpksamy@sltnet.lk
நுவெரலியா கிளை: ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தானம்
இல. 33, தினசரி சந்தை கட்டிடம், நுவரெலியா. 052-2222508

# காதிலை பூ கந்தசாமி




வாங்கண்ணா வணக்கமண்ணா
மை சாங்குண்ணு கேளுங்
கண்ணா... நா ஒலரல ஒலரலணா...
ரொம்ப பீலிங்கு பீலிங்கண்ணா...
அட ஆனானா... ஊனானா...
நீ தேசியம் பேசிப் போனா..
ஏண்டான்னு கேட்டாக்கா.. நீ
தன்மானத் தமிழன்தானா...

உந்தப்பாட்டு வந்த நாளில
இருந்து உது பெரிய கிட்டாகிடும்
எண்டு எனக்குத் தெரியுமுங்கோ.
எனக்குத்தானுங்கோ இடையில
கொஞ்சம் பிசியாகிப் போனதாலை
உந்தப் பாட்டைப் பற்றி உங்க
ளோடை பேசமுடியாமல்
போயிட்டுங்கோ.

எலக்சன் நேரத்தில சும்மா
நாலுவரி எழுதிப்போட்டு
மிச்சத்தை எழுதிக்கொள்ளுங்கோ
எண்டு மெயில் பண்ணி
விட்டனுங்கோ.

பிறகு தொல்லைபேசியில
பேசிய விஜேய் பாட்டு நல்லா
இருக்குதுங்கண்ணா... ஆனால்
சிச்சுவேசனுக்குப் பொருத்தமாக
நாங்கள் பல்லவியை மட்டும்
எடுத்துக்கொண்டு சரணத்தை
உங்களுக்கே மெயில் பண்ணு
றோமுங்கண்ணா எண்டாருங்கோ.

நானும் அதை பிறகு பார்க்க
வில்லையுங்கோ. சரணத்தை
கொஞ்சம் மொடிபை பண்ணி நம்
முடைய சிச்சுவேசனுக்கு எழுதினா
எப்புடி பொருத்தமா இருக்கு
துண்ணு பாருங்கோண்ணா...

போட்டுட்டேன் போட்டுட்டேன்
போட்டுட்டேண்ணா வீட்டுக்கு
வாக்கப் போட்டுட்டேண்ணா...
பிடிக்குது... பிடிக்குது... பிடிக்கு
துண்ணா பைத்தியம் இப்ப
பிடிக்குதுண்ணா...

வாங்கண்ணா வணக்க முண்ணா....
பதவிக்குச் சண்டை யிண்ணா...
அணி சேர்ந்து
சண்டையிண்ணா.. ஐயை-
யோ கூட்டுக்குள்ள குடுமி
பிடிச்சண்டைண்ணா...

ஆயர் ஐயா சொல்
லியும் அடங்காத
சண்டையிண்ணா...

அண்ணன்
தம்பிக்கு... அமைச்சு கேட்டு
சண்டையிண்ணா.... தகுதி பார்த்து
கொடுத்ததில தாறு.. மாராச்
சண்டைண்ணா....

இவனுக சண்டையில...வெடிச்சுப்
போச்சு தமிழன் மண்டையிண்ணா...

வாங்கண்ணா வணக்கங்
கண்ணா....

அரசோடு சேர்ந்தாத்தான் ஆட்சி
வண்டி போகுமுன்னு... விக்கி ஐயா
சொன்னதுக்கும்... கேடி பில்லா...
கில்லாடி ரங்காக்கள்... கௌப்புறாங்க
சண்டையண்ணா...

பதவி ஏற்பு வைபவங்கள்
தெருவுக்குத் தெருவா நடக்கு
துண்ணா... மக்கள் ஆணை பாவ
மண்ணா இப்புடி மானங்கெட்டுப்
போச்சுதண்ணா...

அரசியல் காரணங்களுக்கு ஆட்சி
எதிர்ப்பு வேணாமுன்னு விக்கி ஐயா
சொன்னாருண்ணா... அப்படின்னா
தமிழனுக்கு வேறு என்ன பிரச்சனை
ஐயாதாண்ணா சொல்லனுமுண்ணா...

ஐயா ஒன்னும் ஒலரல்லணா...
ஐயோ பாவம் நாங்கண்ணா...
என்னண்ணா நாங்கண்ணா
பண்ணுறதுண்ணா... தேசியம் பேசி
வந்தாங்கண்ணா... தன்மானம்
என்றும் சொன்னாங்கண்ணா...
நம்பித்தான் நாங்க வாக்குப்
போட்டோம்.. நல்லாப் போட்டாங்க
நாமமுண்ணா...

வாங்கண்ணா.. வணக்கமுண்ணா..
தமிழன் சாங்குண்ணு கேளுங்
கண்ணா... நாங்க ஒலரல ஒலர
லண்ணா... ரொம்ப பீலிங்கு
பீலிங்குண்ணா...

அட ஆனானா... ஊனானா....
அவன் தேர்தல் நேரம் வருவான்...
வாக்கு வாங்கிப் போனான்னா...
தெருவத் தாண்டிப் போவான்...
அட வீணாத்தாண்ணா நாங்க
போயிட்டோம்... பிளீஸ் வெளியால
சொல்லாதேண்ணா...

புரிஞ்கோ.... புரிஞ்சுக்கோ
புரிஞ்சுக்கோ... ஈழத் தமிழனின்
பாட்டைப் புரிஞ்சுக்கோ... அறிஞ்சுக்கோ...
அறிஞ்சுக்கோ... அறிஞ்சிக்கோ...
அவமானப்பட்டோம் அறிஞ்சுக்கோ..

வாங்கண்ணா... வணக்கமுண்ணா....
இது கந்தசாமி சாங்குங்கண்ணா....
அடுத்த வாரம் சந்திப்போமுங்
கண்ணா... ஓ.கே.... பாயிங் கண்ணாாா.....

# இலக்கிய இராட்சஸன்



இன்றைக்கு அவரது சிருஷ்டிகள் எல்லாம் மொத்தம் ஆயிரத்து இருநூறு பாகங்கள் இருக்கின்றன. நினைத்துப் பாருங்கள்! 1,200 வோல்யூம்கள். அதாவது பிரசித்திபெற்ற எழுத்தாளர்களான ஜோன் கால்ஸ் வொர்தி, பெர்னாட்ஷா, ஆர்.எல். ஸ்டீவன்ஸன், எச்.ஜி.வெல்ஸ், ரட்யோட்டு கிப்ளிங், மேரி ரோபர்ட்டஸ் ரைன் ஹார்ட், ஸேன்கிரே ஆகிய இத்தனை பேரும் எழுதிய நூல்களின் மொத்த எண்ணிக்கையைப் போல இரண்டு மடங்கு! அப்...பா....! ஏன் இப்படித் திகைத்துத் திணறிப் போகிறீர்கள்?

இந்த இலக்கிய ராட்சதன் யார் என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா? வீரப்பிரதாபங்களும், விறுவிறுப்பான சம்பவங்களும், அழகான கதைப்போக்கும், அதிசயமான சம்பவங்களோடு கூடிய நவரசங்களும் நிறைந்த ஆங்கில நவீனம் எது என்று ஆங்கில இலக்கியம் படித்தவர்களைக் கேட்டால் எல்லோரும் ஒரு முகமாக 'முப்பெருவீரர்கள் (திரீமஸ்கடீர்ஸ்) என்றுதான் சொல்லுவார்கள்.

இப்போது இந்த இலக்கிய ராட்சஸன் யார் என்று தெரிந்துவிட்டதல்லவா? உங்கள் யூகம் தவறல்ல. சாகா இலக்கியங்களைச் சிருஷ்டித்த அலெக்ஸாண்டர் டூமாஸேதான்!

கடந்த நூறு வருஷங்களாக, புத்தக மார்கெட்டிலே அமோகமாக விற்பனையாகக் கூடிய ஆசிரியரின் நூல்களிலே டூமாஸின் நாவல்கள் முதலிடம்பெற்றுவருகின்றன. இந்த நிமிஷத்திலும் கோடிக்கணக்கான ரசிகர்கள், அவர்கள் எந்த மூலையிருந்தாலும் சரி, எந்த மொழி பேசுபவரானாலும் சரி, அந்த மொழிகளில் உள்ள டூமாஸின் நாவலில் ஏதாவது ஒன்றைப் படித்துக் கொண்டுதானிருக்கிறார்கள்.

அலெக்ஸாண்டர் டூமாஸ் ஒரு அதிசய மனிதர். கதை கட்டுவதோடுகூட தன்னைப்பற்றி கதை பரப்பத்திலேயும் அதிக சமர்த்தர். தனக்கு 500 குழந்தைகள் இருப்பதாகச் சொல்லிக்கொண்டார்!! இந்த எண்ணிக்கை மிகையாக இருக்கலாம். ஆனால் அவரது பருத்த உடலமைப்புக்கும் அவர் பெண்களுடன் பழகிய முறைக்கும் ஓரளவு அது உண்மையாகத்தான் இருக்கவேண்டும்.

(தொடரும்)

# இந்தவாரம் உங்கள் பலன்

(24.10.2013 தொடக்கம் 30.10.2013 வரை)

## மேடம்

வேண்டாத விசயங்களில் தலையிட்டுச் சிக்கலில் மாட்டிக்கொள்ளாது இருக்கவும். வேலையில்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் சம்பந்தமாக பிரயாணங்களை மேற்கொள்ளுவீர்கள். காதல் சம்பந்தமான விசயங்களுக்காக வீண் பொருட்செலவுகள் ஏற்படலாம். குடும்பத்தில் காரணமற்ற சச்சரவுகளும், பொருட்செலவுகளும் உண்டாகலாம். விட்டுப்போன பழைய உறவுகள் மீண்டும் தொடரவாய்ப்பு உள்ளது. திருமணம் போன்ற சுபகாரிய நிகழ்ச்சிகளில் மிகுந்த கவனமுடன் இருக்கவும். நண்பர்களால் புதிய தொழில் முயற்சிகள் மற்றும் புதிய கடன்வாங்குவது போன்ற முயற்சிகளில் வெற்றிபெறுவீர்கள்.

## இடபம்

செல்வ செல்வாக்கு, புகழ்கூடும். புதிய வீடு, நிலம் வாகனங்களை வாங்கக்கூடிய காலமாகும். இதுநாள் வரையில் இருந்துவந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி தேவையான பொருள்வரவு உண்டாகும். குலதெய்வ ஆலய வழிபாடுகளைச் செய்துவருவதற்கான வாய்ப்பு உள்ளது. வீடு மற்றும் வாகனங்களைப் பழுது பார்ப்பதன் மூலம் பொருட்செலவுகள் ஏற்படலாம். பெரிய மனிதர்கள் சந்திப்பால் சில காரியங்களைச் சாதித்துக்கொள்வீர்கள். விருந்தினர் வரவால் மனமகிழ்ச்சியும் பொருள்வரவும் உண்டாக வாய்ப்புகள் உள்ளது. மகான்களின் தரிசனத்திற்காக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்ள திட்டம் போடுவீர்கள்.

## மிதுனம்

வேலையில்லாத படித்த இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புகள் வந்துசேரும். கணவன் – மனைவி உறவுகளில் கவனமுடன் இருத்தலோடு, முன்கோபம் தவிர்த்தல் நல்லது. உற்றார், உறவினர்களால் மனச்சஞ்சலம் வந்துசேரும். பிள்ளைகளால் பொருள்வரவு உண்டாகுவதுடன் அவர்களாலேயே காணாமல் பொருட்செலவுகளும் வந்துசேரும். அண்டை அயல் வீட்டுக்காரர்களுடன் கவனமுடன் பேசிப்பழகவும். உடம்பில் மேகம், உஷ்ணம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். வீடு மற்றும் தொழிற்சாலைகளைத் திருத்திக் கட்டுவதன்மூலம் பொருட்செலவுகள், வரவாய்ப்புகள் உள்ளன. சம்பந்தம் இல்லாத புதிய நபர்களால் சிற்சில ஆதாயங்கள் அடையக்கூடும். விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படும்.

## கடகம்

இரும்பு, இயந்திரம், இரசாயனம் போன்ற துறையைச் சார்ந்தவர்கள், பலசரக்கு, எண்ணெய் வகைகள், பழைய இரும்பு பொருட்கள் ஆகிய வியாபாரம் செய்வோர்கள் நற்பலன் அடைவார்கள். ரேஸ், லோட்டரி போன்றவற்றின் மூலம் திடீர் தனவரவு உண்டாகும். மாணவர்கள் கல்வியில் நல்ல மதிப்பெண்களையும், பரிசு மற்றும் பாராட்டுதல்களையும் பெறக்கூடிய காலமாகும். வீடு மாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் சற்றுக் காலதாமதம் ஏற்படலாம். புதிய நண்பர்கள் சேர்க்கையை தவிர்த்தல் நல்லது. திருமணம் போன்ற சுபகாரியங்கள் சம்பந்தமாக நீண்டதூரப் பயணங்களை மேற்கொள்வீர்கள். செய்தொழிலில் பங்காளிகளால் எதிர்பார்த்த பணம் கைக்கு வந்துசேரும் காலமாகும்.

## சிங்கம்

இதுவரை இருந்துவந்த பொருளாதார நெருக்கடிகள் மாறி மனச்சந்தோசம் அடையலாம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமண காரியம் கைகூடும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் தங்களது தாய்நாடு சென்று திரும்ப வாய்ப்பு உள்ள காலமாகும். உடம்பில் காய்ச்சல் உஷ்ணம் ஆகிய உபாதைகள் வந்துபோகும். கூட்டுத் தொழில் முயற்சிகளில் மிகுந்த கவனமுடன் செயற்படுவது நல்லது. விவசாயம் செய்வோர்களுக்கு விவசாயம் நன்கு பலிதமாகும். புதிய வீடு, நிலம் வாங்குவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சிகளில் வெற்றிகள் பெறுவீர்கள். தூரத்து உறவினர்களின் வரவால் எதிர்பாராத பொருட்செலவுகள் உண்டாகும். பழைய கடன்களை அடைத்துப் புதிய கடன் வாங்குவீர்கள்.

## கன்னி

கல்வித்துறையைச் சார்ந்தவர்கள் சற்று எச்சரிக்கையுடன் நடந்துகொள்வது நல்லது. வெளிநாடுகளில் இருந்து நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். விவசாயத்தில் புதிய முறைத் திட்டங்களின் மூலம் மாற்றம் செய்ய எண்ணுவீர்கள். வராத பணம் மற்றும் பொருட்கள் திரும்பக் கை வந்து சேரும். நண்பர்களின் உதவியால் புதிய தொழில் துவங்க போட்ட திட்டங்கள் தடையின்றி நிறைவேறும். குடும்பத்தில் காரணமற்ற மனக்கசப்புகள் வந்துபோகும். வங்கிகளின் உதவியால் எதிர்பார்த்திருந்த கடன் தொகைகள் தாமதமின்றி உடன் கிடைக்க வாய்ப்பு உள்ளது. குழந்தைகளுக்காக திடீர் மருத்துவச்செலவுகள் ஏற்படும். விபரீதமான எண்ணங்களை விட்டுச் செயற்பாட்டில் கவனம் செலுத்துங்கள்.

## துலாம்

பாதிப்புகளால் மருத்துவச் செலவுகள் வந்துசேரும். வடக்குத் திசையில் இருந்து சில நற்செய்திகள் வந்துசேரும். அரசியல்வாதிகள் மிகவும் எச்சரிக்கையுடன் பணி ஆற்றுதல் சிறந்ததாகும். குழந்தைகளால் பெயர், புகழ் ஏற்படலாம். உற்றார், உறவினர்களால் மனநிம்மதி இன்மையும், காரணமற்ற பொருட்செலவுகளும் உண்டாகும். அரசியல்வாதிகளால் சில எதிர்பார்க்காத ஆதாயங்கள் அடைவீர்கள். பொருளாதாரம் சுமாராகக் காணப்படும். வாரா கடன்கொடுத்து இருந்த பணம் திரும்பக் கைவந்துசேரும் காலமாகும். நீண்ட தூரப்பயணங்களின் மூலம் சந்திக்கவேண்டிய நபர்களை சந்திப்பதில் காலதாமதம் ஏற்படலாம்.

## விருச்சிகம்

உணவு உண்ணுதல் மற்றும் நித்திரை போன்றவற்றில் காலதாமதம் ஏற்படலாம். ஒரு சிலருக்குப் புதிய வீடு மாற்றம் உண்டாகும். தாய்வழிச் சொந்த பந்தங்களால் ஆதரவுகள் வந்துசேரும். நாட்டைச் சொத்து பிரயமான அரசு வழக்குகளில் சாதகமான நல்ல தீர்ப்புகளை எதிர்பார்க்கலாம். தொலைதூரப் பயணங்களில் மிகுந்த கவனமுடன் சென்று வருதல் நல்லது. நீண்டகாலமாக இருந்துவந்த பிணிகளுக்குக் புதிய மருத்துவர்களின் உதவியால் நோய்நீங்கும். செய்யாத குற்றங்களுக்காக அவப்பெயர்கள் வரக்கூடும் என்பதால் கவனம் தேவை. புதியதாகக் கடன் வாங்க செய்த முயற்சிகளில் வெற்றிபெறச் சற்றுக் காலதாமதம் ஆகலாம். பொதுவாக இது ஒரு சுமாரான நற்பலன் தரும் வாரமாகும்.

## தனுசு

செய்தொழிலில் புதிய கூட்டுமுயற்சிகளைத் தவிர்க்கவும். வெளிநாடு சென்றுவருதல் சம்பந்தமான முயற்சிகளில் நல்ல செய்திகள் வந்துசேரும். காதல் சம்பந்தமான விசயங்களில் மிகக் கவனம் தேவை. அடிமை ஆட்களால் பொருட்செலவுகளும் மனநிம்மதிக் குறைவும் ஏற்படலாம். தேவை இல்லாமல் பழைய பிரச்சினைகள மீண்டும் தலைதூக்க வாய்ப்பு உள்ளது. சம்பந்தம் இல்லாத நபர்களால் காணாமற்போன பொருட்கள் திரும்ப வீடு வந்துசேரும். புதிய தொழில்களை ஆரம்பம் செய்ய எண்ணுவீர்கள். உறவினர்களின் வருகையால் பொருள்வரவு உண்டாகும். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல செய்திகள் கிடைக்கும். குலதெய்வ வழிபாடு செய்துவருவதற்கான முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

## மகரம்

ஒரு சிலருக்கு வீடு மாற்றங்கள் ஏற்படலாம். காதல் சம்பந்தமான விசயங்களில் நல்ல தகவல்கள் வந்துசேரும். மிகுந்த பிரயாசையின் மேல் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளைச் சமாளித்துக்கொள்வீர்கள். வங்கிகளில் இருந்து எதிர்பார்த்து இருந்த பணம் கிடைக்கும். தென்திசையில் இருந்து எதிர்பாராத நல்ல செய்திகள் வந்துசேரும். பிள்ளைகளால் தனவரவும், மனநிம்மதியும் உண்டாகும். ரேஸ், லோட்டரி போன்ற விசயத்தில் பணம், பொருட்களை ஏமாறாமல் இருக்கவும். பிள்ளைகளின் சுபகாரிய நிகழ்ச்சிகளுக்கான முயற்சிகளில் நல்ல செய்திகளைக் கேட்பீர்கள். கண்களில் கவனம் தேவை. வீடுகளைப் புதுப்பித்துக் கட்டப்போட்ட திட்டங்களில் காலதாமதம் ஏற்படும்.

## கும்பம்

காதல் சம்பந்தமான விசயங்களில் மிக எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். புதிய வீடுநிலம் வாங்க எதிர்பார்த்திருந்த கடன் கேட்ட பணம் கை வந்துசேரும். பொருளாதார நெருக்கடியில் மனைவி அல்லது மனைவி வழிச்சொந்தபந்தங்களால் மாற்றம் உண்டாகி மனநிறைவை அடைவீர்கள். மனத்தைரியமுடன் எடுத்த காரியத்தைச் சிரத்தையுடன் செய்துமுடிப்பீர்கள். கணவன் – மனைவி சந்தோசமாக இருப்பர். வீடுகளில் மிகுந்த கவனமுடன் இருத்தல் நல்லது. திடீர் அதிர்ஷ்டமாகிய ரேஸ் லாட்டரி மூலம் பணம் கிடைக்கும் என்று கருதி ஏமாற்றம் அடையவேண்டாம். தாயின் உடல்நிலையில் இருந்துவந்த பாதிப்புகள் நீங்கி மருத்துவச் செலவுகள் குறையும்.

## மீனம்

விட்டுபபோன பழைய பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். மற்றவர்களின் விசயங்களில் அநாவசியமாகத் தலையிட்டு வீண் சிக்கலில் மாட்டிக்கொண்டு அவதிப்படாதீர்கள். உத்தியோகத் துறையினர்கள் மேலதிகாரிகளிடம் எச்சரிக்கையுடன் நடந்துகொள்ளவும். அரசியல்வாதிகளிடம் இருந்து எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். கணவன் – மனைவி உறவுகளில் பிரச்சினைகள் வந்துநீங்கும். உடம்பில் தலை மற்றும் முகம் ஆகிய உபாதைகள் வந்துதீரும். உற்றார், உறவினர்களின் வரவால் மனமகிழ்ச்சியும் நிம்மதியும் வந்துசேரும். வங்கிகளின் மூலமாக எதிர்பார்த்து இருந்த கடன்தொகைகள் கிடைக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கையால் கூட்டுதொழில் முயற்சிகளில் எதிர்பாராத இலாபம் அடையலாம்.

Regd. as a News paper at the G.P.O.(QD/86/NEWS/2012)






அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த இளம் விமானி ஒருவர் 70 நாட்களில் தனியாக உலகைச் சுற்றிவந்து சாதனை படைக்க திட்டமிட்டுள்ளார். ரையன் கெம்பல் என்ற 19 வயதான இளம் விமானி ஒருவரே இவ்வாறு சாதனை படைக்க இலக்கு வைத்துள்ளார். ஒற்றை என்ஜின் கொண்ட விமானத்தில் 70 நாட்களில் உலகின் 38 ஆயிரத்து 624 கி.மீ தூரத்தினை 5 கண்டங்களிலுள்ள 14 நாடுக-ளின் 28 தரிப்பிடங்களை கடந்து செல்லவதற்கு தயாராகியுள்ளார் கெம்பல் இதுகுறித்து கெம்பல் கூறுகையில், நான் எனது வணிக ரீதியான விமானிக்கான அனுமதிப் பத்திரத்தினை 18 வயதைக் கடந்த உடனே எடுத்தேன். இதனைத் தொடர்ந்து உலகைச் சுற்றி பறப்பது தொடர்பில் ஆராய்ந்தேன். ஏற்கெனவே மலேசியாவைச் சேர்ந்த ஜேம்ஸ் அன்டனி என்ற 21 வயதான இளம் விமானி ஒருவரும் கடந்த மார்ச் மாதமளவில் தனது பயணத்தை ஆரம்பித்து உலகைச் சுற்றி வந்தமை குறிப்பிடத் தக்கது.

அமெரிக்கா, பாலோ அல்டோவில் (கலிபோர்னியா) உள்ள லுசிலி பக்கார்ட் குழந்தைகள் வைத்தியசாலையின் குழந்தை நோயாளிகள், மற்றும் பார்வையாளர்களின் கண்களில் அண்மையில் தெரிந்தது, ஒரு ஆச்சரியமான காட்சி. உயரமான வைத்தியசாலை கட்டடத்தின் மேலே, பக்கவாட்டில் எல்லாம் தொங்கிக்கொண்டிருந்தார்கள். குழந்தைகளின் (நமக்கும்தான்) சூப்பர் ஹீரோக்கள், ஸ்பைடர்மேன், சூப்பர்மேன் போன்றவர்கள். அட, பொம்மை இல்லிங்க, நிஜமான ஆட்கள். அவர்கள் அங்கே என்ன செய்துகொண்டிருந்தார்கள்? வில்லன்களை பந்தாடிக் கொண்டிருந்தார்களா? அதுதான் கிடையாது. வைத்தியசாலை கண்ணாடிகளை சுத்தம் செய்துகொண்டிருந்தார்கள்! வைத்தியசாலையில் வைத்தியம் பார்ப்பதற்காக தங்கியிருந்த குழந்தைகளை, அவர்களது நோய்களை மறந்து சிறிதுநேரம் குதூகலமடைய வைத்த சம்பவம் அது. விஷயம் வேறொன்றுமில்லை. வைத்தியசாலை கட்டடத்தின் கண்ணாடி ஜன்னல்களை கிளீன் செய்யும் நிறுவனம், தமது பணியாளர்களுக்கு சூப்பர் ஹீரோக்களின் வேஷமிட்டு பணிக்கு அனுப்பிவைத்திருந்தது.








செல்வன்
## கஜேந்திரன் பிரஜீன்
23. 10. 2013

திரு திருமதி கஜேந்திரன் நிருத்திகா தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரஜீன் தனது 04 ஆவது பிறந்த தினத்தை 23.10.2013 அன்று தனது இல்லத்தில் கொண்டாடுகிறார் இவரை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்புமாகப் பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

